# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 450 பிலவ வருடம், தை மாதம் 27ஆம் திகதி புதன்கிழமை (09.02.2022) ஹிஜ்ரி - 1443, ரஜப் - 07, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30




இந்தியாவுக்கான விஜயமொன்றை மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலை புதுடில்லியில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

## திருத்த முன்மொழிவுகள் மூலமாக மாத்திரம் மனித உரிமை மீறல்கள் முடிவிற்கு வராது

### சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம்

இலங்கை அரசாங்கத்தின் பயங்கரவாத தடைச்சட்டத்தை திருத்துவதற்கான முன்மொழிவுகள் மூலம் அரசாங்கத்தின் மனித உரிமை துஷ்பிரயோகங்கள் முடிவிற்கு வராது என சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

மதிப்பிழந்த பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்தி இலங்கை அரசாங்கம் மோசமான துஷ்பிரயோகங்களில் ஈடுபடுகின்றது என தெரிவித்துள்ள சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம், 02 பக்கம்

# பேச்சு தோல்வி: வேலைநிறுத்தம் நீடிப்பு; நோயாளர்கள் அவதி!

### சுகாதாரத்துறை தொழிற்சங்கப் போராட்டத்தால் பெரும் பாதிப்பு

**யோ.தர்மராஜ்**

சுகாதார அமைச்சருக்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தை தோல்வியடைந்துள்ளமையால், தாங்கள் முன்னெடுத்துள்ள தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுப்பதாக சுகாதாரத்துறையின் தொழிற்சங்கங்கள் நேற்று அறிவித்துள்ளன.

இன்று மூன்றாவது நாளாகவும் தொடரும் வேலைநிறுத்தப் போராட்டத்தால் நாடளாவிய ரீதியில் வைத்தியசாலைகள் முடங்கிப்போயுள்ளன. இதனால், சிகிச்சைக்கு வரும் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது.

இதேவேளை, தங்களுக்கான தீர்வைக் கோரி நேற்று (08) சுகாதார அமைச்சின் முன்னால் பாரியதொரு ஆர்ப்பாட்டத்தை தொழிற்சங்கங்கள் முன்னெடுத்தன. இதனால், கொழும்பில் வாகன நெரிசலும் ஏற்பட்டிருந்தது.

சம்பள முரண்பாடு உள்ளிட்ட 07 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து 07ஆம் திகதி தொடக்கம் சுகாதாரத்துறையின் தொழிற்சங்கங்கள் தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். அதன்படி,... 02 பக்கம்



சம்பள முரண்பாடு உள்ளிட்ட ஏனைய கோரிக்கைகளை தீர்க்குமாறு கோரி சுகாதார அமைச்சுக்கு முன்பாக சுகாதாரத்துறையின் தொழிற்சங்கங்கள் சுகாதார விதிமுறைகளையும் மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (படம்:-பிரதீப் தம்பரகே)

## காங்கேசன்துறையில் இந்திய மீனவர் படகுகள் நேற்றும் ஏலம்



இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்தபோது கைப்பற்றப்பட்டு காங்கேசன்துறை கடற்படைத்தளத்தில் நங்கூரமிடப்பட்டிருந்த இந்திய மீனவர்களின் 5 படகுகள் நேற்று ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டன. 02 பக்கம்



14 பக்கம்

## மீனவர்களின் படகுகள் - கருவிகளை விடுவிக்க நடவடிக்கை தேவை


### பிரதமர் மோடிக்கு தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் கடிதம்




தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர், தனது பதவியை இராஜினாமா செய்துள்ளதாக தகவல்.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னான்டோவின் மகன் மேற்கொண்ட தாக்குதல் சம்பவத்திற்கு அதிகாரசபையின் வாகனமொன்றை அனுப்பியது தொடர்பில் கிடைத்த புகார்களையடுத்து இவரை பதவி விலக ஜனாதிபதி பணித்துள்ளதாக தகவல்.

### கமெண்ட் கந்தர்..



ஜீ.எல்.பீரிஸ் இந்தியாவில நல்ல லெக்சர் அடிச்சிருப்பார்... அவங்களுக்கும் இது புதுசா என்ன..?

## தேசிய பாடசாலைகளுக்கான அதிபர் நியமனத்தில் அழுத்தமா?

### கண்டறியுமாறு கல்வி அமைச்சின் செயலருக்கு ஜனாதிபதி பணிப்பு

தேசிய பாடசாலைகளுக்கான அதிபர்கள் நியமனத்தின்போது, விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகத் தேர்வு மற்றும் அதன் பின்னரான தேர்வுகளின்போது, அரச சேவை ஆணைக்குழுவுக்கோ அல்லது கல்விச்சேவை ஆணைக்குழுவுக்கோ, விண்ணப்பதாரிகளினால் ஏதேனும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு உள்ளனவா என்பது தொடர்பில் கண்டறிந்து, உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு, ஜனாதிபதியினால் கல்வியமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

## சுங்கத்தின் வசமுள்ள அத்தியாவசியப் பொருட்களை விடுவிக்க நடவடிக்கை

### ஜனாதிபதி கோட்டாபய விசேட அறிவுறுத்தல்




சுங்கத்தின் வசமுள்ள அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய கொள்கலன்களை உடனடியாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.

சந்தையில் உணவுப்பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படாதிருப்பதை இலக்காகக்கொண்டு ஜனாதிபதியினால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. 02 பக்கம்

## என்னை புலி எனக் கூறுவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை!

### நாடாளுமன்றத்தில் தெரிவித்தார் சாணக்கியன்!



சர்வதேசத்துடன் எவ்வாறு கதைப்பதென்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள் என கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர் கூறியதாவது, 02 பக்கம்

## அவசரத்துக்கு உதவும் இந்தியாவை ஒருநாளும் பகைத்துக்கொள்ளக் கூடா!

### திகாம்பரம் எம்.பி. நாடாளுமன்றில் தெரிவிப்பு



அவசரத்திற்கு நமக்கு உதவி புரியும் இந்தியாவை ஒருநாளும் பகைத்துக்கொள்ளக்கூடாது என தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

இந்தியாவைப் பகைத்துக்கொள்வதன் மூலம் இலங்கைக்கு நஷ்டம் ஏற்படும்... 02பக்கம்

## பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் விலை அதிகரிப்பை செய்யலாம்!

### எரிபொருள் தொடர்பில் ஊடக அமைச்சர் சூசகம்

**யோ.தர்மராஜ்**

இந்திய ஓயில் நிறுவனம் எரிபொருள் விலையை அதிகரித்துள்ளதால் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் சிறியதொரு விலை அதிகரிப்பை மேற்கொள்ளலாம் என ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பின்... 02 பக்கம்



## இலங்கை, இந்தியாவுக்கிடையே மீனவர்களால் பிரச்சினை எழாது

### புரிந்துணர்வுடன் செயற்படுவதாக கூறுகிறார் டலஸ்

**யோ.தர்மராஜ்**

இலங்கை - இந்திய மீனவர்கள் பிரச்சினையால் இரு நாடுகளுக்கிடையில் எவ்வித பிரச்சினையும் ஏற்படாது. தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினை தொடர்பாக இரு நாடுகளும் புரிந்துணர்வுடன் செயற்படுவதாக ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற,... 02 பக்கம்




உங்கள் மனதில் உள்ள வியாபார எண்ணத்தை நனவாக்கும் திட்டம் எம்மிடமிருந்து

BOC SME CIRCLE

இலங்கை வங்கியின் SME Circle மூலம்

- புதிய சந்தை வாய்ப்புகளை ஒழுங்கமைத்து ஆலோசனை மற்றும் நிதிச் சேவைகளை வழங்குதல்
- அறிவு மற்றும் அனுபவங்களை பகிர்ந்துகொள்ள வாய்ப்பளித்தல்
- நிதி தவிர்ந்த சேவைகளுக்கு அரச மற்றும் தனியார் நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

மேலதிக விபரங்களை அருகிலுள்ள இலங்கை வங்கிக் கிளையில் அல்லது SME Circle தொ.பே. 0112 204525 மூலம் பெற்றுக் கொள்ளவும்.

1975 BOC CALL CENTRE

www.boc.lk

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# சிவாஜிலிங்கம், ரவிகரன் உள்ளிட்ட நால்வர் மீதான வழக்கு விசாரணை ஜூலை 26க்கு ஒத்திவைப்பு!



(வன்னி செய்தியாளர்)

கடந்த 2018ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம், முல்லைத்தீவு - வட்டுவாகல் பகுதியில், மக்களுக்கு சொந்தமான 617 ஏக்கர் காணியை கடற்படைக்கு சுவீகரிக்க அளவீட்டுக்கு சென்ற பொழுது நில அளவீட்டாளர்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து, நில அளவைத் திணைக்கள உத்தியோகத்தர்களை கடமைசெய்யவிடாமல் தடுத்து, வாகனத்தை சேதப்படுத்திய குற்றச்சாட்டுகள் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று (08) முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

வட்டுவாகல் கோட்டாபய கடற்படை முகாமுக்கு முன்பாக மக்கள் போராட்டத்தில் கலந்துகொண்டதற்காக, வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், எம்.கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்ட நால்வருக்கு எதிராக இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இதன்போது குற்றச்சாட்டுக்குள்ளானவர்கள் சார்பாக மன்றில் பிரசன்னமாகியிருந்த அனைத்து சட்டத்தரணிகளும் ஆஜராகியிருந்தார்கள்.

சட்டத்தரணிகள் நீதவானிடம் விண்ணப்பித்தமைக்கு அமைவாக தொடர்ச்சியாக வழக்கு தாக்கல் செய்யப்படாமல் சட்டமா அதிபரிடம் இருந்து எதிர்பார்க்கப்படுவதாக சொல்லப்படுவதையடுத்து அழைப்பாணை அனுப்பப்பட்டால் மாத்திரம் நீதிமன்றத்திற்கு வருகைத் தரவேண்டும் என்று நீதிபதியால் சொல்லப்பட்டுள்ளதுடன், இந்த வழக்கு எதிர்வரும் ஜூலை மாதம் 26ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## காங்கேசன்துறையில் இந்திய...

கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளால் நேற்று நடத்தப்பட்ட ஏல விற்பனையில், 43 கொள்வனவாளர்கள் கலந்துகொண்டதாக கடற்றொழில் திணைக்களத்தின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஜெயராஜசிங்கம் சுதாகரன் தெரிவித்தார்.

அதற்கமைய, இந்திய படகொன்று 50ஆயிரம் ரூபா முதல் ஒரு இலட்சத்து 50ஆயிரம் ரூபா வரை ஏலத்தில் விடப்பட்டுள்ளது.

இதேவேளை, கிளிநொச்சி – கரைச்சி கடற்படைத்தளத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 08 இந்திய படகுகளை இன்றைய தினமும், தலைமன்னார் கடற்படை தளத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 09 படகுகளை நாளை 10ஆம் திகதியும் ஏலத்தில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புத்தளம் – கற்பிட்டி கடற்படைத்தளத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களின் 03 படகுகளை எதிர்வரும் 11ஆம் திகதி ஏல விற்பனை செய்யவுள்ளதாக கடற்றொழில் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதனிடையே, காரைநகர் கடற்படைத்தளத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 135 படகுகள் நேற்றுமுன்தினம் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை கடற்பரப்பிற்குள் கைப்பற்றப்பட்டு நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள படகுகளையும் சேதமடைந்த படகுகளின் பாகங்களையும் ஏலத்தில் விற்பனை செய்ய கடற்றொழில் திணைக்களம் தீர்மானித்ததற்கு அமைய ஏல விற்பனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை - இந்தியாவுக்கிடையே...

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பின்போது, இந்திய மீனவர்களின் படகுகள் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டமை குறித்து ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

மீனவர்கள் பிரச்சினை என்பது புதிய விடயமல்ல. ஒவ்வொரு நாளும் கடற்பரப்பில் இடம்பெறும் சம்பவமாகும். எனவே, இரு நாடுகளும் புரிந்துணர்வுடன் இருக்கின்றன. பூலோக அரசியல் முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளாது, கடற்பரப்பிலுள்ள சொத்துகளை உரிய மக்களிடம் ஒப்படைக்கும் வகையில் இரு நாடுகளும் பல்வேறு சந்தர்ப்பங்களில் திறம்பட செயற்பட்டுள்ளன. எனினும், கட்டுப்படுத்த முடியாத பிரச்சினைகள் ஏற்படும். சில நேரங்களில் ஆவேசமாகவும் செயற்படுவார்கள்.

ஆனால், இலங்கை கடற்படையும் இந்திய கடற்படையும் அமைதியை நிலைநாட்டும் வகையில் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன. மன்னார் தொடக்கம் யாழ்ப்பாணம் வரையான கடற்பரப்பில் மீன்வளம் தொடர்பான பிரச்சினைகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. குறுகிய காலத்துக்குள் அதிகமான மீனவர்கள் இப்பகுதியிலுள்ள மீன் வளத்திற்காக நாளுக்கு நாள் முரண்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

எனினும், கடற்றொழில் அமைச்சு, உரிய அதிகாரிகள் மற்றும் கடற்படையினரும் குறித்த கடற்பரப்புக்குள் எங்களுடைய மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றன. இந்தியாவும் இதேபோன்றே செயற்படுகின்றது. எனவே, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இரு நாடுகளுக்கிடையிலான நட்புறவு சீர்குலையாத வகையில் செயற்படுகின்றோம்.

சில நேரங்களில் இந்தியாவில் எங்களுடைய மீனவர்களின் படகுகள் பிடிக்கப்பட்டதும், அரச தலைவர்களின் கோரிக்கைகளுக்கு அமைய வழக்குகளின்றி விடுவிக்கப்பட்ட சந்தர்ப்பங்களும் இருக்கின்றன. எனவே, நட்பு நாடுகளான எங்களுக்கிடையிலான நட்புறவு சீர்குலையாத வகையில் செயற்படுகின்றோம். இந்த மீனவர் பிரச்சினையால் நாடுகளுக்கிடையில் பிரச்சினைகள் ஏற்படாது – என்றார்.

## சுங்கத்தின் வசமுள்ள...

இதற்காக நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷவின் தலைமையில் புதிய குழுவொன்றை நியமிக்கவும் ஜனாதிபதியினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு கூறியுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுமுன்தினம் (07) நடைபெற்ற கூட்டத்தின்போதே ஜனாதிபதி இந்த விடயங்களை தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பண்டிகைக் காலத்தின்போது உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை தட்டுப்பாடின்றி பொதுமக்கள் கொள்வனவு செய்வதற்கான உரிய திட்டமிடல்களை வகுக்குமாறு ஜனாதிபதியினால் துறைசார் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட சில அத்தியாவசியப் பொருட்களின் கொள்வனவுக்கு சந்தர்ப்பம் வழங்குமாறும் இதன்போது குறுகிய எண்ணங்களுடன் அதிகமான பொருட்களை இறக்குமதி செய்வதற்கோ அல்லது பொருட்களை பதுக்கிவைப்பதற்கோ இடமளிக்கக் கூடாதெனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை சந்தைக்கு விநியோகிப்பது தொடர்பில் முறையான பொறிமுறையொன்று உடனடியாக தயாரிக்கப்பட வேண்டுமென அறிவுறுத்திய ஜனாதிபதி, இது தொடர்பான ஒழுங்குபடுத்தல்கள் மற்றும் மேற்பார்வை பணிகள் புதிய குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

## பெற்றோலியக்...

போது, ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய ஒயில் நிறுவனமான ஐ.ஓ.சி. நிறுவனம் எரிபொருள் விலையை அதிகரித்துள்ளதால் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்க நேரிடலாம் என அதன் தலைவர் தெரிவித்துள்ளார். எனினும், இது தொடர்பாக அமைச்சரவையில் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படவில்லை.

ஆனால், இந்திய ஒயில் நிறுவனம் எரிபொருள் விலையை அதிகரித்துள்ளதால் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் சிறியதொரு விலை அதிகரிப்பை மேற்கொள்ளலாம் என்றே நினைக்கின்றேன் - என்றார்.

## அவசரத்துக்கு உதவும்...

என நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

இலங்கையில் எரிவாயு, பால்மா, அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவிவரும் அதேவேளை, பொருளாதார நெருக்கடியும் காணப்படுவதாக சுட்டிக்காட்டிய பழனி திகாம்பரம், நாடு இந்தளவு பாரிய சிக்கலில் இருக்கும்போது இந்தியா 900 மில்லியன் கடனுதவி வழங்கி கை கொடுத்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

அத்துடன், மேலும் 1 பில்லியன் அமெரிக்க டொலர் கடனாக வழங்குவதற்கான பேச்சுவார்த்தை இடம்பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால், இந்தியாவுடன் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க முயற்சிக்கும்போது சில தொழிற்சங்கங்கள் வீதிக்கு இறங்கி ஆர்ப்பாட்டம் நடத்துவதாகவும் சீனாவுடன் அவ்வாறு அபிவிருத்திகளை செய்ய முனையும்போது ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதில்லை எனவும் பழனி திகாம்பரம் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், இக்கட்டான சூழ்நிலையில் இலங்கைக்கு உதவி செய்யும் இந்தியாவுக்கும் இந்திய மக்களுக்கும் நன்றி தெரிவிப்பதாக பழனி திகாம்பரம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

மேலும், இந்த அரசாங்கம் பாரபட்சமாக நடந்துகொள்வதாகவும் அரச ஊழியர்களுக்கு 05ஆயிரம் ரூபா நிவாரணம் வழங்கி விட்டு பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு வெறும் 500 ரூபா பெறுமதியான கோதுமை மா வழங்கி ஏமாற்றியுள்ளதாகவும் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நுவரெலியா மாவட்டத்துக்கு நல்லாட்சி அரசாங்க காலத்தில் அமைச்சரவைப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு உருவாக்கப்பட்ட பிரதேச செயலகங்கள் செயல்படுத்தப்படாமல் உப செயலகங்களை ஆரம்பித்து தற்போது அதனையும் மூடியுள்ளதாகவும் ஆனால், அதே நேரத்தில் காலி மாவட்டத்துக்கு வழங்கப்பட்ட பிரதேச செயலகங்களை முழுமையாக திறந்து வைத்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மலையக மக்களும் இந்த நாட்டில் வாழுகின்ற ஏனைய மக்களை போன்றவர்களே எனவும் ஒரு நாட்டுக்குள் இவ்வாறு வேறுபாடு காட்ட வேண்டாம் எனவும் அரசாங்கத்திடம் பழனி திகாம்பரம் கோரிக்கை முன்வைத்தார்.

பெருந்தோட்ட மலையக மக்கள் இன்று அன்றாடம் உணவு தேவையை பூர்த்தி செய்வதற்கு கூட கஷ்டப்பட்டு வருவதாகவும் இதனை கருத்தில் கொண்டு அரசாங்கம் அவர்களுக்கு 05ஆயிரம் ரூபா நிவாரணம் வழங்க வேண்டும் எனவும் ஏற்கனவே ஆயிரம் ரூபா என்று அவர்கள் ஏமாற்றப்பட்டதுபோதும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் சபையில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

## திருத்த முன்மொழிவுகள்...

இந்தச் சட்டத்தை கைவிடுமாறு இலங்கை அரசாங்கத்துக்கு ஐரோப்பிய ஒன்றியம் அழுத்தங்களை கொடுக்கவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மதிப்பிழந்த பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்தி நீண்டகாலமாக தன்னிச்சையாக தடுத்துவைத்திருத்தல், சித்திரவதைகள் போன்றவற்றில் இலங்கை அரசாங்கம் ஈடுபடுகின்றது என மனித உரிமை கண்காணிப்பகம் குற்றம்சாட்டியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியமும் இலங்கையின் ஏனைய வர்த்தக சகாக்களும் நிதிவழங்குநர்களும் குறிப்பிட்ட கால எல்லைக்குள் இலங்கை அரசாங்கம் இந்த சட்டத்தை கைவிடவேண்டும் என அழுத்தங்களை கொடுக்கவேண்டும் என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

பரந்துபட்ட துஷ்பிரயோகங்களை முடிவுக்கு கொண்டுவருவதற்கு உதவாத உத்தேச திருத்தங்களை நிராகரிக்கவேண்டும் எனவும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதாக முன்னைய அரசாங்கங்கள் அளித்த வாக்குறுதிகளை மறந்துவிட்டு இலக்குவைக்கப்பட்ட பொதுமக்களின் அடிப்படை உரிமைகளை பறிப்பதற்காக இலங்கை அதிகாரிகள் தொடர்ந்தும் பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துகின்றனர் என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் தென்னாசியாவிற்கான இயக்குநர் மீனாக்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் முன்வைத்துள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் துஷ்பிரயோகங்களுக்கு முடிவு காண்பதை நோக்கமாகக் கொண்டவையல்ல. மாறாக, ஐரோப்பிய ஒன்றியத்தினதும் ஏனைய நாடுகளினதும் கவலைகளுக்கு தீர்வைகாண்பதற்கான அரசாங்கத்தின் முயற்சிபோல தோன்றுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷ அரசாங்கத்தின் மனித உரிமை துஷ்பிரயோக நடவடிக்கைகள், பயங்கரவாத தடைச்சட்டத்தை திருத்துவதற்கான முன்மொழிவுகள் என அது வெளியிட்டுள்ள தவறாக வழிநடத்தும் திருத்தங்கள் மூலம் முடிவுக்கு வராது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா ஆகியன இலங்கை அரசாங்கம் அதன் கடப்பாடுகளை ஏற்று மனித உரிமைகளை பாதுகாப்பதற்கான அர்த்தமுள்ள நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என அழுத்தம் கொடுக்கவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## பேச்சு தோல்வி;...

இலங்கை தாதியர் சங்கம், சுகாதார தொழில் வல்லுனர்கள் சங்கம், நிறைவுகாண் வைத்திய சேவை சங்கம் மற்றும் இடைநிலை வைத்தியர்கள் மற்றும் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் உள்ளிட்ட 18 தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் (07) தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளன.

இவர்களின் போராட்டத்தால் நாடளாவிய ரீதியிலுள்ள வைத்தியசாலைகள் எவ்வித செயற்பாடுகளுமின்றி முடங்கிப் போயுள்ளன. இதனால், சிகிச்சைகளுக்காக வருகைதந்த நோயாளிகள் பெரும் நெருக்கடிகளுக்கும் அசௌகரியங்களுக்கும் முகம் கொடுக்க நேரிட்டுள்ளது.

சிறு சிறு சிகிச்சைகளுக்காக திகதி ஒதுக்கப்பட்டிருந்ததால் பல்வேறு பகுதிகளிலிருந்தும் தேசிய வைத்தியசாலைக்கு வருகைதந்த நோயாளிகள் பெரும் பாதிப்புக்கு முகம் கொடுத்து, கண்ணீர் மல்க வேதனையை வெளியிட்டிருந்தனர்.

குறிப்பாக, வைத்தியர்கள், நோயாளிகளுக்கான மருந்துகளை எழுதிக் கொடுத்தாலும் அதனை வழங்குவதற்கு சுகாதார ஊழியர்களின்றி நோயாளிகள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். மேலும், பல்வேறு பகுதிகளிலிருந்து தேசிய வைத்தியசாலைகளுக்கு அதிக பணம் செலவு செய்து வருகைதந்த நோயாளிகள் வைத்தியசாலை வட்டாரங்களில் அழுதுபுலம்பியதையும் காண முடிந்தது.

கொழும்பு உள்ளிட்ட தேசிய வைத்தியசாலைகளில் சிகிச்சைகளுக்கு திகதி ஒதுக்கப்பட்டிருந்ததும் நோயாளிகளுக்கான சிகிச்சைகளை முன்னெடுக்க முடியாது பெரும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ளதாகவும் அறிய முடிந்தது.

சுகாதாரத்துறை தொழிற்சங்கங்களில் திடீர் வேலைநிறுத்தப் போராட்டம் அவர்களுக்கு இலகுவானதாக இருந்தாலும் பொது மக்களுக்கு அது பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அதேபோன்று, சுகாதார அமைச்சும் அவர்களின் கோரிக்கைகளுக்கு உரிய தீர்வை வழங்காது காலம் தாழ்த்திக் கொண்டிருப்பது பொது மக்களை மேலும் மேலும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

வைத்தியசாலை வந்த நோயாளிகள் பலரும் தங்களுடைய வேதனைகளை தெரிவித்ததுடன், தொழிற்சங்கங்கள் கோரும் கோரிக்கைகளை நிறைவேற்றி தங்களுக்கு பாதிப்பை குறைக்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை, வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு மத்தியில் தங்களுடைய கோரிக்கைகளுக்கு உரிய தீர்வை வழங்குமாறுகோரி குறித்த தொழிற்சங்கங்களால் நேற்று (08) சுகாதார அமைச்சுக்கு முன்னால் பாரிய ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தை அடுத்து, சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல மற்றும் குறித்த தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை இடம்பெற்றது. எனினும், அந்த பேச்சுவார்த்தையில் எவ்வித இணக்கப்பாடும் எட்டப்படாதமையினால் இரு நாட்களாக முன்னெடுத்துள்ள தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுப்பதாக தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

அதற்கமைய, இன்று (09) மூன்றாவது நாளாகவும் வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்கிறது. அதன்படி, 24 போதனா வைத்தியசாலைகள், 26 பொது வைத்தியசாலைகள், 46 பிரதான வைத்தியசாலைகள், 410 மாவட்ட வைத்தியசாலைகளில் இந்தப் போராட்டம் தொடர்கிறது.

## என்னை புலி எனக்...

“இன்று நாட்டில் சுகாதாரப் பணியாளர்களின் வேலை நிறுத்தம் நடைபெறும் அதேநேரம், பொது வைத்தியசாலைகளில் மருந்துத் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

நான் கொரோனாவினால் பாதிக்கப்பட்டு தனிமையில் இருந்தபோது முகநூல் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் சில காணொளிகளைப் பார்த்தேன்.

அதில் ஒன்றில், ஹிட்லரைப் போன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சி செய்ய வேண்டும் என்றுகூட ஒருசிலர் கூறியிருந்தனர். உண்மையில், இன்று ஹிட்லரைப் போன்றுதான் ஜனாதிபதி ஆட்சி நடத்தி வருகிறார். ஹிட்லர் தனது கடைசி காலத்தில் ஜேர்மனியர்கள் எத்தனைப் பேர் இறந்தாலும் பரவாயில்லை என்று தனது கொள்கையை செயற்படுத்தி வந்தார்.

அதேபோன்றுதான் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் செயற்பட்டு வருகிறார். ஜனாதிபதிக்கு நெருக்கமானவர்கள் ஒவ்வொருவராக வழக்குகளில் இருந்து விடுதலை செய்யப்படுகிறார்கள்.

இன்று நாட்டில் நீதிக்கு என்ன நடந்தது எனும் கேள்வி எழுந்துள்ளது. நாட்டில் இன்று பொருளாதார யுத்தம் ஒன்று இடம்பெற்று வருகிறது. இதில் ஜனாதிபதி உள்ளிட்ட பொதுஜன பெரமுனவினர் தோல்வியடைந்து வருகிறார்கள்.

எனவே, இனியும் மக்களை துன்பத்துக்கு உள்ளாக்க வேண்டாம் என அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்கிறோம். கொரோனாவினால் பல உயிர்களை நாம் இழந்துவிட்டோம். இந்த நிலையில், உணவின்றியும் மக்களின் உயிர்களை பறிக்க வேண்டாம் என நாம் இவர்களிடம் கேட்டுக் கொள்கிறோம்.

நாட்டின் பொருளாதாரத்தை முதலில் உயர்த்த நடவடிக்கை எடுக்கவும். பொருளாதாரத்தை முன்னேற்ற முடியாத தரப்பிடம் இந்த நாடு இன்று சிக்குண்டுள்ளது.

மலையக மக்களுக்கு குறைந்த விலையில் கோதுமை மாவை பெற்றுக் கொடுப்பதாக அரசாங்கம் கூறியது. ஆனால் அவர்களுக்கு கோதுமை மா கிடைக்கவில்லை என செய்திகளின் ஊடாக நாம் அவதானித்தோம். இவை தான் நாட்டில் நடக்கின்றன.

அத்தோடு, கறுப்புப் பணத்தைக் கொண்டு வடகொரியாவிடமிருந்து ஆயுதம் வாங்கியதாக நிதியமைச்சர் கூறியுள்ளார். சரியாயின் இந்த விவகாரம் தொடர்பாக உடனடியாக விசாரணையை ஆரம்பிக்க வேண்டும்.

வடகொரியா என்பது பொருளாதாரத் தடைக்குட்பட்ட நாடாகும். இந்த நாட்டிலிருந்து எவ்வாறு கருப்புப் பணத்தை கொடுத்து ஆயுதம் வாங்க முடியும்?

விவசாய அமைச்சரோ பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்க 40 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். இது யாருடைய பணம்?

விவசாயிகளுக்கு உரத்தை வழங்கியிருந்தால் அவர்கள் சீராக அவர்களின் வாழ்க்கையை கொண்டு சென்றிருப்பார்கள். அதனைவிடுத்து மக்களின் வரிப்பணத்தைக் கொண்டு இவ்வாறு செய்வது சரியா? இதுதொடர்பாக அரசாங்கம் சிந்திக்க வேண்டும்.

வடக்கில் இன்று மீனவர்களுக்கு பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு எதிராக அங்கு போராட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அண்மையில் இந்திய மீனவர்களின் படகு மோதுண்டு இலங்கையைச் சேர்ந்த 2 மீனவர்கள் உயிரிழந்தார்கள்.

ஆனால், கடற்றொழில் அமைச்சருக்கு இந்தப் பிரச்சினைக்கு தீர்வொன்றைக் காண முடியாமல் உள்ளது. யாழில் கடலில் இருந்து கண் பார்வைக்கு எட்டியத் தூரத்தில் இந்திய மீனவர்கள் மீன்பிடித்தும் அவர்களை கைது செய்ய முடியாதுள்ளது.

மேலும், உயர்தரப் பரீட்சை நடக்கும் நிலையில், நாட்டில் மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. குப்பி விளக்குகளை வைத்தே மாணவர்கள் பரீட்சைக்கு படித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதிலிருந்தே இந்த அரசாங்கம் தோல்வியடைந்து விட்டது என்பது உறுதியாகிவிட்டது. சுதந்திரத் தினத்தன்று, பல இலட்சம் ரூபாவை செலவழித்து அணிவகுப்புகளை அரசாங்கம் நடத்தியது.

இது தேவையற்ற ஒன்றாகும். இந்தப் பணத்தை ஓய்வூதியம் பெறுவோருக்கு பகிர்ந்தளித்திருக்கலாம். மக்களின் வரிப்பணத்தால் இவ்வாறு ஆடம்பரமான செயற்பாடுகள் மேற்கொள்வதை நிறுத்தியிருக்கலாம்.

அதேபோல், மாவட்ட அபிவிருத்திக் குழுக்களின் தலைவர்களாக 25 பேர் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கென தனியான வாகனங்கள், வாகனங்களுக்கான எரிப்பொருள் என அனைத்தும் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆனால், இவர்களோ தங்களுக்கு நெருக்கமானவர்களுக்கு மட்டுமே அபிவிருத்திசார் விடயங்களை கொடுக்கிறார்கள். விசேடமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வாறு தான் இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது. தங்களுக்கு நெருக்கமானவர்களை மகிழ்விக்கவே மாவட்ட அபிவிருத்திக் குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

இதுதான் இன்று நாட்டின் நிலைமை. அத்தோடு, நாம் சர்வதேசத்துடன் ஒன்றித்து பயணித்தால் மட்டுமே முன்னேற்றகரமான நாட்டை கட்டியெழுப்ப முடியும்.

சர்வதேசத்துடன் எவ்வாறு கதைப்பதென்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமிருந்து கற்றுக் கொள்ளுங்கள்.

நீதியமைச்சர் அலி சப்ரி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வதன் மூலம் சர்வதேசத்துடன் ஒன்றித்து செயற்பட முடியாது. இதன் ஊடாக ஐ.நாவுக்கு பதில் வழங்க முடியாது.

யாழிற்கு சென்று காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நஷ்டஈடாக ஒரு இலட்சம் ரூபா வழங்கப்படும் என்று நீதியமைச்சர் கூறியுள்ளார். 2009இல் இருந்து தாய்மார் போராடுவது இந்த ஒரு இலட்சம் ரூபாவுக்காக அல்ல என்பதை அரசாங்கத் தரப்பினர் புரிந்துக்கொள்ள வேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்ட தங்களின் உறவுகளுக்கு என்ன நேர்ந்தது என்று தான் அவர்கள் கோருகிறார்கள். இது அவர்களின் உரிமையாகும்.

இதற்கு பதில் வழங்காமல், யாழுக்குச் சென்று ஊடகவியலாளர் சந்திப்புகளை நடத்துவதால் சர்வதேச பிரச்சினைகளுக்கு தீர்வொன்று கிடைத்துவிடாது.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்குவதாயின், சரியான முறையில் அதனைக் கையாள வேண்டும். அதேநேரம், பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் கைது செய்யப்பட்ட எத்தனை தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் இன்னமும் சிறையில் வாடுகிறார்கள்?

ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவை விடுவித்தமையால் சர்வதேசத்தை ஏமாற்றிவிடலாம் என நினைக்கக்கூடாது. ஹிஜாஸ் ஹிஸ்புல்லா என்பவர் தனி ஒரு நபர். அவருக்காக பல சட்டத்தரணிகள் வாதாடினார்கள். இன்று அவர் விடுவிக்கப்பட்டுள்ளார். இதனையிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

ஆனால், ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவைப் போன்று எத்தனையோ பேர், இன்னமும் சிறைகளில் வாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் பெயர்கள் வெளியுலகுக்கு தெரியாது.

இந்நிலையில், இலங்கைத் தமிழரசுக் கட்சி பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிராக கையெழுத்து போராட்டமொன்றையும் ஆரம்பித்துள்ளது.

இந்தச் சட்டமானது எதிர்காலத்தில் நிச்சயமாக சிங்கள மக்களையும் பாதிக்கும். இதனை மக்கள் உணர்ந்துக் கொள்ள வேண்டும்.

இன்னும் 6 மாதங்களில் நாட்டில் பஞ்சம் ஏற்படும். இதற்கு எதிராக மக்கள் வீதியில் இறங்கிப் போராடும் நிலைமை வரும்போது அரசாங்கம் அவர்களுக்கு எதிராக பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நிச்சயமாக பிரயோகிக்கும்.

பயங்கரவாத் தடைச்சட்டத்துக்கு எதிராக சட்டத்தரணி அம்பிகா சற்குணராஜா கடிதமொன்றை எழுதியவுடன், வெளிவிவகார அமைச்சு அதற்கு எதிரான அறிக்கையொன்றை முன்வைத்துள்ளது.

முதலில் இந்த விமர்சனத்தை நேர்மறையாக கையாள வேண்டும். இவ்வாறு செயற்படுவதன் ஊடாக மட்டுமே சர்வதேசத்துடன் நட்புறவுடன் நாம் பயணிக்க முடியும்.

அரசாங்கம் சரியான பாதையில் பயணித்தால் நாமும் அதற்கு ஒத்துழைக்க தயாராகவே இருக்கிறோம்.

தொல்லியல் இடங்கள் எனும் போர்வையில் எமது காணிகள் அபகரிக்கப்படுகின்றன. நாம் காலம் காலமாக வழிபட்டுவந்த குருந்தூர் மலை அபகரிக்கப்பட்டுள்ளது. இவற்றுக்கு எதிராகத் தான் நாம் குரல் கொடுக்கிறோம்.

நாம் அரசாங்கத்திடம் கோருவது மிகவும் நியாயமான கோரிக்கையாகும். நாம் எந்தக் காரணம் கொண்டும் இன்னொரு நாட்டைக் கோரவில்லை. இலங்கையை பிரித்துத் தர வேண்டும் என்றும் கோரவில்லை.

மாறாக, பிரிக்கப்படாத ஒரு நாட்டுக்குள் எமது அடிப்படை உரிமைகளையே நாம் கோருகிறோம். இதனை அரசாங்கம் முதலில் புரிந்துக்கொள்ள வேண்டும்' எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இரா.சாணக்கியன் உரையாற்றிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் ஆளும் தரப்பிலிருந்த சில உறுப்பினர்கள் “புலி புலி” என கோசமிட்டிருந்தனர்.

இதற்கு பதில் வழங்கிய இரா.சாணக்கியன், “ என்னை புலி எனக் கூறுவதில் எனக்கு எந்த பிரச்சினையும் இல்லை” எனவும் குறிப்பிட்டிருந்தார்.

# இன்றைய ராசி பலன்

**09.02.2022 புதன்கிழமை தை 27**

**ஜோதிடர் நற்பவி**

**தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141**

**நட்சத்திரம்: கார்த்திகை** 10.02.2022 அதிகாலை 12.23 வரை

**பிராம்யம்** மாலை 5.52 - 10.02.2022 மாலை 6.50 வரை

11.08 வரை

**முற்கரணம்: பவம்** காலை 8.30 வரை

**பிற்கரணம்: பவம்** காலை 8.30 - இரவு 9.47 வரை

**யோகம்: பிராம்யம்** மாலை 5.52 வரை

**திதி: பூர்வ பட்ச நவமி** காலை 8.30 - 10.02.2022 காலை

**சுப நேரங்கள்**
காலை 6.29 - 7.57
மாலை 3.23 - 4.52

**அசுப நேரங்கள்**

**ராகு காலம்**
பிற்பகல் 12.25 - 1.54

**குளிகை காலம்**
காலை 10.56 - பி.ப. 12.25

**எமகண்ட காலம்**
காலை 7.58 - 9.27

**துர் முகூர்த்தம்**
பிற்பகல் 12.01- 12.49

லோகநாயகி ஸஹஷ்ர சீர்ஷ வதனா அன்னை பிரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி நற்பவி நற்பவி

**மேஷம்:** வேலைத்தளத்தில் சில எதிர்ப்புகள் உருவாகலாம். எதிர்கால கவலைகளும் உண்டாகலாம். தத்துவ விடயங்களில் ஆர்வம் உண்டாகலாம். உங்கள் சில கருத்துகளை பிறரிடம் கட்டாயப்படுத்தி உணரவைப்பதை தவிர்ப்பதும் நல்லது.

**ரிஷபம்:** புதிய தொழில் துவங்கும் திட்டங்கள் உருவாகலாம். சமுதாய மதிப்பு மேம்படும். உடல்நலம் சீராகும். இல்லத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கலாம். பணியில் மேலதிகாரியின் ஆதரவும் கிடைக்கப் பெறலாம்.

**மிதுனம்:** வாழ்க்கைத்துணையின் உடல்நலத்தில் சிறிய கவனம் தேவைப்படலாம். இன்று புதிய பணிகளை துவங்க சாதகமான நாளாக இல்லை. செலவுகள் அதிகரிக்கலாம். மனதில் சில கவலைகள் உண்டாகலாம்.

**கடகம்:** வேலை தேடுவோருக்கு சாதகமான நிலை உண்டாகலாம். உங்கள் மீதான எதிர்ப்புகள் செயல்படும் நிலை தோன்றலாம். வாழ்க்கைத்துணையுடன் எண்ணங்களை பகிர்தல் மன அமைதி தரும்.

**சிம்மம்:** நெடுநாட்களாக நீடித்த வாழ்க்கையின் சில அழுத்தங்கள் நீங்கலாம். வேலைத்தளங்களில் நண்பர்களின் ஆதரவு கிடைக்கலாம். உங்கள் அறிவுரையால் சிலர் பயன் பெறலாம். உங்களின் சில குறைகளை நீக்கும் முயற்சி தேவைப்படலாம்.

**கன்னி:** அன்புக்குரியவர்களின் செய்தியால் மன உறுதி மேம்படும். கட்டுப்பாடான கருத்தை தவிர்த்து நெகிழ்வான தன்மையாக இருப்பது நல்லது. தொழில் பயணம் சாதகமாக அமையலாம். வணிகத்தில் இன்று நல்ல நாளாக அமையலாம்.

**துலாம்:** தனிப்பட்ட செலவுகள் அதிகரிக்கலாம். ஆவணங்களை நன்கு படித்து, கவனத்துடன் கையொப்பம் இடுவது நல்லது. பயணங்களில் கவனம் தேவைப்படலாம். பிறருடன் சண்டைகள் தவிர்ப்பதும் நன்மை. இறைவணக்கம் தேவை.

**சந்திராஷ்டமம்: சித்திரை நட்சத்திரம் பாதம் 3/4க்கு அ.கா. 4.09 - மாலை 5.38 சுவாதி நட்சத்திரத்திற்கு மாலை 5.38 - 10.02.2022 இரவு 8.44 வரை**

**விருச்சிகம்:** வேலைத்தளத்தில் பணிகள் தாமதமின்றி நிறைவேறும். தம்பதியரிடையே உறவுகள் சிறப்புறும். அரசாங்க பணிகளில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கலாம். அறிவார்ந்த பணிகளில் சிறப்பு உண்டாகலாம்.

**தனுசு:** சட்டம் சம்பந்தப்பட்ட விடயங்களில் தடைகள் ஏற்படலாம். மாணவர்களுக்கு கல்வியில் அதிக ஈடுபாடு உண்டாகலாம். உடலில் வலி சம்பந்தப்பட்ட சிறிய பிரச்சினைகள் உண்டாகலாம். தொழிலில் இருந்த சில தடைகள் நீங்கப் பெறலாம்.

**மகரம்:** பிள்ளைகளின் பிரச்சினைகளுக்கு நேரம் ஒதுக்குவது நல்லது. பொறுப்புகளில் அழுத்தம் அதிகரிக்கலாம். உங்களுக்கு தவறான தகவல்களை வழங்குபவர்களிடமும் கவனம் தேவைப்படலாம். இன்று புதிய நிதி ஒதுக்கீடு செய்ய சாதகமான நாளாக இல்லை. இறைதியானம் நன்மை.

**கும்பம்:** உடல்நலத்தில் சிறிய கவனம் தேவைப்படலாம். புதிய நிதி திட்டங்கள் கிடைக்கலாம். வணிகத்தில் சாதாரண நிலை தோன்றலாம். சில விரும்பத்தகாத சம்பவங்களும் ஏற்படலாம். இறைவணக்கம் தேவை.

**மீனம்:** வேலைத்தளத்தில் மேலதிகாரியால் ஊக்கமும், சக பணியாளர்களிடம் ஒத்துழைப்பும் கிடைக்கலாம். புதிய தொழில் அல்லது வேலை துவங்கலாம். தம்பதியரிடையே உறவுகள் சிறப்புறும். ஆன்மீக தலங்களுக்கு செல்லும் நிலை ஏற்படலாம்.

# காலிக்கு வெள்ளிக் கரண்டி; நுவரெலியாவுக்கு தகரம்! இப்படி இனப்பாரபட்சம் காட்டிவிட்டு அம்பிகாவை சாடுவது ஏன்?

## அரசின் உதாசீனம் குறித்து மனோ எம்.பி. ஆவேசம்



“எங்கள் ஆட்சியின்போது, 29 ஒக்டோபர் 2019ஆம் வருடம் வெளியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானியின்படி, நுவரெலியா, காலி, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களின் பழைய பிரதேச செயலகங்கள் பிரிக்கப்பட்டோ, தரமுயர்த்தப்பட்டோ புதிய முழுமையான பிரதேச செயலகங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்பதே அரசாங்க முடிவு. இதன்படி புதிதாக வந்த இந்த ஆட்சியில், காலியின் பழைய உப பிரதேச செயலகங்கள், புதிய முழு பிரதேச செயலகங்களாக தரமுயர்த்தப்பட்டு கோலாகலமாக திறந்தும் வைக்கப்பட்டுள்ளன. ஆனால், அதே அரசாங்க வர்த்தமானியில் கூறப்பட்டுள்ள நுவரெலியா மாவட்டத்திற்கான ஐந்து மேலதிக முழு பிரதேச செயலகங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்பதை உதாசீனம் செய்துவிட்டு, இரண்டு உப பிரதேச செயலகங்களை மாத்திரம் பெயரளவில் இந்த அரசாங்கம் திறந்துவைத்துள்ளது” - இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

காலிக்கு வெள்ளிக் கரண்டி, நுவரெலியாவுக்கு தகரம். இது இன பாரபட்சமில்லையா? அப்புறம் ஏன் மனித உரிமை செயற்பாட்டாளர் அம்பிகா சற்குருநாதன் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு வழங்கிய சாட்சியத்தில் இந்நாட்டில் இன பாரபட்சம் இருப்பதாகக் கூறியது கண்டு வெளிநாட்டு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், இந்த வயதான வேளையில் பூமிக்கும், வானத்துக்குமாக குதிக்கிறார்? எனவும் மனோ எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுபற்றி எம்.பி. மனோ கணேசன் மேலும் கூறியுள்ளதாவது,

மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அம்பிகா ஒரு நீண்டகால மனித உரிமைப் போராளி. அவரை நான் 2005ஆம் வருடம் முதல் அறிவேன். கொழும்பில் வெள்ளை வேன் கடத்தல்களுக்கு எதிராக எமது மக்கள் கண்காணிப்புக் குழு ஆரம்பிக்கப்பட்ட காலம்முதல் அவர் எம்முடன் இணைந்து செயற்பட்டார். அவர் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு வழங்கிய சாட்சியத்தில் இந்த பிரதேச செயலகங்கள் பற்றி கூறினாரோ என எனக்குத் தெரியாது. ஆனால், இந்நாட்டு இன பாரபட்ச நடப்பில் இது ஒரு சிறிய உதாரணம்.

கடந்த 74 வருடகாலமாக இந்நாட்டில் தமிழ் மக்களுக்கு உரிமைப் பகிர்வு, அபிவிருத்தி இரண்டிலும் பித்தளை, தகர கரண்டிகள்தான் காட்டப்பட்டுள்ளன. அத்தனைக்கும் காலியை விட, நுவரெலியாவில்தான் இந்தப் பிரதேச செயலகப் பிரிவில் சனத்தொகை அதிகம். நீண்டகாலமாக அங்கே பிரதேச சபைகளே போதுமானளவு இல்லாமல் இருந்து அவற்றை நாமே பிரித்து பெற்றுக்கொடுத்தோம். இப்போது அவற்றுக்கு சமாந்திரமாக பிரதேச செயலகங்களை கேட்டால் கிடைக்கவில்லை. அமைச்சரவைத் தீர்மானம் எடுத்து வர்த்தமானி பிரகடனம் செய்தாலும் கிடைக்கவில்லை.

ஆனால், அதே வர்த்தமானியில் நுவரெலியாவுடன் சேர்ந்து அறிவிக்கப்பட்ட காலிக்கு கொடுக்கிறீர்கள். நுவரெலியாவில் தமிழர் பெரும்பான்மையாக வாழ்கிறார்கள். ஒருவேளை நுவரெலியாவில் தமிழர் வாழாவிட்டால் கிடைத்திருக்கும். அப்படியானால், இதுதானே இன பாரபட்சம்?

அரசாங்க உடன்பாடு ஏற்பட்டு வர்த்தமானியில் பிரகடனம் செய்யப்படுவதுதான், இதில் மிக முக்கிய அங்கம். அதை நாம் செய்து முடித்துவிட்டோம். ஆட்சி முன்கூட்டியே கலைக்கப்பட்டது. இன்றைய ஆட்சி நாம் விட்ட இடத்திலிருந்து முன்கொண்டு செல்லவேண்டும். காலிக்கு மாத்திரம் முன்கொண்டு செல்கிறார்கள். நுவரெலியாவுக்கு இல்லை. அப்படியானால், இந்நாட்டில் நாம் மாற்றாந்தாய் மக்கள். இதுதான் பாரபட்சம்.

வெள்ளிக் கரண்டி பெரும்பான்மை மக்களுக்கு என்றால், ஏனைய மக்களுக்கு பித்தளை கரண்டி. மலையக மக்களுக்கு பித்தளை கரண்டிகூட கிடைப்பதில்லை. வெறும் தகரம்தான். அதனால்தான் பிரதேச சபைகள் பெறுவதற்கே 1987இலிருந்து முப்பது வருடங்கள் நமது மக்கள், தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் பங்காளியாகும்வரை காத்திருந்தார்கள்.

இத்தகைய இன பாரபட்சங்களைதான் அம்பிகா சற்குருநாதன் எடுத்துக் கூறியுள்ளார் என்பதை படித்த பேராசிரியர் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸுக்கு எடுத்துக் கூறுகிறேன் எனத் தெரிவித்துள்ளார்.



இருநாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இந்தியாவுக்கு சென்றிருந்த வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்ஷங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவர், வெளியுறவுச் செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா உள்ளிட்டோருடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டார்.

# இந்திய தனியார் நிறுவன எண்ணெய் ஒப்பந்தம் நாடாளுமன்றில் முன்வைப்பு

ட்ரிங்கோ பெற்றோலியம் டெர்மினல்ஸ் (தனியார்) நிறுவன ஒப்பந்தம் வலுச்சக்தி அமைச்சர் உதய கம்மன்பில வினால் நாடாளுமன்றில் நேற்று முன்வைக் கப்பட்டது.

திருகோணமலை எண்ணெய்த்தாங்கி தொகுதியை அபிவிருத்தி செய்வதற்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் இணைந்து இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருந்தன.


இதற்கமைய இலங்கை பெற்றோலியக் கூட்டுதாபனத்தின் வியாபார நடவடிக்கை களுக்காக 24 தாங்கிகள் கையளிக்கப் பட்டுள்ளன.

லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்தினால் தற்போது பயன்படுத்தப்படும் 14 எண்ணெய்த் தாங்கிகள் குறித்த நிறுவனத்திற்கு தொடர்ந்தும் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன், ஏனைய 61 எண்ணெய்த் தாங்கிகளும் ட்ரிங்கோ பெற்றோலியம் டேர்மினல்ஸ் நிறுவனத்தினூடாக அபிவிருத்திசெய்யப்படவுள்ளன.

# ரூ. 12 இலட்சத்துக்கு புதிய கார் அறிமுகம்




மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கரவண்டி களுக்கு மாற்றாக, இலங்கையில் நான்கு சக்கர வாகனம் உருவாக் கப்பட்டுள்ளது.

இந்தக் கார் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டு விட்டதாகவும், விரைவில் உள்ளூர் சந்தையில் சுமார் 1.2 மில்லியன் ரூபா விலையில் அறிமுகப்படுத்தப் படும் என்றும் உள்ளூர் தயாரிப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தக் காரில் ஐந்து பேர் வரை பயணிக்க முடியும் என்பதுடன், 200 சிசி திறன் கொண்டதாகும். இதில் 814 கிலோ எடையைச் சுமந்து செல்லக்கூடிய இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

**ஓய்வுதியம் பெறுவோருக்கான விசேட கொடுப்பனவு**

# இம்மாத ஓய்வுதியத்துடன் இணைத்து வழங்க ஏற்பாடு

நிதி அமைச்சினால் அறிவிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கும், ஓய்வுதியம் பெறுவோருக்குமான ஐயாயிரம் ரூபா விசேட கொடுப்பனவு இம்மாத ஓய்வூதியத்துடன் சேர்க்கப்பட்டு வழங்கப்படவுள்ளது - என்று ஓய்வுதிய பணிப்பாளர் நாயகம் ஜகத் டி. டயஸ் அறிவித்துள்ளார்.

ஜனவரி மாதத்திற்கான விசேட கொடுப்பனவு நிலுவை பெப்ரவரி மாத ஓய்வுதியத்துடன் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள அவர், ஓய்வுதிய திணைக்கள உத்தியோகபூர்வ இணையத்தில் ஓய்வுதியம் பெறும் ஒவ்வொருவரினதும் ஓய்வூதிய பற்றுச்சீட்டில் தற்போது இதனை பார்வையிட முடியும் என்றார்.

புலம்பெயர் ஓய்வூதியம் பெறுவோர் தவிர, அனைத்து அரச ஓய்வுதியம் பெறுவோரும் இக்கொடுப்பனவை பெற உரித்துடையவர்களாவர்.

இந்தக் கொடுப்பனவின் மூலம் சுமார் ஆறு இலட்சம் ஓய்வூதியம் பெறுவோர் நன்மையடைவர் என்றும் ஓய்வுதிய பணிப்பாளர் நாயகம் ஜகத் டி. டயஸ் மேலும் தெரிவித்தார்.



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, பெப்ரவரி 09ஆம் திகதி, புதன்கிழமை

# தமிழர்களுக்கும் பொறுப்புள்ளது!

தமிழ் மக்களுக்கான அதிகாரப்பகிர்வு உட்பட இந்தியாவிற்கு கடந்த காலத்தில் வழங்கிய வாக்குறுதிகள் எதனையும் இலங்கை அரசாங்கம் நிறைவேற்றவில்லை. இந்திரா காந்திக்குப் பிறகு இலங்கை தொடர்பான இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை தோல்வியடைந்து, அதன் விளைவாக இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வருகிறது - என்று வடமாகாண முன்னாள் முதலமைச்சரும் யாழ். மாவட்ட எம்.பியுமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இரண்டு நாட்கள் பயணமாக திங்கட்கிழமை புதுடில்லி செல்வதற்கு சில மணிநேரங்களுக்கு முன்னர் வடமாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் 'ரைம்ஸ் ஒவ் இந்தியா' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

"இலங்கை வெளிவிவகார அமைச்சரின் விஜயமானது இந்தியாவை ஏமாற்றும் இலங்கை அரசாங்கத்தின் மற்றுமொரு நடவடிக்கையாகும். அதாவது, இந்தியாதான் தங்களின் நட்புநாடு என்பதுபோல் காட்டிக் கொள்வதற்கும், இலங்கைத் தமிழ் மக்களுடனான அதிகாரப்பகிர்வுப் பிரச்சினையில் இந்தியா தலையிடாது என்பதை உறுதிப்படுத்துவதற்காகவும், பொய்யான வாக்குறுதிகளை வழங்குவதற்கும், இலங்கையில் சீனாவின் விருப்பத்தைப் பின்பற்றும் கொழும்பின் நடவடிக்கைகளால் இந்தியா கோபப்படாமல் இருப்பதற்குமாகும். தமிழ் மக்களாகிய எமக்குரிய அதிகாரப் பகிர்வு உட்பட இந்தியாவிற்கு வழங்கப்பட்ட கடந்தகால வாக்குறுதிகள் எவற்றையும் இலங்கை அரசாங்கம் நிறைவேற்றவில்லை. இலங்கை தொடர்பான இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையும் இந்திரா காந்திக்குப் பிறகு தோல்வியடைந்துவிட்டது என்று கூறுவதையிட்டு நான் மிகவும் வருந்துகிறேன். இதனால், இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வருகிறது.

எவ்வாறாயினும், பிரதமர் நரேந்திர மோடி மீது எனக்கு நம்பிக்கையுள்ளது. இலங்கையில் தமிழ் மக்களின் நியாயபூர்வ உரிமைகள் மற்றும் தொடர்ச்சியான இருப்பை உறுதிப்படுத்த இந்தியப் பிரதமர் துணிச்சலான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று இலங்கைத் தமிழர்கள் எதிர்பார்க்கிறார்கள். ஏனெனில், எமது இருப்புக்கே ஆபத்து அதிகம். இந்தியா எமக்கு அதிகாரமளிக்க எவ்வளவு பாடுபடுகிறதோ, அது இந்தியாவின் பாதுகாப்புக்கு சிறந்தது. எனவே, எமது வெளிவிவகார அமைச்சரின் விஜயத்தின் மூலம் எனது ஒரே எதிர்பார்ப்பு, பேராசிரியர் பீரிஸின் பேச்சுத்திறனைக் கேட்டு இந்தியா ஏமாந்துவிடக்கூடாது என்பதுதான்.

நாங்கள் இந்தியாவிடம் அதிகம் கேட்கவில்லை. ஏனென்றால், 13ஆவது திருத்தம் எமது அரசியலமைப்பில் உள்ளதற்கு இந்தியாதான் காரணம். 1987இல் இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தத்தில் (13ஆவது திருத்தத்தை செயற்படுத்திய) தமிழர்களாகிய நாம் கையொப்பமிடவில்லை என்பதை மறந்துவிடாதீர்கள். எங்களின் சார்பாக இந்தியாதான் கையெழுத்திட்டது. இலங்கை அரசாங்கம் புதிய, மிகவும் மையப்படுத்தப்பட்ட (மத்தியில் குவிக்கப்பட்ட) அரசியலமைப்பையும் 13ஆவது திருத்தத்தை முற்றிலுமாக அகற்றவேண்டுமென்றும் விரும்புகிறது. எனவே, 13ஆவது திருத்தம் புதிய அரசியலமைப்பில் இணைக்கப்படுவதை எவ்வாறு உறுதிப்படுத்தப் போகிறது என்று கொழும்பிடம் கேட்பதற்கு இந்தியாவின் தரப்பில் தார்மீகக் கடப்பாடும், சட்டரீதியான உரிமையும் உள்ளது.

வடக்கு, கிழக்கு தமிழர்களைப் பொறுத்தவரையில் இவ்வாறான விடயங்களுக்கு ஆதரவில்லை. தேர்தலில் வெற்றிபெற்ற எமது கட்சிகள் அனைத்தும் பிரிந்த இலங்கையை அல்ல, ஒரே நாட்டையே கோருகின்றன. எந்தச் சூழ்நிலையிலும் நாம் தமிழர்களுக்கான தனிநாடு என்ற சமன்பாட்டிற்குள் திரும்பப்போவதில்லை. இலங்கை அரசாங்கம் குறிப்பிட முயல்வதுபோல் சமஷ்டி அலகு என்பது தனிநாடு என்று அர்த்தமல்ல. வடக்கு மற்றும் கிழக்கில் அதிகளவிலான அதிகாரப்பகிர்வையே நாங்கள் விரும்புகிறோம்.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இனப்படுகொலை குறித்து சுதந்திரமான சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று 2009ஆம் ஆண்டுமுதல் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையை தமிழ் மக்கள் வலியுறுத்தி வருகின்றனர். இந்தியாவினால் இந்த விடயத்தை நேரடியாக வலியுறுத்த முடியாவிட்டால் ஏனைய நாடுகளினூடாக சர்வதேச விசாரணையை நடத்துவதற்குரிய இராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை எதிர்வரும் மார்ச் மாதம் இலங்கை தொடர்பில் கடுமையான அறிக்கை ஒன்றை வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதை இந்தியா ஆதரிக்கவேண்டும்."

இவ்வாறு முக்கியமான சில விடயங்களை இரத்தினச்சுருக்கமாக முன்னாள் முதலமைச்சரும், தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான விக்னேஸ்வரன் இந்தியாவுக்கு சொல்லியிருக்கிறார். இவையெல்லாம் இந்தியாவுக்கு தெரியாதவையல்ல. ஆனாலும், மாகாண சபையினூடாக குறைந்தபட்சம் மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்கலாமென நம்பிய, சுமார் மூன்று தசாப்த காலத்திற்கும் மேற்பட்ட இலங்கை நீதித்துறையில் செயற்பட்ட ஒருவரான விக்னேஸ்வரன் இவற்றை சொல்வதில் ஆழம் இருக்கிறது.

இலங்கையானது தமிழருக்கான அரசியல் தீர்வு குறித்து முன்னுக்குப் பின் முரணான நிலைப்பாட்டை வெளியிட்டுவருவது ஒன்றும் புதிதல்ல. இந்தியாவுக்கு மட்டுமல்ல, முழு உலகத்திற்கும் இலங்கை இதே நாடகத்தையே பல வருடகாலமாக அரங்கேற்றி வருகிறது. வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், இந்த வருடத்தில் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்ட முதல் வெளிநாட்டு இராஜதந்திரியாவார். இலங்கையின் பொருளாதாரம் சீர்குலைந்து அது சீனாவின் கடன் வலையில் சிக்கியுள்ள நிலையில், இந்தியாவின் ஆதரவை பீரிஸ் நாடியிருக்கிறார்.

திருகோணமலை இந்திய எண்ணெய்க்குதங்களை தனக்கு வழங்கியிருப்பதால் இலங்கையுடன் புதுடில்லி கடுமையாக நடந்துகொள்ளும் வாய்ப்பில்லை. ஆனால், வடக்கில் சீனா கால்பதிப்பதை இந்தியா விரும்பவில்லை. அந்த எதிர்ப்பு கடுமையாக இருக்கிறது. ஆனாலும், முன்னாள் முதலமைச்சர் எதிர்பார்ப்பதுபோல் இந்தியா, இலங்கை மீது நடந்துகொள்ளாது. அதற்கு இராஜதந்திர, அரசியல் காரணங்கள் இருக்கின்றன.

இந்தியாவைப் பொறுத்தவரை இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கலாம். அதுவும் ஒரு வரையறைக்குள். அதற்கு முன்னர் இங்கே தமிழ் அரசியல்வாதிகள் அனைவரும் ஒரே குரலில், ஒரே நிலைப்பாட்டில் இருக்கவேண்டிய தேவையும் இருக்கிறது. ஒருவர் 13 ஆவது திருத்தம் வேண்டாமென்கிறார். இன்னுமொருவர் இந்தியப் பிரதமருக்கு அனுப்பும் கடிதத்தில் கையொப்பமிட மறுக்கிறார். மற்றுமொருவர் இப்படி அனுப்புவது இலங்கை அரசை பாதிக்காதா என்கிறார். இவ்வாறு, தமிழர்களுக்கு அரசியல் தீர்வைக் கோரும் தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்களே ஓரணியில் நிற்காமல், இலங்கைக்கு அழுத்தங்களை வழங்குமாறு புதுடில்லியைக் கேட்பது குறித்தும் சிந்திக்கவேண்டியுள்ளது.

இலங்கைக்கு இராஜதந்திர ரீதியில் அழுத்தங்களை இந்தியா வழங்குவதற்கான கள நிலைமையை ஏற்படுத்தும் பொறுப்பு தமிழர்களிடமும் இருக்கிறதென்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம். ஒரு கை தட்டி ஓசை வரப்போவதில்லை.

# சட்டமேதை ஜீ.ஜீ!



ஜீ. ஜீ.பொன்னம்பலம் எனப்படும் கணபதி காங்கேசர் பொன்னம்பலம் (G.G.Ponnambalam, நவம்பர் 8, 1901 - பெப்ரவரி 9, 1977) இலங்கைத் தமிழர்களின் நலன் கருதித் தொடக்கப்பட்ட அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் நிறுவுனராவார். இலங்கையின் அரசியலில் 1940களிலும் 1950களிலும் மிகவும் அறியப்பட்டிருந்த இவர், ஒரு திறமையான குற்றவியல் வழக்குரைஞராவார். ஜீ.ஜீ. என்ற பெயரில் பரவலாக அறியப்பட்டவர்.

பொன்னம்பலம், யாழ்ப்பாணத்தில் வடமராட்சிப் பகுதியிலுள்ள அல்வாய் என்னும் ஊரில் 1901ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8ஆம் திகதி பிறந்தார். இவரது தந்தையார் பெயர் கணபதி காங்கேசர். தபால் அதிபராகப் பணியாற்றினார். தாயார் மானிப்பாய்க்கு அண்மையிலுள்ள நவாலியைச் சேர்ந்தவர். பொன்னம்பலம், யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியிலும், கொழும்பு சென். ஜோசப் கல்லூரியிலும் கல்வி பயின்றார். பின்னர் உயர்கல்விக்காக இங்கிலாந்தின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் சென்று இயற்கை அறிவியல்துறையிலும், சட்டத்துறையிலும் பட்டம் பெற்றார். இலங்கை திரும்பிய அவர், கொழும்பில் சட்டத்தரணியாக தொழில் புரிந்தார். நல்ல வாதத் திறமைகொண்ட பொன்னம்பலம், சிறந்த குற்றவியல் சட்டத்தரணியாக புகழ்பெற்றார். 1948ஆம் ஆண்டில் அரச வழக்கறிஞர் (King's Counsel) என்னும் தகுதியைப் பெற்றார்.

இவருக்கு ஒரு மகனும், ஒரு மகளும் பிறந்தனர். இவரது மகன், குமார் என்று அழைக்கப்பட்ட காசிநாதர் காங்கேசர் பொன்னம்பலம், இலங்கைத் தமிழர் அரசியலில் குறிப்பிடத்தக்க பங்காற்றியவர். இவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

### அரசியல் வாழ்க்கை

1931ஆம் ஆண்டில் நடைபெற்ற இலங்கையின் முதலாவது அரசாங்க சபைக்கான தேர்தலில் மன்னார் - முல்லைத்தீவுத் தொகுதியில் பொன்னம்பலம் போட்டியிட்டாராயினும் வெற்றிபெற முடியவில்லை. ஆயினும், இது இவரின்



அரசியல் வாழ்வின் தொடக்கமாக அமைந்தது. 1934ஆம் ஆண்டில் இடம்பெற்ற தேர்தலில் பருத்தித்துறைத் தொகுதியில் போட்டியிட்ட பொன்னம்பலம், வெற்றிபெற்று அரசாங்க சபை உறுப்பினரானார். 1936ஆம் ஆண்டில் இரண்டாவது முறையாகவும் வெற்றிபெற்ற இவர், 1947ஆம் ஆண்டுவரை அரசாங்க சபை உறுப்பினராகத் தொடர்ந்தார்.

1944, ஓகஸ்ட் 29இல் இலங்கையில் தமிழர் நலன்களைப் பேணும் நோக்கில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் என்னும் அரசியல் கட்சியை இவர் தொடங்கினார். இக்காலகட்டத்தில் இலங்கையில் அரசியல் சீர்திருத்தங்களுக்காக பிரித்தானிய அரசினால் ஏற்படுத்தப்பட்ட சோல்பரி ஆணைக்குழு முன்னிலையில் சிறுபான்மையினரின் பாதுகாப்புக்காக சமபல பிரதிநிதித்துவ முறை ஏற்படுத்தப்பட வேண்டும் என வாதிட்டார். இதன்மூலம் பொதுவாக இலங்கை அரசியலிலும், சிறப்பாக இலங்கைத் தமிழர் அரசியலிலும் பெரும் செல்வாக்குப் பெற்றார். அக்காலத்தில் ஐம்பதுக்கு ஐம்பது என்று பரவலாக அறியப்பட்ட இந்த சமபல பிரதிநிதித்துவக் கொள்கையின் அடிப்படையில் 1947இல் இலங்கையின் முதலாவது நாடாளுமன்றத்துக்காக நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்ட தமிழ்க் காங்கிரஸ் பெருவெற்றி பெற்றது. இந்தத் தேர்தலில் நல்ல அரசியல் செல்வாக்கு கொண்டிருந்த அருணாசலம் மகாதேவாவை எதிர்த்து யாழ். தொகுதியில் போட்டியிட்ட பொன்னம்பலம் பெருமளவு வாக்குகளால் வெற்றிபெற்றார்.

1948 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சியால் அமைக்கப்பட்ட முதலாவது அரசாங்கத்தில் சேர்ந்து கொண்டதும், மலையகத் தமிழரின் குடியுரிமை பற்றிய பிரச்சினைகளில் பொன்னம்பலத்தின் அணுகுமுறைகளையும் ஏற்றுக்கொள்ளாத சில தலைவர்கள் காங்கிரஸிலிருந்து வெளியேறினர். இதனால் கட்சி பிளவு பட்டது. எனினும், பொன்னம்பலம் ஐக்கிய தேசியக் கட்சி அரசில் தொழில் மற்றும் தொழிற்றுறை ஆராய்ச்சி அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். சுமார் ஐந்தாண்டுகாலம் அமைச்சராகப் பதவியிலிருந்த இவர், பல பாரிய தொழிற்சாலைகளைத் தமிழர் பகுதிகளில் நிறுவினார்.

வடக்கில், காங்கேசன்துறையில் நிறுவப்பட்ட காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையும், வன்னிப் பகுதிக்கு அண்மையில் பரந்தனில் நிறுவப்பட்ட பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, வாழைச்சேனையில் ஏற்படுத்தப்பட்ட காகித ஆலை ஆகியவை இவற்றுள் முக்கியமானவை.

### செல்வாக்கு சரிவு

தமிழ்க் காங்கிரஸிலிருந்து பிரிந்த செல்வநாயகம், வன்னியசிங்கம், நாகநாதன் முதலிய தலைவர்கள் தமிழரசுக் கட்சி என அழைக்கப்பட்ட கூட்டாட்சிக் கட்சியை (Federal Party) உருவாக்கினர். தமிழ்க் காங்கிரஸை விடக்கூடிய தமிழ்த் தேசியவாதக் கட்சியாக அடையாளம் காணப்பட்ட இக்கட்சியின் செல்வாக்கு வளர்ந்தபோது, காங்கிரஸின் செல்வாக்கு குறையத் தொடங்கியது.

1952ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தமிழரசுக் கட்சியின் ஈ.எம்.வி.நாகநாதன், பொன்னம்பலத்தை எதிர்த்து யாழ். தொகுதியில் போட்டியிட்டார். இத்தேர்தலில் பொன்னம்பலம் வெற்றிபெற்றார். ஆயினும், வாக்கு வேறுபாடு குறைவடைந்ததுடன், நாடாளுமன்றத்தில் கட்சியின் உறுப்பினர் எண்ணிக்கையும் குறைந்தது. 1956ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல், காங்கிரஸுக்கு மேலும் பின்னடைவை ஏற்படுத்தியது. இத்தேர்தலில் இக்கட்சியின் சார்பில் பொன்னம்பலம் மட்டுமே மிகவும் குறைந்த பெரும்பான்மையுடன் வெற்றிபெற்றார்.

1960ஆம் ஆண்டில் இரண்டு தடவைகள் பொதுத் தேர்தல் நடைபெற்றது. மீண்டும் யாழ். தொகுதியில் போட்டியிட்ட பொன்னம்பலம், இரண்டு தடவைகள் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட சுயேச்சை வேட்பாளரான அல்பிரட் துரையப்பாவிடம் தோற்றார்.

1965ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் யாழ். தொகுதியில் மீண்டும் போட்டியிட்டு அவர் வெற்றிபெற்றார். இத்தேர்தலில் அவருடன் காங்கிரஸ் கட்சி சார்பில் இன்னும் இருவர் வெற்றிபெற்றனர்.

1970ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலிலும் பொன்னம்பலம் யாழ். தொகுதியிலேயே போட்டியிட்டார். இம்முறை இவரை எதிர்த்துப் போட்டியிட்ட தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த, முன்னாள் மாவட்ட நீதவான் ஆகிய சி.எக்ஸ்.மார்ட்டின் என்பவரிடம் தோல்வியடைந்தார். இத்தேர்தலில் மூன்றாமிடமே இவருக்குக் கிடைத்தது. இதுவே பொன்னம்பலம் போட்டியிட்ட இறுதித் தேர்தலாகவும் அமைந்தது.

### அரசியல் மாற்றங்கள்

1970ஆம் ஆண்டுத் தேர்தலுக்குப் பின்னர் இலங்கைத் தமிழர் அரசியலில் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. 1970இல் பதவிக்கு வந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசு, தமிழருக்கு எதிரான பல நடவடிக்கைகளை எடுத்தது. இதனால் தமிழ் இளைஞர்கள் மத்தியில் தீவிரவாதம் முளைவிடத் தொடங்கியது. தமிழர் மிதவாதக் கட்சிகளின் தலைவர்கள் இனியும் பிரிந்துநின்று எதுவும் செய்ய முடியாது என்பதை உணர்ந்தனர். தமிழரசு, காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் தலைவர்கள், மலையகத் தமிழர்களின் கட்சியான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸையும் சேர்த்துக்கொண்டு தமிழர் கூட்டணி என்னும் புதிய அமைப்பை உருவாக்கினர். இதன் தலைவர்களாக, எஸ்.ஜே.வி.செல்வநாயகம், ஜீ.ஜீ..பொன்னம்பலம், எஸ்.தொண்டமான் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். இதன்மூலம் அரசியலிலிருந்து ஓரளவுக்கு ஒதுங்கியிருந்த பொன்னம்பலம் மீண்டும் அரசியலுக்கு வந்தார். எனினும், தீவிர அரசியலில் இவர் நேரடியாக இறங்கவில்லை.

14ஆம் பக்கம் பார்க்க...

## இன்றைய நாளில்...

- 1640 – நீர்கொழும்பு நகரை ஒல்லாந்தர் கைப்பற்றினர்.
- 1895 – வில்லியம் மோர்கன் கைப்பந்தாட்டத்தைக் கண்டுபிடித்தார்.
- 1900 – இலங்கையிலும், இந்தியாவிலும் நிலநடுக்கம் உணரப்பட்டது.
- 1900 – டேவிஸ் கிண்ண டென்னிஸ் போட்டி ஆரம்பிக்கப்பட்டது.
- 1913 – எரிவெள்ளிக் கூட்டம் ஒன்று வட மற்றும் தென்னமெரிக்கப் பகுதிகளில் தென்பட்டது. இது பூமியின் சிறிய, குறுகிய வாழ்வுக் காலமுள்ள ஓர் இயற்கைத் துணைக்கோள் என வானியலாளர்களால் கூறப்பட்டது.
- 1959 – முதலாவது கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணையான ஆர்-7, சோவியத் ஒன்றியத்தில் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது.
- 1971 – நிலவில் தரையிறங்கிய 3ஆவது விண்கலமான அப்பல்லோ-14 மூன்று அமெரிக்கர்களுடன் வெற்றிகரமாக பூமிக்குத் திரும்பியது.
- 1975 – சோயூஸ்-17 விண்கலம் பூமிக்குத் திரும்பியது.
- 1986 – ஹேலி வால்வெள்ளி சூரியனுக்கு அண்மையில் எட்டரைக் கோடி கி.மீ. தூரத்தில் வந்தது.
- 1996 – கோப்பர்நீசியம் தனிமம் கண்டுபிடிக்கப்பட்டது.

## நக்கல் நமசிவாயம்

ஆளுங்கட்சியை விமர்சிக்கிற அளவுக்கு பிரதான எதிர்க்கட்சி இருக்குமெண்டு பார்த்தால்... அந்த எதிர்க்கட்சிக்குள்ளயும் பல எதிர்க்கட்சிகள்...!



# ஒரு கோடி ரூபா பெறுமதியான ஹெரோயினுடன் ‘குடு ரெஜினா’ தெஹிவளையில் கைது

## போதைப்பொருள் வலையமைப்பு தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணை

‘குடு ரெஜினா’ என்றழைக்கப்படும் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபடும் பெண் ஒருவர் தெஹிவளை பிரதேசத்தில் வைத்து நேற்று முன்தினம் (07) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், சந்தேகநபரிடமிருந்து 01 கிலோ 64 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த போதைப்பொருளின் பெறுமதி ஒரு கோடி ரூபாவுக்கும் அதிகமென விசேட அதிரடிப்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது, போதைப்பொருள் வியாபாரிகளின் மத்தியில் குடு ரெஜினா என்றழைக்கப்படும் 40 வயதுடைய பூசி என்பவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். கொஹுவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வைத்தியசாலை வீதி, களுபோவில, தெஹிவளை பிரதேசத்தில் வீடொன்றுக்கு அருகில் இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். வெளிநாட்டிலிருந்து போதைப்பொருள் வியாபார நடவடிக்கைகளை முன்னெடுத்துவரும் படோவிட்ட அசங்க என்பவரின் போதைப்பொருளையே இவர் எடுத்துச் சென்றுள்ளமை பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இவர், குறித்த போதைப்பொருள் வியாபார வலையமைப்பின் பிரதான சந்தேகநபராக கருதப்படும் இந்திக்க கமகே என்றழைக்கப்படும் ஆமி இந்திக்க என்பவரின் மனைவி என்பதும் விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆமி இந்திக்க என்பவர், 2001ஆம் ஆண்டு நிட்டம்புவ பிரதேசத்திலுள்ள வர்த்தக நிலையமொன்றில் ஒரு கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய பொருட்களை திருடிய சம்பவத்தின் பிரதான சந்தேகநபர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மேலும், அவருக்கு எதிராக பல்வேறு திருட்டுச் சம்பவங்கள் தொடர்பிலான வழக்குகள் விசாரிக்கப்பட்டு வருவதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## 08.02.2022 நாணய மாற்று வீதம்

இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 03 185 | 034 8520 |
| கனேடியன் டொலர் | 044 2572 | 050 12 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 2 8317 | 21 1 3 |
| யூரோ | 115 544 | 124 1340 |
| ஜப்பான் யென் | 0 60 2 | 0 6632 |
| சிங்கப்பூர் டொலர் | 036 10 0 | 040 8457 |
| ஸ்ரேலிங் பவுன் | 156 1121 | 164 5656 |
| சுவிஸ் பிரான்ங் | 102 3331 | 110 033 |
| ஐ.அ.டொலர் | 087 4 7 | 1 1 8881 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 425 7332 |
| குவைட் | குவைட் தினார் | 558 6741 |
| ஓமான் | ஓமான் றியால் | 414 6200 |
| கட்டார் | கட்டார் றியால் | 44 2638 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 42 8402 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 44 0 54 |

# ஆரியகுளத்தில் விபத்து; இளைஞர் உயிரிழப்பு

(யாழ். செய்தியாளர்)

யாழ்.ஆரியகுளம் பகுதியில் நேற்று (08) அதிகாலை இடம்பெற்ற விபத்தில் பருத்தித்துறை - அல்வாய் பகுதியை சேர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அல்வாய் தெற்கைச் சேர்ந்த இந்திரசிங்கம் நிருபன் (வயது 32) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

ஆரியகுளம் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த மினி பஸ் மீது மோட்டார் சைக்கிள் மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் அரச நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்து வரும் குறித்த இளைஞர் தனது பணி நிமிர்த்தம் நேற்று அதிகாலை சென்ற சமயம் குறித்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இவ் விபத்து சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# போதை மாத்திரைகளுடன் சுன்னாகத்தில் ஒருவர் கைது



(யாழ். செய்தியாளர்)

யாழ்ப்பாணம் - சுன்னாகம் மயிலனி பகுதியில் போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் ஏழாலை தெற்கு பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபரை மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



ஊடகவியலாளர் கே.பொன்னுத்துரை அகவை 70 எனும் நூல் வெளியீட்டு நிகழ்வு கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றபோது, நூலின் முதற் பிரதியை இலக்கிய புரவலர் ஹாசிம் உமருக்கு பிரபல வர்த்தகர் பீ.கே.நாகலிங்கம் வழங்கி வைப்பதையும் அருகில் விழாவுக்கு தலைமை வகித்த பேராசிரியர் வ.மகேஸ்வரன், சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட சாகித்திய ரத்னா பேராசிரியர் சபா.ஜெயராசா மற்றும் நூலாசிரியரும் காணப்படுகின்றனர்.

# டிலான் பெரேராவுக்கு கொரோனா தொற்று



பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான டிலான் பெரேராவுக்கு கொவிட் தொற்று நேற்று (08) உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நோய் அறிகுறிகள் தென்பட்டதால் முன்னெடுக்கப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையிலேயே அவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இதுவரை நாடாளுமன்ற உறுப்பினர்கள் 50 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியமை குறிப்பிடத்தக்கது.



நீதி அமைச்சர் அலி சப்ரிக்கும் அமெரிக்க தூதரக தலைமை அதிகாரி மார்ட்டின் கெலி, சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவரகத்தின் பணிப்பாளர் ரீட் ஏஷ்லிமன், நிர்வாகம் மற்றும் பாதிக்கப்படும் மக்களுக்கான அலுவலகத்தின் பணிப்பாளர் கெவின் டீன் உள்ளிட்ட குழுவினருக்கும் இடையிலான சந்திப்பு அமைச்சின் அலுவலகத்தில் நேற்று (08) இடம்பெற்றது.

# நிர்வாகத்தின் கெடுபிடிகளுக்கு எதிராக யூரி தொழிலாளர்கள் போராட்டம்

(எம். செல்வராஜா, என். மலர்வேந்தன்)

பலாங்கொடை பிளாண்டேஷனுக்குட்பட்ட பசறை யூரி காரியாலய பிரிவின் தோட்டத் தொழிலாளர்கள் நேற்று(08) பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

தோட்ட நிர்வாகத்தால் வாரமொன்றுக்கு மூன்று நாட்களே வேலை தருவதாகவும் ஏனைய நாட்களில் ஒரு கிலோ கிராம் கொழுந்துக்கு 40 ரூபா வீதம் தருவதாகவும் தொழிலாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். மேலும், ஒரு நாள் சம்பளம் ஆயிரம் ரூபா பெற வேண்டுமேயானால், 18 கிலோ தேயிலை கொழுந்து பறித்தாக வேண்டுமென்று நிர்வாகத்தால் அழுத்தம் கொடுக்கப்படுவதாகவும் குறிப்பிட்டனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்றைய தினம் பணிப்பகிஷ்கரிப்பும் ஆர்ப்பாட்டமும் தொழிலாளர்களால் மேற்கொள்ளப்பட்டது.



# பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைதுசெய்யப்பட்ட 8 பேருக்கு வவுனியா நீதிமன்றம் பிணை

(வவுனியா நிருபர்)

குண்டுகளை தம்வசம் வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தில் 2019ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்த 8 பேருக்கு வவுனியா நீதிமன்றம் நேற்று முன்தினம் (07) பிணை வழங்கியுள்ளது.

2019ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 05ஆம் திகதி புளியங்குளம் பொலிஸாரால் கிளைமோர் குண்டை வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தின்பேரில் 03 பெண்கள் மற்றும் 05 ஆண்கள் கைதுசெய்யப்பட்டு பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர்.

இதில் 09ஆவது சந்தேகநபரான ஆனந்தராஜா என்பவர் கைதுசெய்யப்படாத நிலையில் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. குறித்த 08 பேருக்கும் ஆதரவாக சி.எச்.ஆர்.டி. நிறுவனம் சட்ட உதவியை வழங்கியிருந்தது. இந்நிறுவனத்தின் ஊடாக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கலும் செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட ஆலோசனை சபைக்கு குறித்த விடயம் விசாரணைக்காக பாரப்படுத்தப்பட்டு விசாரணை நடத்தப்பட்ட நிலையில், பாதுகாப்பு அமைச்சு மற்றும் சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கு குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இதன் பலனாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் 7:1 பிரிவின் பிரகாரம் சட்ட மா அதிபரினால் பிணையில் விடுவிப்பதற்கான சம்மத கடிதம் நீதிமன்றத்துக்கு அனுப்பப்பட்டிருந்தது.

இதனையடுத்து தடுத்துவைக்கப்பட்டவர்கள் சார்பில் வவுனியா நீதிமன்றத்தில் சட்டத்தரணி செ.கேதீஸ்வரன் ஆஜராகி குறித்த கடிதம் தொடர்பில் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியதன் பிரகாரம் 08 பேரும் பதில் நீதிபதி க.தயாபரனால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

# ஓய்வூதியம் பெறுவோருக்கான விசேட கொடுப்பனவு இம்மாத ஓய்வூதியத்துடன் இணைத்து வழங்க ஏற்பாடு

நிதி அமைச்சினால் அறிவிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கும், ஓய்வூதியம் பெறுவோருக்குமான 05ஆயிரம் ரூபா விசேட கொடுப்பனவு இம்மாத ஓய்வூதியத்துடன் சேர்க்கப்பட்டு வழங்கப்படவுள்ளது.

ஜனவரி மாதத்திற்கான விசேட கொடுப்பனவு நிலுவை பெப்ரவரி மாத ஓய்வூதியத்துடன் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள அவர், ஓய்வூதிய திணைக்கள உத்தியோகபூர்வ இணையத்தில் ஓய்வூதியம் பெறும் ஒவ்வொருவரினதும் ஓய்வூதிய பற்றுச்சீட்டில் தற்போது இதனை பார்வையிட முடியும் என்று ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம் ஜகத் டி.டயஸ் அறிவித்துள்ளார்.

புலம்பெயர் ஓய்வூதியம் பெறுவோர் தவிர அனைத்து அரச ஓய்வூதியம் பெறுவோரும் இக் கொடுப்பனவை பெற உரித்துடையவர்களாவர்.

இந்த கொடுப்பனவின் மூலம் சுமார் ஆறு இலட்சம் ஓய்வூதியம் பெறுவோர் நன்மை அடைவர் என்றும் ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம் ஜகத் டி.டயஸ் மேலும் தெரிவித்தார்.




சம்பள முரண்பாட்டை தீர்த்தல் உள்ளிட்ட ஏழு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து சுகாதார உத்தியோகத்தர்கள் சம்மேளனத்தினால் நேற்று (08) ஏற்பாடுசெய்யப்பட்ட எதிர்ப்புப் பேரணி கொழும்பு விகாரமாதேவி பூங்காவுக்கருகில் ஆரம்பமாகி சுகாதார அமைச்சு வரை சென்றது. இதன்போது பெரும் எண்ணிக்கையிலான சுகாதார ஊழியர்கள் கலந்துகொண்டிருந்தனர். (படப்பிடிப்பு: பிரதீப் தம்பரகே)

# தொழிலாளர்களின் நலன்கருதி ஹப்புத்தளையில் தொழில் நீதிமன்றமொன்றை அமைக்க கோரிக்கை!

## அமைச்சர் அலி சப்ரிக்கு அரவிந்தகுமார் எம்.பி. கடிதம்



(பதுளை நிருபர்)

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நன்மை கருதி, பதுளை - ஹப்புத்தளையில் தொழில் நீதிமன்றமொன்றினை ஏற்படுத்துவதுடன், மடுல்சீமை, லுணுகலை, கந்தகெட்டிய, எல்ல, பள்ளக்கட்டுவை போன்ற பிரதேசங்களில் நடமாடும் சுற்று தொழில் நீதிமன்றங்களை இயங்கவைக்கவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமார், நீதி அமைச்சின் பிரதம செயலாளருக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றிலேயே, இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஊவா பரணகம பிரதேச இணைப்புக் குழுத் தலைவருமான அரவிந்தகுமார், நீதியமைச்சர் அலி சப்ரியிடம் இக்கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பதுளை மாவட்டத்தில் பதுளை, பண்டாரவளை ஆகிய இடங்களில் தொழில் நீதிமன்றங்கள் இருக்கின்றன. இந்நீதிமன்றங்களில் தொழில் வழக்குக் கோவைகள் நிறைந்து வழிகின்றன. இதனால், குறித்த வழக்குகளை நிறைவு செய்வதற்கு பெரும் கால தாமதங்கள் ஏற்படுகின்றன. இதனால் வழக்கு தொடுனர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளனர்.

ஆகையினால், இக்காலதாமதங்களை தவிர்க்குமுகமாக ஹப்புத்தளையில் தொழில் நீதிமன்றமொன்று ஏற்படுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும். அத்துடன், பதுளை மாவட்டத்தின் தொலை தூரங்களிலுள்ள மடுல்சீமை, லுணுகலை, கந்தகெட்டிய, எல்ல, பள்ளகட்டுவை ஆகிய இடங்களில், நடமாடும் சுற்று தொழில் நீதிமன்றங்களை இயங்க வைக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களுக்கு உபகரணப் பொருட்கள் வழங்கல்!







(இரத்தினபுரி நிருபர்)

'கப்ருக ரணவிரு பிரணாமய' என்ற பெயரில் அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களுக்கு தென்னை கன்றுகள் மற்றும் உபகரணப் பொருட்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் (07) சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் சப்ரகமுவ மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

தென்னை அபிவிருத்தி சபை மற்றும் ரணவிரு சேவை அதிகார சபை என்பன இணைந்து ஏற்பாடு செய்திருந்த மேற்படி நிகழ்வில், இராணுவ வீரர்களுக்கு தென்னைமரக் கன்றுகள் மற்றும் அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களுக்கு தேவையான உபகரணப் பொருட்கள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

மலையக
செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# மலையகத்துக்கான பிரதேச செயலகங்கள் அதிகரிப்பு; மாவட்ட அபிவிருத்தி குழுக்கூட்டத்தில் உறுதி

## உரிய நடவடிக்கை எடுப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்ததாக இராதா எம்.பி. தெரிவிப்பு

(நுவரெலியா நிருபர்)

'ஒரே நாடு ஒரே சட்டம்' என்றால் பிரதேச செயலகங்களை அதிகரிப்பதில் காலிக்கும் மலையகத்துக்கும் ஏன் வெவ்வேறு சட்டங்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் வே.இராதாகிருஸ்ணன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதேவேளை, பிரதேச செயலகங்களை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டம் நேற்றுமுன்தினம் (07) மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு ஊடகவியலாளர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. கூட்டத்தில் கலந்து கொண்டு வெளியேறிய இராதாகிருஸ்ணன் எம்.பியிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதேச செயலகங்களை அதிகரிப்பது தொடர்பாக எற்கனவே வெளியிடப்பட்ட வர்த்தமானியை மலையகப் பகுதிகளில் நடைமுறைப்படுத்துவதற்கு எந்தவிதமான நடவடிக்கையையும் இந்த அரசாங்கம் எடுக்கவில்லை.

ஆனால், பெரும்பான்மை மக்கள் வாழுகின்ற காலியில் அதனை உடனடியாக நடைமுறைப்படுத்தி அதற்கு தேவையான வசதிகளையும் செய்து கொடுத்துள்ள அரசாங்கம், மலையக மக்களை மறந்து செயற்படுவதை காண முடிகின்றது.

நல்லாட்சி அரசாங்கத்தில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் மனோகணேசன், திகாம்பரம், வேலுகுமார் மற்றும் என்னுடைய ஒத்துழைப்புடனும் பிரதேச செயலகங்களை அதிகரிக்க வேண்டும் என்ற சட்டம் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது. இதற்கு யாரும் தனியாக உரிமை கோரவோ அல்லது



நான் தான் செய்தேன் என்று சொல்லவோ முடியாது.

நாங்கள் ஒற்றுமையாகதமிழ் முற்போக்கு கூட்டணியாக செயற்பட்டதன் காரணமாகவே இந்த வெற்றியை எங்களால் பெற்றுக்கொள்ள முடிந்தது. எனவே, இது ஒரு கூட்டுப் பொறுப்பாக செயற்பட்டதன் காரணமாகவே சாத்தியமானது. வெறுமனே நானோ அல்லது வேறு யாருமோ நினைத்திருந்தால் இதனை சாதித்திருக்க முடியாது. இதனை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் நான் இது தொடர்பாக உரையாற்றியபோது, மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.பி. திசாநாயக்க அதனை ஏற்றுக் கொண்டதுடன் அதனை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

நாங்கள் இந்த விடயம் தொடர்பாக எல்லா இடங்களிலும் குரல் கொடுத்து வருகின்றோம். மலையகத்தில் கையெழுத்து திரட்டி சாதித்த விடயம் எதுவும் இல்லை. எனவே இதனை நாடாளுமன்றத்திலும் மாவட்ட அபிவிருத்திக் குழுவிலும் அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் குரல் கொடுப்பதன் மூலமே சாதிக்க முடியும்.

அடுத்த நாடாளுமன்ற அமர்வுகளிலும் இதற்காக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் உட்பட அனைவரும் அழுத்தம் கொடுப்போம். பிரதேச செயலகங்கள் அதிகரிப்பதன் மூலமாக எங்களுடைய அபிவிருத்தி அதிகரிக்கும். கிராம சேவகர் பிரிவு அதிகரிக்கப்பட்டால் எங்களுக்கான நிதி அதிகரிக்கும். இவ்வாறு பல நன்மைகளை எங்களுடைய மக்கள் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால், இந்த அரசாங்கம் எங்களுடைய அபிவிருத்தியிலும் முன்னேற்றத்திலும் அக்கறையுடன் செயற்படவில்லை என்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது.

மேலும், அரசாங்கத்தில் இருக்கின்ற மலையக பிரதிநிதிகளும் இது தொடர்பாக அழுத்தம் கொடுக்க வேண்டும். அதனைவிடுத்து, உப பிரதேச செயலகங்களை திறந்து வைப்பதை நிறுத்திவிட்டு வர்த்தமானியில் குறிப்பிட்டுள்ளதுபோல பிரதேச செயலகங்களை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காலி மாவட்டத்தில் 10 இலட்சத்து 63 ஆயிரத்து 334 பேர் இருக்கின்றபோது, அங்கே 22 செயலகப் பிரிவு இருக்கின்றது. வெலிவிடிய பிரதேச செயலகப் பிரிவில் மக்கள் தொகை 29 ஆயிரத்து 347. கோணபீனுவல பிரதேச செயலகத்தில் மக்கள் தொகை 21 ஆயிரத்து 755. ஆனால், நுவரெலியா மாவட்டத்தில் 07 இலட்சத்து 68 ஆயிரத்துக்கு அதிகமான மக்கள் தொகையை கொண்டிருந்தாலும் எங்களுக்கு 05 பிரதேச செயலகங்களே இருக்கின்றன.

அதிலும், நுவரெலியா பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மக்கள் தொகை 02இலட்சத்து 20ஆயிரத்துக்கும் அதிகமானது. எனவே, இது எங்களுடைய மாவட்டத்துக்கு இழைக்கப்படுகின்ற அநீதியாகும். இதற்காக மாவட்டத்தின் அனைவரும் அதாவது சிறுபான்மை மக்கள் பெரும்பான்மை மக்கள் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும். இதனை வெறுமனே சிறுபான்மை தமிழர்களின் பிரச்சினையாக பார்க்காமல் பொதுவான ஒரு விடயமாக கருதி அரசாங்கம் செயற்பட வேண்டும் - என்றார்.

# மாத்தளை - சர்வதேச ஹொக்கி மைதான புனரமைப்புக்கு 20 மில்லியன் ரூபா ஒதுக்கீடு





(மாத்தளை நிருபர்)

நீண்ட நாட்களாக அபிவிருத்தி செய்யப்படாமல் ஓரங்கட்டப்பட்டிருந்த மாத்தளை நந்திமித்ர ஏக்கநாயக்க சர்வதேச ஹொக்கி மைதானத்தை புனர்நிர்மாணம் செய்ய 20 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தலைநகர் கொழும்புக்கு வெளியே நிர்மாணிக்கப்பட்ட ஒரே ஒரு சர்வதேச ஹொக்கி மைதானம் மாத்தளை நந்திமித்ர ஏக்கநாயக்க ஹொக்கி மைதானம் என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கை விளையாட்டு அமைச்சினால் மேற்படி மைதானத்துக்கு நந்திமித்ர ஏக்கநாயக்க சர்வதேச ஹொக்கி மைதானமாக பெயர் சூட்டப்பட்டுள்ளது.

மேற்படி மைதானத்தை நாடாளுமன்ற உறுப்பினர்களான நாலக்க கோட்டேகொட, ரோஹண திசாநாயக்க, விளையாட்டுதுறை அமைச்சு அதிகாரிகள், இராணுவத்தின் விளையாட்டுப் பிரிவினர் ஆகியோர் பார்வையிட்டனர்.

# பஸ்ஸிலிருந்து தவறிவிழுந்த கர்ப்பிணித் தாய்

(கினிகத்தேனை நிருபர்)

நாவலப்பிட்டியிலிருந்து ஹட்டனை நோக்கிச் சென்ற தனியார் பஸ்ஸில் பயணித்த கர்ப்பிணித் தாய் தவறி விழுந்த நிலையில், வட்டவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நாவலப்பிட்டியிலிருந்து வந்த குறித்த பஸ் வட்டவளை பஸ் தரிப்பிடத்தில் பயணிகள் இறங்கும்போதே குறித்த கர்ப்பிணித்தாய் தவறி விழுந்துள்ளார்.

அவர் அருகிலிருந்த பொது மக்களின் உதவியுடன் வட்டவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான விசாரணைகளை வட்டவளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



**இரத்தினபுரி ஏரத்ன பிரதேசத்தில் லஹிரு தில்ஷான் மூலம் தயாரிக்கப்பட்ட கித்துல் பட்டர் மற்றும் கித்துல் பாணி உட்பட கித்துல் மூலம் தயாரிக்கப்பட்ட பல்வேறு உணவுப் பொருட்கள் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவிடம் கையளிக்கப்பட்டது. (சிவா ஸ்ரீதரராவ்)**

# ஸ்ரீசுமண வித்தியாலயத்துக்கான புதிய கட்டடம் திறந்து வைப்பு





பதுளை மாவட்டத்தின், மஹியங்கனை கல்வி வலயத்துக்குட்பட்ட தம்பகொல்ல ஸ்ரீசுமண வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வகுப்பறை கட்டடத் திறப்பு விழா ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

குறித்த பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் இதுவரை வசதிகளுடனான கட்டடங்கள் இன்மையால் பல சிரமங்களை எதிர்நோக்கினர். இந்நிலையில் இதற்குத் தீர்வாக ஊவா மாகாண கல்வியமைச்சினால் 10 மில்லியன் ரூபா செலவில் இந்தக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் தேனுக விதானகமகே, ஊவா மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் அனுர விதானகமகே, மாகாண கல்வியமைச்சின் செயலாளர் சந்தியா அபன்வெல உட்பட அரச அதிகாரிகள் மற்றும் பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.



# கடும் வறட்சியால் நீர்மட்டத்தில் வீழ்ச்சி; மலையகப் பகுதிகளில் குடிநீருக்கு தட்டுப்பாடு

(கினிகத்தேனை நிருபர்)

மலையகத்தில் சில பிரதேசங்களில் குடிநீருக்கு தட்டுப்பாடு நிலவுவதால் மக்கள் சிரமத்தை சந்திப்பதாக கவலை வெளியிட்டுள்ளனர். இதனால் நாளாந்தம் மேற்கொள்ளும் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

தற்போது மலையகத்தில் வறட்சியான காலநிலை நிலவுவதால் மழை வீழ்ச்சி இல்லாது காணப்படுகின்றது. ஆறுகளிலும் நீரோடைகளிலும் நீர் குறைவடைந்து செல்கின்றது. அத்துடன் நீரூற்றுகளில் நீர்வற்றி குறைவடைந்துள்ளதால், குடிநீருக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், பொதுவாக மலையகத்தில் நீர் குறைவடைந்து செல்வதால் நீரை நம்பியிருக்கும் தொழில்களும் பாதிப்படைந்துள்ளன. குறிப்பாக விவசாயத்தில் ஈடுபடுபவர்கள் நீர் இல்லாத காரணத்தினால் தம்முடைய தொழிலும் பாதித்துள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக நீரூற்றுகளில் நீர் குறைவடைந்து செல்வதால் நீரை பெற்றுக்கொள்ள மக்கள் நீர் உள்ள பிரதேசங்களை தேடிச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் மலையகத்தில் பெரும்பாலான பிரதேசங்களில் நீரூற்றுகளிலிருந்து வரும் நீரை சேமித்து வைக்கக்கூடிய முறை ஒன்று இல்லாததன் காரணத்தினாலும் இவ்வாறான வறட்சியான காலங்களில் குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்படுவதற்கும் காரணமாக அமைந்து விடுவதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

தொடர்ச்சியாக வறட்சியான காலநிலை நிலவுமாகவிருந்தால் எதிர்வரும் வாரங்களில் குடிநீருக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான சாத்தியப்பாடு நிலவுவதாகவும் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

# JAT நிறுவனம் ஏற்றுமதி வருவாய் வளர்ச்சிக்கு மத்தியில் இதுவரை இல்லாத வகையில் 317% என்ற அதிகபட்ச வரிக்குப் பிந்தைய வருவாயை பதிவுசெய்துள்ளது

- குழுமத்தின் வரிக்குப் பிந்தைய வருவாய் 232% அதிகரிப்புடன் ரூபா 717 மில்லியன்
- கடந்த 12 மாதங்களுக்கான வரிக்குப் பிந்தைய வருவாய் ரூபா 1,102 மில்லியன்
- மொத்த வருவாய் 72% ஆல் அதிகரித்துள்ளது
- நிறுவனத்தின் மொத்த இலாபம் 30% இற்கு மேல் பேணப்பட்டுள்ளது
- ஏற்றுமதி வருவாய் மொத்த வருவாயில் 9% இலிருந்து 22% ஆக அதிகரித்துள்ளது





பல்தேசிய கூட்டு நிறுவனமும், இலங்கை மற்றும் பங்களாதேஷில் மரப் பூச்சுகள் துறையில் முன்னணி வகிக்கின்ற நிறுவனமுமான JAT Holdings PLC, 2021/22 நிதியாண்டின் 3ஆவது காலாண்டில் மந்தமான சந்தை நிலைவரங்களுக்கு மத்தியிலும் சிறப்பான பெறுபேறுகளை பதிவாக்கியுள்ளது. குழுமத்தின் வரிக்குப் பிந்தைய இலாபம் கடந்த ஆண்டில் இதே காலப்பகுதியில் காலாண்டில் பதிவாக்கப்பட்ட ரூபா 717 மில்லியனுடன் ஒப்பிடுகையில், 232 வீதத்தால் அதிகரித்துள்ளது. அதேசமயம் கடந்த 12 மாதங்களுக்கான வரிக்குப் பிந்தைய இலாபம் ரூபா 1,102 மில்லியனாக பதிவாக்கப்பட்டுள்ளது.

மதிப்பாய்வு செய்யப்படுகின்ற 9 மாதங்களில் வருவாய் 72 வீதத்தால் அதிகரித்துள்ள அதேநேரத்தில் நிறுவனத்தின் மொத்த இலாப மட்டங்கள் 30%இற்கு மேல் சீராகப் பேணப்பட்டுள்ளது. ஏற்றுமதி வருவாயின் பங்கும் முந்தைய ஆண்டில் பதிவாக்கப்பட்ட 9% உடன் ஒப்பிடுகையில் மொத்த வருவாயில் 22 வீதமாக உயர்வடைந்துள்ளது, முதலீட்டாளர்களும் பங்கொன்றுக்கான வருவாய் (கடந்த 12 மாதங்களுக்கான) ரூபா 2.16 ஆக இருப்பதை அறியும்போது மகிழ்ச்சியடைவார்கள். JAT Holdingsஇன் சிறந்த காலாண்டு என நிரூபிக்கப்பட்ட 4ஆவது காலாண்டை நிறுவனம் தொடங்கும் போது இந்த மீளெழுச்சியுடனான நிதியியல் பெறுபேறுகள் வெளிவந்துள்ளதுடன், பண்டிகைக்காலங்களின் காரணமாக வரலாற்றுரீதியாக வருவாய்க்குப் பிந்தைய இலாபத்தில் பூச்சுகள் தொழிற்றுறையின் பங்கு 45 வீதமாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

நிறுவனத்தின் நிதியியல் பெறுபேறுகள் தொடர்பில் அதன் பணிப்பாளரும், தலைமை நிர்வாக அதிகாரியுமான நிஷால் பேர்டினாண்டோ கருத்து வெளியிடுகையில், “எங்கள் ஆரம்ப பொது வழங்கல் நடவடிக்கை இடம்பெற்று வெறும் ஆறு மாதங்களில் கடந்த காலாண்டில் நாங்கள் பதிவாக்கியுள்ள வலுவான பெறுபேறுகளை முதலீட்டாளர்களுக்கு சமர்ப்பிப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம். ஒரு மந்தமான சந்தைச் சூழல் மற்றும் பிற சவால்கள், தளம்பலான நாணயமாற்று வீதங்கள் மற்றும் உலகளாவிய சந்தையில் பொருட்களின் பற்றாக்குறை ஆகியவற்றின் மத்தியில் இந்த அளவீடுகள் ஈட்டப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், நாங்கள் சந்தை நிலைமைகளுக்கு ஏற்றவாறு நம்மை மாற்றியமைத்து, அதன் போக்குகளுக்கேற்ப சுறுசுறுப்பாக இயங்கி, எங்களின் மொத்த இலாப மட்டங்களைப் பேணியுள்ளோம். எங்களுடைய மொத்த இலாப இலக்குகளை பேணுவதில் தேவையற்ற வளங்களைப் போக்கி, ஆறு சிக்மா (six sigma) கோட்பாடுகளை செயல்படுத்துவதன் மூலம் எங்கள் வலுவான வழங்குனர் உறவுகள் மற்றும் எங்கள் உற்பத்தி செயல்முறைகளில் தொடர்ச்சியான மேம்பாடுகளை நாங்கள் எங்களுக்குச் சாதகமாக சிறப்பாகப் பயன்படுத்தினோம்” என்று குறிப்பிட்டார்.

JAT Holdings குழுமத்தின் வணிகத் துறைகளிலும் மீளெழுச்சியுடனான பெறுபேற்றுத்திறன் பதிவுசெய்யப் பட்டுள்ளது. 2021/22 நிதியாண்டின் முதல் ஒன்பது மாதங்களில் WHITE by JAT தயாரிப்பு வரிசை திட்டமிடப்பட்ட இலக்கினை விடவும் 62% கூடுதல் விற்பனையை பதிவுசெய்துள்ளது. அதேநேரத்தில் தூரிகை மற்றும் மரப்பூச்சுகள் பிரிவுகளில் விற்பனை கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், முறையே 57 வீதம் மற்றும் 33 வீதத்தால் அதிகரித்துள்ளது. JAT Holdingsஇன் பங்களாதேஷ் செயல்பாடுகளும் வருவாயில் 379% அதிகரிப்பைப் பதிவாக்கியுள்ளன. இது திட்டமிடப்பட்ட இலக்கினை அடைவதற்கு முன்னதாக 2022 நிதியாண்டின் 4ஆவது காலாண்டில் ஆரம்பிக்கப்படுகின்ற உற்பத்தி நடவடிக்கையின் விளைவாக மேலும் மேம்படும். Prime Grand Residencies மற்றும் 606 The Address போன்ற முதன்மையான நிர்மாணச் செயற்றிட்டங்களுக்காக ஆடம்பர சமையலறை மற்றும் அலுமாரி வழங்கல் திட்டங்கள் மூலம் ரூபா ஒரு பில்லியனுக்கும் அதிகம் மதிப்புள்ள செயற்றிட்டங்களையும் நிறுவனம் முன்னெடுக்கப்படவுள்ள தனது செயற்றிட்டங்களின் வரிசையில் உள்ளடக்கியுள்ளது.

நிறுவனத்தின் உடனடி எதிர்காலத் திட்டங்கள் குறித்து அதன் ஸ்தாபகரும், முகாமைத்துவப் பணிப்பாளருமான ஈலியன் குணவர்தன மேலும் கருத்துத் தெரிவிக்கையில், “இந்த வீதத்தில், நடப்பு நிதியாண்டில் எங்களின் ரூபா 1.2 பில்லியன் வரிக்குப் பிந்தைய இலக்கை எட்டுவதற்கான பாதையில் நாங்கள் சிறப்பாக பயணிக்கின்றோம். எங்களின் வலுவான நிதியியல் பெறுபேறுகளின் விளைவாக, குறைந்தபட்சம் அடுத்த 5 மாதங்களுக்குத் தேவையான மூலப்பொருட்கள் மற்றும் பிற பொருட்களின் கையிருப்புகளை எங்களால் தக்கவைக்க முடிந்துள்ளது. இது இறக்குமதிகள் எதிர்கொள்ளும் தற்போதைய சவால்களுக்கு மத்தியில் எங்களுக்கு நெகிழ்வுத்தன்மையை அளிக்கிறது. மேலும், 4ஆவது காலாண்டு பற்றி நாங்கள் மிகவும் ஊக்கத்துடனும், ஆர்வத்துடனும் உள்ளோம். ஏனெனில், இது வரலாற்று ரீதியாக பண்டிகைக் காலத்தின் காரணமாக எங்களுக்கு மிகவும் இலாபகரமான காலாண்டாக இருந்துவந்துள்ளது. எனவே, சவாலான 3ஆவது காலாண்டில் நாங்கள் பதிவாக்கியுள்ள மீளெழுச்சியுடனான பெறுபேற்றுத்திறனால் முதலீட்டாளர்கள் 4ஆவது காலாண்டின்போது இன்னும் வலுவான மற்றும் பலனளிக்கும் பெறுபேற்றுத்திறனை எதிர்பார்க்கலாம். 2021/22 நிதியாண்டின் முடிவில் அனைத்து இலக்குகளையும் அடைந்து, எல்லாவகையிலும் எதிர்பார்ப்புகளை விஞ்சும் வகையில் செயற்படுவோம் என்று எதிர்பார்க்கிறோம். மேலும், எங்களின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் தொழிற்சாலை 2023 நிதியாண்டின் 2ஆவது காலாண்டிற்குள் முழுமையாகச் செயல்படத் திட்டமிடப்பட்டுள்ளது. இது நமது மொத்த இலாப மட்டங்களை மேலும் அதிகரிக்க உதவும் என்பதுடன், எதிர்காலத்தில் எங்கள் முதலீட்டாளர்களுக்கு அதிசிறந்த மதிப்பை வழங்க இடமளிக்கும்” என்று குறிப்பிட்டார்.

நிறுவனம் அதன் வழங்கல் மற்றும் மதிப்புச் சங்கிலிகளை வெளிப்புறத் தாக்கங்களிலிருந்து காப்பதற்கு பின்னோக்கிய கிடையான ஒருங்கிணைப்பை எதிர்பார்த்துள்ளதுடன், மேலும் பல பேராவலுடைய செயற்றிட்டங்களை ஆரம்பிப்பதற்கும், எங்களின் வலுவான பணப்புழக்கத்தின் அனுகூலத்தை சிறப்பாகப் பயன்படுத்துவதற்கும் ஆவலாக உள்ளது.

சிறப்பான நிதியியல் பெறுபேறுகளை வழங்குவதோடு, JAT “Pinthaaroo-Shilpee Abhiman” நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் இலங்கையில் மரக் கைவினைத்திறனை ஆதரிப்பதற்கு குறிப்பிடத்தக்க வளங்களை JAT Holdings அர்ப்பணித்து வருகிறது. இந்த முயற்சி JAT இன் நீண்டகால அடிப்படையிலான Sayerlack Sathkaraya நிறுவன சமூகப் பொறுப்புணர்வுத் திட்டத்தின் நீடிப்பாகும். மேலும் இது திறன் மேம்பாடு, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க அமைச்சின் அனுசரணையில் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையுடன் இணைந்து நடத்தப்படுகிறது.

1993ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து, JAT Holdings இலங்கையில் மரப் பூச்சுகளுக்கான சந்தை முன்னோடியாகவும், நாட்டின் மிகவும் நம்பிக்கைக்குரிய கூட்டு நிறுவனங்களில் ஒன்றாகவும் தன்னை நிலைநிறுத்திக்கொண்டுள்ளது. LMDஆல் தொடர்ச்சியாக 4 வருடங்களாக இலங்கையின் தலைசிறந்த 100 மிகவும் மதிக்கப்படும் நிறுவனங்கள் மத்தியில் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், Brand Financeஇன் தலைசிறந்த 20 கூட்டு நிறுவன வர்த்தகநாமங்கள் மத்தியில் தரப்படுத்தப்பட்டமை போன்ற அங்கீகாரங்களால் இது மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

2021 ஜுலையில் இடம்பெற்ற அதன் சமீபத்திய ஆரம்ப பொதுப்பங்கு வழங்கல் நடவடிக்கைவரை, JAT Holdings தொடர்ந்து 5 ஆண்டுகளாக, நன்மதிப்புமிக்க Moodyஇன் ICRA “A+ Stable” தர மதிப்பீட்டைப் பெற்றுள்ள இலங்கையிலுள்ள ஒரேயொரு தனியார் நிறுவனமாகத் திகழ்ந்து வருகிறது.

# INSEE Cement நிறுவனம் இலங்கையின் எரிசக்தி மற்றும் உணவு இருப்பினை உறுதிப்படுத்த உதவுகிறது



INSEE Cement நிறுவனம் இலங்கையின் முன்னணி சீமெந்து உற்பத்தி நிறுவனமாகத் திகழ்ந்து வருவதுடன், சன்ஸ்தா மற்றும் மகாவலி சீமெந்து போன்ற புகழ்பெற்ற சீமெந்து வர்த்தகநாமங்களைக் கொண்டுள்ள நிறுவனமாகும். தற்போது, ஊவா மாகாணத்திலுள்ள உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்திற்கு தேவையான சீமெந்தினை INSEE Cement நிறுவனம் விநியோகம் செய்கிறது. புதிய நீர் மின்னுற்பத்தி நிலையத்தை அமைத்தல், அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்களுக்கு நீர்ப்பாசன உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தல் ஆகியன திட்டத்தில் அடங்கும். உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டம் என்பது மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு, இலங்கை மின்சார சபை ஆகியவற்றுடன் இணைந்து நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சு மேற்கொண்ட ஒரு முயற்சியாகும். இந்தத் திட்டம் ஈரானிய ஒப்பந்த நிறுவனமான FARABஇற்கு வழங்கப்பட்டுள்ளதுடன், INSEE Cement நிறுவனம் இத்திட்டத்திற்கு 85,000 மெட்ரிக் தொன்களுக்கும் மேலாக தனது தனியுரிமத்தின் கீழான ரெபிட் ஃபுளோ மற்றும் சன்ஸ்தா சீமெந்து தயாரிப்புகளை ஏற்கனவே வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் மூலோபாய முக்கியத்துவத்தை வலியுறுத்தி, INSEE Cement நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியான குஸ்டாவோ நவாரோ கருத்து வெளியிடுகையில், “உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டம் ஒரு முக்கியமான திட்டமாகும். இது நாடளாவியரீதியில் நேர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தும். இது



புதுப்பிக்கத்தக்க மின்சார மூலத்தை தோற்றுவிக்கும், அதேநேரத்தில் பரந்த விவசாய நிலங்களுக்குத் தேவையான நீர்ப்பாசனத்தையும் வழங்கும். ஒன்றாக, இது இலங்கையின் உணவு மற்றும் எரிசக்தி இருப்பினை மேலும் வலுப்படுத்த உதவும். குறிப்பாக, இது தொற்றுநோய்க்குப் பிந்தைய சூழலில் முக்கியமானது. INSEE நிறுவனத்தில், வாழ்க்கைக்கான கட்டுமானத்தை நாங்கள் நம்புகிறோம். எனவே, இந்தத் திட்டத்திற்கு மிகப்பெரிய சீமெந்து வழங்குநர்களாக இருப்பது எமக்கு மிகுந்த பெருமிதமாகும். மேலும் நமது நாட்டின் வளர்ச்சிக்கு ஆதரவாக நமது வளங்களை பயன்படுத்தவும் இது இடமளிக்கிறது. இத்திட்டம் முடிவடையும் வரை, இத்திட்டத்துடன் இணைந்து தொடர்ந்து பணியாற்ற நாங்கள் ஆவலாக உள்ளோம். மேலும் இந்த மூலோபாய தேசிய அபிவிருத்தி முயற்சி தொடர்பாக அரசாங்கத்தின் தொலைநோக்கு இலக்கினை இச்சந்தர்ப்பத்தில் பாராட்ட விரும்புகிறோம்” என்று குறிப்பிட்டார்.

உமாஓயா நீர்மின்னுற்பத்தி வளாகம் என்றும் அழைக்கப்படும் உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டம், உமா ஓயாவின் குறுக்கே இரண்டு அணைகள் மற்றும் வெலிமடையில் ஒரு கிளை ஆறு, ஒரு தண்ணீர்-படுக்கை திசைதிருப்பல் சுரங்கப்பாதை மற்றும் 120 மெகாவாட் திறன் கொண்ட நிலத்தடி நீர் மின்னுற்பத்தி நிலையம் ஆகியவற்றை உள்ளடக்கியது. இத்திட்டம் நிறைவடைந்தவுடன், அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் சுமார் 5000 ஹெக்டேயர் நிலத்திற்கு நீர்ப்பாசனம் செய்வதற்கும் மற்றும் பிற கீழ்நிலத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் 145 மில்லியன் கன மீட்டர் தண்ணீரைத் திசைதிருப்பிவிட முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. வருடாந்த மின்னுற்பத்தி 290 கிகாவாட்டாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன் மற்றும் மின் உற்பத்தி நிலையம் 22.7 கிலோமீற்றர், 132 கிலோ வோல்ற்று விநியோக இணைப்பு மார்க்கத்தின் வழியாக பதுளை மின் வழங்கல் துணை மின் நிலையத்துடன் இணைக்கப்படும். திட்டத்திற்கு 529 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளதுடன் மற்றும் மொத்த திட்ட மதிப்பில் 85% ஈரான் அரசாங்கத்தால் ஏற்றுமதி மற்றும் மேம்பாட்டு வங்கி மூலம் கடனாக வழங்கப்படுகிறது.



INSEE Cement அல்லது Siam City Cement (Lanka) Limited, 1969ஆம் ஆண்டில் தாய்லாந்தில் நிறுவப்பட்ட தென்கிழக்காசியாவின் முன்னணி சீமெந்து உற்பத்தியாளரான Siam City Cement Public Company Limited (SCCC) இன் ஓர் உறுப்பு நிறுவனமாகும். INSEE Cement நிறுவனம் INSEE வர்த்தகநாமத்தின் கீழ், சங்ஸ்தா, மகாவலி மெரின், மகாவலி மெரின் பிளஸ், INSEE ரெபிட் ஃபுளோ, INSEE ரெபிட் ஃபுளோ பிளஸ் மற்றும் INSEE எக்ஸ்ட்ரா சீமெந்து போன்ற சீமெந்து வகைகளை தயாரித்து வருகின்றது. இலங்கை பசுமை கட்டிட சபையிடமிருந்து பசுமை அடையாள சான்று அங்கீகாரத்தைப் பெற்ற முதல் ‘பசுமை சீமெந்து தயாரிப்பு’ INSEE சீமெந்தாகும். இந்த நிறுவனம் இலங்கையில் முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட ஒரேயொரு சீமெந்து உற்பத்தி நிறுவனமாகும். அத்துடன், LMD சஞ்சிகையால் மிகவும் நன்மதிப்புப் பெற்ற நிறுவனங்களுள் ஒன்றாகவும் தரப்படுத்தப்பட்டுள்ளது.

திகதி 07.02.2022 திங்கட்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4671
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 12,596,250.00
ஆங்கில எழுத்து K வெற்றி இலக்கங்கள் 2 1 6 8 6 8
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 39,424,863.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2966
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,226,900.00
ஆங்கில எழுத்து U வெற்றி இலக்கங்கள் 11 23 24 29
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 63,760,710.00

Mega POWER மெகா பவர் கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 1019 மெகா அதிர்ஷ்ட இலக்கம் 07679
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,106,780.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 221,378,146.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து G சுப்பர் இலக்கம் 03 வெற்றி இலக்கங்கள் 37 40 72 77

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 701
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,883,720.00
ஆங்கில எழுத்து W வெற்றி இலக்கங்கள் 24 72 73 78
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 96,129,793.20

NLB ஹந்தஹன ராசி சுப பலன்
சீட்டிழுப்பு இலக்கம் : 0012
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,053,000.00
இலக்கினம் கன்னி வெற்றி இலக்கங்கள் 21 40 55 57
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,653,873.20

வாசனா சம்பத Vasana Sampatha
சீட்டிழுப்பு இலக்கம் : 1693
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,417,360.00
ஆங்கில எழுத்து W வெற்றி இலக்கங்கள் 28 61 64 78
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 27,495,142.70

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
இலக்கம் 32, தேஷமான்ய N.U. ஜயவர்தன மாவத்த, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

# சமுதாய சீர்திருத்த கட்டளையாளர்களுக்காக மன்னாரில் இடம்பெற்ற விசேட நிகழ்ச்சித்திட்டம்

(மன்னார் நகர் நிருபர்)

மன்னாரில் சமுதாய சீர்த்திருத்த கட்டளையாளர்களுக்கான நிகழ்ச்சித்திட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை (08) காலை 9 மணிமுதல் மதியம் ஒரு மணிவரை அடம்பன் வைத்தியசாலையின் நந்தவனம் உளப் பிரிவில் இடம்பெற்றது.

மன்னார் நீதவான் நீதிமன்றத்தின் சமுதாய சீர்த்திருத்த திணைக்களத்தின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் அனுசரணையுடன் குறித்த நிகழ்ச்சித் திட்டம் இடம்பெற்றது.

மன்னார் நீதிமன்றத்தின் கட்டளையாளர்கள், நீதவான் நீதிமன்றத்தின் குற்றவாளிகள் என்று சொல்லாமல் தவறிழைத்தவர்கள், அதாவது சிறு சிறு தவறுகளை செய்தவர்கள் சமூக மட்டத்தில் குற்றவாளிகளாக கருதப்படும் குறித்த நபர்கள் மன்றுக்கு அழைக்கப்பட்டு செய்த தவறுகளுக்காக சமுதாயம்சார் சீர்திருத்த கட்டளைகளுக்கு உட்படுத்தப்பட்டு கட்டளையின் நிபந்தனைக்கமைவாக மருத்துவ சிகிச்சை, உளநல ஆலோசனை சிகிச்சை, தனிநபர் ஆலோசனை, குடும்ப ஆலோசனை, மேற்பார்வை மற்றும் வாழ்வாதார உதவித் திட்டம் தொழில்பயிற்சி போன்ற நிகழ்ச்சித் திட்டங்களை மன்னார் நீதவான் நீதிமன்றத்தின் சமுதாயம்சார் சீர்திருத்த திணைக்களம் குறித்த கட்டளையாளர்களுக்கு மேற்கொண்டு வருகின்றது.

அந்தவகையில், உளநல ஆலோசனை மற்றும் மருத்துவ ஆலோசனை மருத்துவ சிகிச்சைகளுக்காக நேற்று செவ்வாய்க்கிழமை



குறித்த கட்டளையாளர்கள் மன்னார் நீதிமன்றத்திலிருந்து அடம்பன் வைத்தியசாலை அமைக்கப்பட்டுள்ள நந்தவனம் உளநல ஆற்றுப்படுத்தல் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

அவர்களுக்கு நேற்று ஆலோசனைக் கூட்டம் மற்றும் மருத்துவ ஆலோசனை நிகழ்ச்சித் திட்டம், சீர்திருத்தம் தொடர்பாக ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

குறித்த நடவடிக்கையில் மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்றில் சமுதாய சீர்திருத்த திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் மன்னார் பொது வைத்தியசாலை உள வள மருத்துவ உத்தியோகத்தர், மன்னார் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ, மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை உளவள ஆலோசகர் மற்றும் மாந்தை மேற்கு பிரதேச செயலகப் பிரிவு, சமுதாய சீர்திருத்த திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் குறித்த திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு கட்டளைகளுக்கு சகல உதவிகளையும் வழங்கினர்.

குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் அதிகூடிய போதைவஸ்து பாவனையாளர்கள் கட்டளையாளர்களாக வருகை தந்து ஆலோசனைகளையும், சிகிச்சைகளையும் பெற்றுக் கொண்டனர்.

குறித்த நடவடிக்கைக்கான அனுசரணையை மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# 11 தமிழக மீனவர்கள் நெடுந்தீவு கடற்பரப்பில் கைது!



இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 11 பேர் மூன்று படகுகளுடன் நேற்று முன்தினம் இரவு இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு நெடுந்தீவு அருகே இந்திய மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்ட கடற்படையினர் இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த மூன்று படகுகளையும் அதிலிருந்த 11 மீனவர்களையும் கைதுசெய்தனர். கைதுசெய்யப்பட்டவர்கள் கடற்படையினரால் மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்துக்கு அழைத்துவரப்பட்டுள்ள நிலையில், மீனவர்களுக்கு மலேரியா, கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு மீன்பிடி நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் சட்ட நடவடிக்கைக்காக கையளிக்கப்படவுள்ளனர்.

# அவதூறு, அச்சுறுத்தல் விடுத்தார்களென ஆனந்தசங்கரி வழக்குத் தாக்கல்

தமிழர் விடுதலை கூட்டணியின் பொதுச் செயலாளரும் மூத்த அரசியல்வாதியுமான வீரசிங்கம் ஆனந்தசங்கரி தனது சட்டத்தரணி ஸ்ரனிஸ்லாஸ் செலஸ்ரின் மூலம் தாக்கல் செய்த வழக்கு நேற்று முன்தினம் (07) கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

கடந்த ஜனவரி 08ஆம் திகதி கிளிநொச்சியிலுள்ள தனது வீட்டில் அவதூறு மூலமான கோபாவேஷத்தை ஏற்படுத்தியமை, உடலுக்கும் உயிருக்கும் ஆபத்து ஏற்படுத்துவதாக அச்சுறுத்தியமை, சமாதானத்தை குலைத்தமை மற்றும் அச்சுறுத்தி கட்சி, ஆதனம், ஆவணம் என்பவற்றை சூறையாட முனைந்தமைக்காக ச.அரவிந்தன் உட்பட்ட 8 நபர்களுக்கு எதிராக



ஆனந்தசங்கரியால் இவ்வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை ஆராய்ந்த நீதிமன்றம் குறித்த 08 நபர்களுக்கும் எதிராக அழைப்புக் கட்டளையை விடுத்ததுடன், மேலதிக நடவடிக்கைக்காக எதிர்வரும் 23ஆம் திகதி குறித்து நியமித்துள்ளது.

# ஆளுமையுள்ள நல்ல சமுதாயத்தை அறநெறி பாடசாலைகள் உருவாக்க வேண்டும்

## வேலன் சுவாமிகள்







(யாழ். நிருபர்)

மனிதப் பண்பியல்புகளோடு ஆளுமையுள்ள ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்க வேண்டிய தூரநோக்கில் அறநெறிப் பாடசாலைகள் அமைந்துள்ளன என்று வேலன் சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

செல்லம்மாள் ஞாபகார்த்த அறநெறிப் பாடசாலை மற்றும் செல்லம்மாள் ஞாபகார்த்த முன்பள்ளி ஆகியவற்றுக்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று முன்தினம் (07) நடைபெற்றது.

யாழ். நெடுந்தீவு செல்லம்மாள் வித்தியாலய வளாகத்தில் சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இதில் சிறப்பு அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றிய வேலன் சுவாமி கருத்து தெரிவிக்கையில்,

சிறுவர்களுக்கு ஆரம்பக்கல்வியை மேம்படுத்தவும் அறநெறியை போதிப்பதற்காகவும் எடுக்கப்படும் இந்த முயற்சி சிறப்பாக அமைய வேண்டும் என்று இறைவனை பிரார்த்தித்துக்கொள்கிறேன்.

நமது மண்ணிலேயே சிறுவர்களை, இளம் சந்ததியினரை நல்ல வழியில் ஆன்மீக ரீதியில் வழிகாட்டி வளர்த்தெடுக்கவேண்டிய பொறுப்பில் அனைவரும் இருக்கின்றோம்.

எமது பண்பாடு, கலை, கலாசார விழுமியங்களைப் பேணக்கூடிய விதத்தில் மனிதப் பண்பியலோடு ஆளுமையுள்ள ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்கவேண்டிய தூரநோக்கில் இந்த அறநெறிப் பாடசாலைகள் முக்கிய பாகங்களை வகிக்கின்றன.

அந்த வகையிலேயே நெடுந்தீவு மண்ணில் இருக்கக்கூடிய சிறார்களுக்கு எமது பண்பாட்டு கலாசார விழுமியங்களை எடுத்துச்செல்லக்கூடிய வகையில் இந்த அறநெறிப் பாடசாலை அமையவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனத்தைச் சேர்ந்த கலியுகவரதன், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், நெடுந்தீவு பிரதேச செயலாளர் சத்தியசோதி வேலன்சுவாமி, ஓய்வுநிலை விரிவுரையாளரும் இந்துமகா சபையை சேர்ந்தவரும் கவிஞருமான சோ. பத்மநாதன் மற்றும் சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனத்தினர், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# வவுனியாவில் பட்டப்பகலில் வீடு புகுந்து நகை - பணம் திருட்டு

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் பட்டப்பகலில் வீடு புகுந்து நகை மற்றும் பணம் என்பன திருடப்பட்டுள்ள நிலையில், மோப்பநாயின் துணையுடன் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் (07) மதியம் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, பண்டாரிக்குளம், மாடசாமி கோவில் வீதியிலுள்ள வீடொன்றில் வசித்து வந்தவர்கள் உறவினர் ஒருவரின் பூப்புனித நீராட்டு விழாவிற்கு காலை சென்றிருந்தனர். அயல் வீட்டாரும் உறவினர் வீட்டுக்கு சென்றிருந்தமையால் கடந்த சில நாட்களாக வீட்டில் இருக்கவில்லை.

இதனையறிந்த திருடர்கள் பட்டப்பகலில் மதில் ஊடாக குறித்த வீட்டுக்குள் நுழைந்து, வீட்டின் அனைத்து பகுதிகளிலும் நகை, பணம் என்பவற்றை தேடியுள்ளதுடன், வீட்டில் இருந்த 04 பவுண் நகை மற்றும் 05 ஆயிரம் ரூபா பணத்தையும் எடுத்துக்கொண்டு கதவினை திறந்து அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

பூப்புனித நீராட்டு விழாவிற்கு சென்ற வீட்டார் வீட்டை திறந்தபோது அங்கு பொருட்கள் பரவிக் கிடந்ததுடன், சமையலறை கூரை உடைக்கப்பட்டும், கதவு திறக்கப்பட்டும் இருந்ததை அவதானித்ததுடன் நகை மற்றும் பணம் திருடப்பட்டிருந்தமையையும் அவதானித்துள்ளனர்.

இதனையடுத்து பண்டாரிக்குளம் பொலிஸாருக்கு தெரிவித்தையடுத்து அவர்கள் ஊடாக வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டது.

சம்பவ இடத்திற்கு வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஐ.ஏ.ஏ.எஸ்.ஜயக்கொடி தலைமையில் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிஸார் வருகை தந்து மோப்பநாயின் உதவியுடன் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# ஒரு இலட்சம் அபிவிருத்தித் திட்டம் விரைவில் மக்கள் மயப்படுத்தப்படும்

## அங்கஜன் எம்.பி.



(சாவகச்சேரி நிருபர்)

கடந்த வருடம் நிறைவான கிராமம் செயற்றிட்டம் எந்தக் குறையுமின்றி மக்களை சென்றடைந்ததுபோல் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் ஒரு இலட்சம் அபிவிருத்தி வேலைத்திட்டமும் விரைவில் மக்கள் மயப்படுத்தப்படும் - என யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

கிராமத்திற்கு மூன்று மில்லியன் திட்டம் வரவே வராது என்றார்கள். நாட்டில் இவ்வளவு பிரச்சினைகள் இருக்கும்போது அபிவிருத்தி சாத்தியமில்லை எனப் பலர் குறை கூறினார்கள்.

இதுபோன்றே கடந்த வருடம் நிறைவான கிராமம் செயற்றிட்டத்தை ஆரம்பிக்கும்போதும் பலர் கூறினார்கள். ஆனால், நிறைவான கிராமம் செயற்றிட்டம் வெற்றிகரமாக நடந்தேறியது. அதேபோன்று மக்களின் தேவைப்பாடான இந்த வேலைத்திட்டத்தையும் வெற்றிகரமாக மக்கள் மயப்படுத்துவோம். அதற்கான நிதிகளும் கிடைக்கப்பெற்று விட்டன.

எனவே, ஒரு இலட்சம் அபிவிருத்தி வேலைத்திட்டத்தினை வெற்றிகரமாக அமுல்படுத்தி அதனூடாக வரும் பிரதிபலன்கள் மக்களை வந்தடைய வழிவகை செய்வோம். இந்த வேலைத்திட்டத்தில் வாழ்வாதாரத்தை மேம்படுத்த 40 சதவீதம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்போது கொரோனா தொற்று காரணமாக உலகளாவிய ரீதியாக பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. பல நாடுகளில் உணவுத்தட்டுப்பாடு, விலைவாசி அதிகரிப்பு ஆகியன ஏற்பட்டுள்ளன.

எனவே, இந்த நெருக்கடி நிலையிலிருந்து மீண்டெழ இந்த வாழ்வாதாரத் திட்டங்களை சிறப்பாக பயன்படுத்தி கிராம மக்கள் தமது வருமானத்தை உயர்த்திக்கொள்ள வேண்டும் – என்றார்.

# நஞ்சற்ற உணவுப்பொருட்கள் தேசிய வேலைத்திட்டத்தின்கீழ் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கை அறுவடை







(வவுனியா நிருபர்)

நஞ்சற்ற உணவுப்பொருட்கள் தேசிய வேலைத்திட்டத்தின்கீழ் வவுனியாவில் இராணுவத்தினரால் செய்கைபண்ணப்பட்ட நெற்செய்கை அறுவடை செய்யும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் வவுனியா பிராந்திய படைத் தலைமையகத்தினால் நஞ்சற்ற உணவை உற்பத்திசெய்யும் தேசிய வேலைத்திட்டத்திற்கு அமைவாக வவுனியா, ரம்பவெட்டி பகுதியில் 124 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

இராணுவத்தினரால் தயாரிக்கப்பட்ட இயற்கை உரத்தை மாத்திரமே பயன்படுத்தி குறித்த நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது சிறப்பான விளைச்சலைக் கொடுத்திருந்த நிலையில் நெல் அறுவடை மேற்கொள்ளப்பட்டது.

குறித்த நெல் அறுவடை நிகழ்வில் சிவில் பாதுகாப்புப் படைத் தளபதி லெப்டினன் கேர்ணல் சூரிய அஸ்மல, வவுனியா மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, சிவில் பாதுகாப்புப் படை வீரர்கள் ஆகியோர் இணைந்து அறுவடையை மேற்கொண்டனர். இதன்போது, விவசாயிகளுக்கு முன்னுதாரணமாக சிவில் பாதுகாப்புப் படையினர் சிறப்பாக இயற்கை உரத்தை பயன்படுத்தி நஞ்சற்ற உணவு உற்பத்தியில் ஈடுபட்டமையை மாவட்ட அரச அதிபர் பாராட்டியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# வவுனியா – பம்பைமடுவில் ஹன்ரர் ரக வாகனம் கட்டுப்பாட்டையிழந்து விபத்து: இருவர் படுகாயம்

(வவுனியா நிருபர்)

வவுனியா, பம்பைமடு பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் (07) மதியம் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மன்னார் வீதியூடாக வவுனியா நோக்கிச் சென்ற ஹன்ரர் ரக வாகனமொன்று வவுனியா, பம்பைமடு பகுதியிலுள்ள வவுனியா பல்கலைக்கழகம் முன்னால் பயணித்தபோது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்தில் ஹன்ரர் வாகனத்தின் சாரதியும் நடத்துனரும் படுகாயமடைந்துள்ளனர். காயமடைந்த இருவரும் அம்பியூலன்ஸ் மூலம் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பில் பூவரசன்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# கிராமிய குடிநீர் வழங்கல் அபிவிருத்தி அமைச்சால் மலசலகூடங்கள் அமைக்கும் பணி ஆரம்பம்

(கிளிநொச்சி நிருபர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 100 குடும்பங்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான மலசலகூடங்கள் அமைத்துக்கொடுக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் அபிவிருத்தி அமைச்சினால் மேற்படி திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான பயனாளிகள் பொருளாதாரத்தில் நலிவுற்றவர்கள் என்ற அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு 50 ஆயிரம் பெறுமதியில் மலசலகூடங்கள் அமைக்கப்பட்டு வழங்கப்படவுள்ளன.

மேற்படி அமைச்சின் இணைப்புச் செயலாளர் ஜீவிதன் இரவீந்திரமாரால் இதற்கான ஆரம்ப நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை (06) கிளிநொச்சி ஸ்கந்தபுரம் விநாயகர் குடியிருப்பில் மேற்கொள்ளப்பட்டது.



# கிளாலி காயன் கடவை இணைப்பு வீதியை புனரமைக்கக்கோரி ஆளுநருக்கு கடிதம்

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட 13ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள கிளாலி காயன் கடவை இணைப்பு வீதியினை புனரமைத்துத் தருமாறு எழுதுமட்டுவாழ் தெற்கு மக்கள் வடக்கு மாகாண ஆளுநருக்கு கோரிக்கை கடிதம் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளனர்.

குறித்த கோரிக்கை கடிதத்தில்,

இவ்வீதியை தினமும் சுமார் 160 குடும்பங்கள் வரை பயன்படுத்தி வருகின்றன. கிளாலியிலுள்ள மீனவர்கள் தமது கடலுணவுகளை கொடிகாமம் சந்தையில் சந்தைப்படுத்த குறித்த வீதியைப் பயன்படுத்தி வருகின்றனர்.

அத்துடன், வைத்தியசாலை, செட்டிக்கேணி வயல்வெளி விவசாயிகள், பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள் எனப் பலரும் குறித்த வீதியைப் பயன்படுத்தி வருகின்றனர். அதுமாத்திரமன்றி, யாழ். மாவட்டத்தையும் கிளிநொச்சி மாவட்டத்தையும் இணைக்கும் பிரதான வீதியாகவும் இவ்வீதி காணப்படுகிறது.

எனவே, குறித்த வீதியின் தேவைப்பாட்டினை உணர்ந்து புனரமைப்புச் செய்ய ஆவண செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம் என்றுள்ளது.

# வீதி அபிவிருத்திக்கு வைக்கப்பட்டிருந்த கம்பிகள் திருட்டு!



## அலவத்துகொடவில் நால்வர் கைது

(விஜேரத்ன ஹல்மடுவ)

அலவத்துகொட, அங்கும்புர வீதி அபிவிருத்திக்கென வைக்கப்பட்டிருந்த கம்பிகளைத் திருடிய நால்வர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அதிக விலையுடைய இருநூறுக்கும் அதிகமான கம்பிகள் இவர்களால் களவாடப்பட்டுள்ளன.

வீதி அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் நிறுவனத்தின் ஊழியர் ஒருவரால் பொலிஸ் நிலையத்தில் அளிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய, இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். வீதியோரத்தில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக களஞ்சியசாலையிலிருந்து கம்பிகள் களவாடப்பட்டுள்ளன.

கம்பிகள் களவாடியபோது, அவற்றை ஏற்றிச்செல்ல முற்பட்ட லொறியொன்றை பொலிஸார் சுற்றிவளைத்துள்ளதுடன் ஒருவரை கைதுசெய்துள்ளனர். அதன் பின்னர் ஏனைய மூவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாரால் லொறி கைப்பற்றப்பட்டபோது அதில் 102 கம்பிகள் ஏற்றப்பட்டுள்ளன. மேலும் 24 கம்பிகள் பிரதான சந்தேக நபரின் வீட்டுக்கு அருகிலிருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டன. சந்தேக நபர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் காட்டுப் பகுதியிலிருந்து மேலும் 78 கம்பிகள் மீட்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பில் அலவத்துகொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# முறுக்கு கேட்டுவந்த நபரால் பெண் முதலாளியின் தங்கச் சங்கிலி அபகரிப்பு

(பீ. பிரேமதிலக)

வர்த்தக நிலையத்தில் முறுக்கு கேட்டுவந்த நபர் அங்கிருந்த பெண் உரிமையாளரின் தங்கச் சங்கிலியை அபகரித்துச் சென்றுள்ள சம்பவம் மீகஹதென்னவில் இடம்பெற்றுள்ளது.

மீகஹதென்ன லிஹிணியாவ பகுதியில் உள்ள வர்த்தக நிலையத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. அங்கு வந்த நபர் ஒருவர் 30ரூபா கொடுத்து அந்தத் தொகைக்கு முறுக்கு தருமாறு கேட்டுள்ளார்.

அதன்போது பெண் உரிமையாளர் முறுக்குகளை எடுக்க முற்பட்டவேளை, அவரது தங்கச் சங்கிலியை அந்த நபர் அபகரித்துச் சென்றுள்ளார். குறித்த தங்கச் சங்கிலியின் பெறுமதி இரண்டரை இலட்சம் ரூபாவென அந்தப் பெண் குறிப்பிட்டுள்ளார். தப்பியோடிய சந்தேக நபரைக் கைதுசெய்வதற்கு பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# உயரதிகாரியின் மது விருந்துக்கு பொலிஸ் பொறுப்பதிகாரிகள் சேவகம்!



## மத்திய மாகாணத்தில் நாள்தோறும் அதிகரிக்கும் அட்டகாசம்

(எப். அஸ்லம்)

மத்திய மாகாணத்தில் மிகப் பிரபலமான அம்மன்கோயில் அமைந்துள்ள மாவட்டத்தின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவரின் செயற்பாடுகள் குறித்து பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன.

அந்த அதிகாரி தனது நண்பர்களுடன் அடிக்கடி மதுபான விருந்துபசாரங்களை நடத்துவதாக அறியமுடிந்தது. அதற்கென மாவட்டத்தின் பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த பொறுப்பதிகாரிகளை, மதுபான போத்தல்களை வாங்கிவருமாறு பணித்துவருகிறாராம்.

இவ்வாறு மதுபான போத்தல்களை வாங்குவதற்கு பணம் கொடுப்பதில்லை என்ற குற்றச்சாட்டும் எழுந்துள்ளது.

கொழும்பு, நுவரெலியா, கேகாலை உள்ளிட்ட பல்வேறு இடங்களிலிருந்து வருகைதரும் தமது உறவினர், நண்பர்களுக்கு மதுபான விருந்து வழங்குவதை வாடிக்கையாக இவர் கொண்டுள்ளார். பொலிஸ் தலைமையகத்தின் பெரும்புள்ளியொருவரின் உறவினர் என்பதால் அவருக்கு சலுகைகளும் அதிகம் எனக் கூறப்படுகிறது.

இந்த அதிகாரி, கொழும்பிலுள்ள அதிகம் பேசப்படும் மயானம் அமைந்துள்ள பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாக கடமையாற்றியபோது இலஞ்சம் பெற்றுக்கொண்டமை, போதைப்பொருள் விநியோகத்துக்கு உதவியமை தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டவர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

# ஹெரோயின் விற்ற காதல் ஜோடி கதிர்காமத்தில் கைது!

(ஏ.ஏ. பிரேமசிறி)

கதிர்காமம் பகுதியில் ஹெரோயின் விற்ற காதலர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அவர்கள் சென்ற முச்சக்கரவண்டியொன்று மீட்கப்பட்டுள்ளதுடன் அதனைச் செலுத்திய சாரதியும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கதிர்காமம், திஸ்ஸமஹாராம ஆகிய பகுதிகளில் இவர்கள் ஹெரோயின் விற்பனைசெய்துவந்தமை விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. கதிர்காமம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள்.

இதனுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரான காதலன் பாணந்துறை, அலுபோமுல்ல பகுதியைச் சேர்ந்தவரென பொலிஸார் தெரிவித்தனர்.

# அமைச்சரவைத் தீர்மானங்கள்

## 07.02.2022 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்




**01. ஐக்கிய அமெரிக்காவின் லா ஜொல்லா (La Jolla) நிறுவனம் மற்றும் ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்துக்கும் இடையில் ஆய்வுக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஒப்பந்தங்களை மேற்கொள்ளல்**

நோய் எதிர்ப்பியல் தொடர்பான ஐக்கிய அமெரிக்காவின் லா ஜொல்லா (La Jolla) நிறுவனம் மற்றும் ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்துக்கும் இடையில் 2017ஆம் ஆண்டு தொடக்கம் கற்கை ஒத்துழைப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், ஆய்வுக் கருத்திட்டங்களை மேற்கொள்வதற்கான ஒத்துழைப்பு நிதியாக இதுவரை 505,840 அமெரிக்க டொலர்கள் ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்துக்கு கிடைத்துள்ளது. காச நோயை ஆரம்பகட்டத்திலேயே இனங்காணல், புரிந்து கொள்ளல் மற்றும் குறைத்துக் கொள்வதற்கான ஆய்வு நடவடிக்கைகளை ஊக்குவித்தல் மற்றும் மாணவர்கள் மற்றும் கல்விக் குழுவினரைப் பரிமாற்றம் செய்து தற்போது காணப்படும் கற்கை ஒத்துழைப்புகளை மேலும் அதிகரித்துக் கொள்வதற்கு இருதரப்பினரும் உடன்பாடொன்றை எட்டியுள்ளனர். அதற்கமைய, குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக நிதியளிப்பு ஒப்பந்தம் மற்றும் பொருட்கள் பரிமாற்ற ஒப்பந்தமொன்றில் கையொப்பமிடுவதற்காக பாதுகாப்பு அமைச்சர் எனும் ரீதியில் ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. இலங்கையில் ஒருங்கிணைந்த டிஜிட்டல் தனித்துவச் சட்டகத்தை நடைமுறைப்படுத்தல்**

இலங்கைக்கான ஒருங்கிணைந்த டிஜிட்டல் தனித்துவச் சட்டகத்தை நிறுவுதலை தேசிய மட்டத்திலான வேலைத்திட்டமாக முன்னுரிமை வழங்கி நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. உயிரியல் அளவீட்டுத் தரவுகளின் அடிப்படையில் தனிநபர் அடையாளத்தை உறுதிப்படுத்தும் உபகரணம், இணையவெளியில் தனிநபர்களின் தனித்துவ அடையாளத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய டிஜிட்டல் கருவி மற்றும் குறித்த இரண்டு கருவிகளையும் தொடர்புபடுத்துவதன் மூலம் டிஜிட்டல் மற்றும் பௌதீகச் சூழலில் தனிநபர் அடையாளத்தை திட்டவட்டமாக உறுதிப்படுத்தக் கூடிய அடையாளங் காணல் முன்மொழியப்பட்டுள்ள ஒருங்கிணைந்த டிஜிட்டல் தனித்துவச் சட்டகத்தின் கீழ் அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. 2019ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இந்தியாவின் பிரதமர் மற்றும் ஜனாதிபதி கோட்டாபயவுக்கு இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது இலங்கையில் ஒருங்கிணைந்த டிஜிட்டல் தனித்துவச் சட்டகத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியை வழங்குவதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டது. அதற்கமைய, குறித்த நிதியளிப்பை பெற்றுக்கொள்வதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காகவும் ஏற்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் குறித்த நிதி வழங்கலின் கீழ் முன்மொழியப்பட்டுள்ள கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் தொழில்நுட்ப அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. மகாவலி நக்கல்ஸ் சேதன விவசாய வலயத்திற்கான சேதன உரத் தயாரிப்பு நிலையத்தை அமைத்தல்**

மொரகஹகந்த, களுகங்கை, மகாவலி எஃப் வலயம் சேதன விவசாய உற்பத்திகளை மேற்கொள்கின்ற நிலைபேறான வலயமாக இலங்கை மகாவலி அதிகாரசபை சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. நஞ்சற்ற சேதன உள்ளீடுகளைப் பயன்படுத்தி விவசாயப் பயிரிடல் மூலம் விவசாய சமூகத்தின் வருமானங்களை அதிகரிப்பதற்கும் சேதன விவசாயம் தொடர்பாக உயர் திறன்களுடன் கூடிய விவசாய சமூகத்தவர்களின் பங்களிப்புடன் தேசிய சேதன விவசாயப் பயிர் உற்பத்திகளின் இலக்கை அடைவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. நீண்டகாலமாகப் பயிரிடுவதற்குத் தேவையான சேதனப் பசளையை குறித்த பிரதேசத்திலேயே உற்பத்தி செய்துகொள்ளும் நோக்கில் சேதன உர நிலையங்கள் இரண்டும் தேவையான ஆய்வுகூட வசதிகளுடன் வெல்லேவெல மற்றும் குருவெல போன்ற மகாவலி பிரிவுகளில் நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன் முதற்கட்டமாக வெல்லேவெல சேதன உர உற்பத்தி நிலையத்தை நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதுடன் அதன்மூலம் வருடாந்தம் 2000 மெற்றிக்தொன் சேதன உரத்தைத் தாயாரிக்க முடியுமென எதிர்வு கூறப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த சேதன உர நிலையத்தை அமைப்பதற்கான ஒப்பந்தத்தை நேரடி ஒப்பந்தமாக பொறியியல் பணிகள் தொடர்பான மத்திய ஆலோசனை பணியகத்திற்கு ஒப்படைப்பதற்காக நீர்ப்பாசன அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. முதலீட்டுப் பிணக்குகள் தொடர்பான மேல் நீதிமன்ற சட்டம்**

இலங்கையில் முதலீடுகளுக்கு நட்புறவுமிக்க சட்ட ரீதியான சூழலை ஏற்படுத்த வேண்டிய சட்ட மறுசீரமைப்புகளை சமர்ப்பிப்பதற்காக நீதி அமைச்சின் விசேட அலகொன்றின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள வர்த்தக சட்ட மறுசீரமைப்பு உபகுழுவுக்கு நீதி அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார். அதற்கமைய, குறித்த குழுவானது 100 மில்லியன் ரூபா அல்லது அதற்கு அதிகமான முதலீடுகளில் மேலெழுகின்ற, 50 மில்லியன் ரூபா நிதி வரையறை கொண்ட பிணக்குகள் தொடர்பாக வழக்கு விசாரணை செய்து தீர்மானிக்கக் கூடிய நீதிமன்ற அதிகாரத்துடன் கூடிய முதலீட்டுப் பிணக்குகள் தொடர்பான மேல் நீதிமன்றத்தை நிறுவுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதற்காக ஏற்பாடுகளை உள்வாங்கி சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்கு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நீதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. புதிய இசைவுத் தீர்ப்பு (Arbitration) சட்டத்தை அறிமுகப் படுத்தல்**

இலங்கையில் இசைவுத் தீர்ப்பு விடயங்கள் பற்றி ஆராய்ந்து புதிய சட்டமொன்றை அறிமுகப்படுத்த வேண்டிய தேவை, நீதி அமைச்சின் விசேட அலகொன்றின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள வர்த்தக சட்ட மறுசீரமைப்பு உபகுழுவால் அடையாளங் காணப்பட்டுள்ளது. இலங்கையில் பாரியளவிலான உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிக்கக்கூடிய வகையிலான இசைவுத் தீர்ப்புக் கட்டத்திலேயோ அல்லது இசைவுத்தீர்ப்பு அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் கட்டத்திலேயோ சமகாலத்தில் காணப்படும் தடைகளுக்குத் தீர்வு காணும் வகையிலான ஏற்பாடுகள் முன்மொழியப்பட்டுள்ள சட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, இசைவுத்தீர்ப்புச் (Arbitration) சட்டமூலத்தை தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நீதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. அதிபர் - ஆசிரியர் சம்பள ஏற்றத்தாழ்வுகளை நீக்குதல் தொடர்பான அமைச்சரவைத் தீர்மானத்தை பிரிவெனா ஆசிரியர்கள், அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட விசேட உதவிப் பாடசாலை ஆசிரியர்களுக்கும் ஏற்புடையதாக்கிக் கொள்ளல்**

அதிபர் - ஆசிரியர் சம்பள ஏற்றத்தாழ்வுகளை நீக்குதல் தொடர்பான அமைச்சரவைத் தீர்மானத்துக்கமைய வெளியிடப்பட்டுள்ள பொது நிர்வாக சுற்றறிக்கை 03/2016( IV) இல் ஏற்பாடுகளை பிரிவெனா ஆசிரியர்கள், அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட விசேட உதவிப் பாடசாலை ஆசிரியர்களுக்கும் ஏற்புடையதாக்கிக் கொள்வதற்காக கல்வியமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# அரசாங்கத்தின் பிரச்சினைகளை மக்கள் தீர்க்கவேண்டிய நிலை உருவாகியுள்ளது



## எதிர்க்கட்சி உறுப்பினர் காவிந்த குற்றச்சாட்டு

அரசாங்கம் நாட்டு மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதாக கூறி ஆட்சிக்கு வந்தது. ஆனால், இன்று அரசாங்கத்தின் பிரச்சினைகளை மக்கள் தீர்க்க வேண்டியுள்ளது - என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் (07) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

இந்த அரசாங்கத்தின் முடிவுகள் எந்தப் பக்கத்திலிருந்து எடுக்கப்படுகின்றன என்பது எங்களுக்குப் புரியவில்லை. எரிபொருளை வழங்க மாட்டோம் என அமைச்சர் ஒருவர் கூறுகிறார்.

எண்ணெய் வழங்காவிட்டால் மின்சாரம் வழங்க மாட்டோம் என இரு தரப்பினரும் மக்களையும் அநாதரவாக ஆக்குகின்றார். இந்நாட்டு மக்கள் இன்று அரசாங்கத்தின் பிரச்சினைகளைக் கேட்டு அந்த அரசாங்கத்தின் பிரச்சினைகளால் பாதிக்கப்படுகின்ற மக்களாக மாறியுள்ளனர்.

எனவே, எமது அரசாங்கத்தில் இந்நாட்டு மக்களின் கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுவதற்கான முறையான வேலைத் திட்டத்துடன் கூடிய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தி வருகின்றோம். இந்த அரசிடம் தொலைநோக்குப் பார்வையோ, திட்டமோ இல்லை.

வைத்தியர்களையும், சுகாதாரத்துறையிலுள்ள ஏனைய அதிகாரிகளையும் கோபப்படுத்துவதன் மூலம் இந்த நாட்டை இவ்வாறு முன்னெடுத்துச் செல்ல முடியாது. இவ்வாறானவர்கள் செயற்பட்டால் நாடு பாரிய பொருளாதார, சமூக அரசியல் வீழ்ச்சியை சந்திக்கும்.

நாம் கூட்டணி அமைக்கவேண்டுமானால், கொள்ளையர்கள், ஊழல்வாதிகளின் கைகளிலிருந்து இரத்தம் சிந்தாத தூய அரசியல் நீரோட்டத்திற்கு வரக்கூடிய புதிய அரசியல் நாகரீகத்தை ஐக்கிய மக்கள் சக்தி சஜித் பிரேமதாசவின் தலைமையில் கட்டியெழுப்ப முயற்சிக்கிறோம். தூய்மையான அரசியல் ஓட்டத்தைக் கட்டியெழுப்ப விரும்பும் குழுவொன்றை ஒன்றிணைத்து அரசாங்கத்தை அமைப்போம் என நம்புகின்றோம்.

இவ்வேளையில் அரசாங்கத்தில் எம்.பிக்கள் மற்றும் அமைச்சர்கள் பலர் எம்முடன் பேசிக்கொண்டிருக்கின்றார்கள். இந்நாடு இனி அரசியல், சமூக, பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைய முடியாது, வீழ்ச்சிக்கு இடமில்லை. எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்கும், எதிர்காலத்தைப் பார்க்கும் அரசியல் நீரோட்டமே தேவை. எந்த சக்தியுடன் கூட்டணி அமைத்தாலும், நாட்டை நேசிக்கும் ஒரு குழுவுடன்தான் கட்டியெழுப்புவோம், புதிதாக குறுக்குவழிகளில் ஆட்சியை எடுக்க நாங்கள் தயாராக இல்லை - என்றார்.

# கேரள கஞ்சாவுடன் சந்தேகநபர் கைது

அநுராதபுரம், நீராவிய பகுதியில் கேரள கஞ்சா விற்பனை செய்துவந்த சந்தேகநபர் ஒருவரை குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றுக் கமைய கடந்த ஞாயிற்றுக்கிழமை அநுராதபுரம், நீராவிய, தேவானம்பிய திஸ்ஸபுர பகுதி வீடொன்றில் நடத்திய சுற்றிவளைப்பின்போது சந்தேகநபரை கைதுசெய்துள்ளதுடன் 850 கிராம் கேரள கஞ்சாவை அநுராதபுரம் வலய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் 51 வயதுடைய அநுராதபுரம் தேவானம்பிய திஸ்ஸபுர பகுதியை வசிப்பிடமாகக் கொண்டவர் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது கேரள கஞ்சா விற்பனை தொடர்பில் இதற்கு முன்னரும் கைதாகி விளக்கமறியலிலிருந்து பிணையில் விடுதலையாகி வந்தவர் என்பது தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர் அநுராதபுரம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப் படவுள்ளார்.

# புத்தளம் மாவட்ட அஹதிய்யா ஆசிரியர்களுக்கு செயலமர்வு

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் மாவட்ட அஹதிய்யா சன்மார்க்க போதனா பீட பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான விசேட செயலமர்வொன்று எதிர்வரும் 13ஆம் திகதி புத்தளம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற வுள்ளது.

புத்தசாசன, கலாசாரம் மற்றும் மதவிவகார அலுவல்கள் அமைச்சு மற்றும் முஸ்லிம் சமய கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக்களமும், வக்ஃபு சபையும் இணைந்து அகில இலங்கை அஹதிய்யா மத்திய சம்மேளனத்தின் வேண்டுகோளின்பேரில் தேசிய போதைப்பொருள் தடுப்பு அமைப்பினால் புத்தளம் மாவட்ட அஹதிய்யா பாடசாலைகளின் சம்மேளனத்தின் நெறிப்படுத்தலுடன் அஹதிய்யா பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்களுக்கு மேற்படி செயலமர்வை நடாத்த திட்டமிட்டுள்ளது.

அந்தவகையில், புத்தளம் மாவட்ட செயலகம் மற்றும் மாவட்ட அஹதிய்யா பாடசாலைகளின் சம்மேளனம் ஆகியவற்றின் ஒருங்கிணைப்புடன் இச்செயலமர்வு முதல் முறையாக நடத்தப்படவிருக்கிறது.

சமூக நல்லிணக்கத்தின் ஊடாக அஹதிய்யா சன்மார்க்கப் போதனா பீட பாடசாலைகளில் கற்கின்ற மாணவர்களுக்கு எவ்வாறு கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுத்தலின் அவசியம், அஹதிய்யா பாடசாலைகள் ஊடாக மார்க்கக் கல்வியை எவ்வாறு முன்னெடுக்கலாம், போதைப்பொருள் பாவனையினால் எவ்வாறான வழிகளில் தீண்டப்பட்டு வருகின்றனர் அதை எவ்வாறு தடுக்கலாம் என்ற தலைப்புகளில் மேற்படி செயலமர்வு நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 13ஆம் திகதி காலை 8 மணிமுதல் மாலை 4 மணிவரை முதல் கட்டமாக தெரிவுசெய்யப்படும் ஐம்பது ஆசிரியர்களுக்கு குறித்த செயலமர்வு நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட அஹதிய்யா பாடசாலைகளின் சம்மேளனத்தின் பொதுச் செயலாளரும், அகில இலங்கை அஹதிய்யா பாடசாலைகளின் மத்திய சம்மேளனத்தின் கல்வி, பரீட்சை மற்றும் பிரசாரக் குழு உறுப்பினருமான பாரூக் பதீன் ஆசிரியர் தெரிவித்தார்.

# தேசமானிய நவாஸுக்கு குருநாகலில் பாராட்டு விழா







(இக்பால் அலி)

நாட்டையும் நாட்டு மக்களையும் நேசித்து புத்தாக்கத்துறையிலும் சமூகப் பணிகளிலும் உயர்ந்து நிற்கும் மனிதர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் அதியுயர் விருதான தேசமானிய விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட தொழிலதிபர் டி.எஸ்.எம்.நவாஸின் 50 வருட சேவையைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு குருநாகல் படகமவில் அமைந்துள்ள ஹோட்டலில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில் மற்றும் அவரது பாரியார் பெரோஸா முஸம்மில் கலந்து கொண்டனர்.

இதில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் முஸ்லிம் விவகார இணைப்புச் செயலாளர் அப்துல் சத்தார். குருநாகல் நகரிலுள்ள சிங்கள, முஸ்லிம், தமிழ் வர்த்தக சங்கப் பிரமுகர்கள் மற்றும் பாடசாலை அதிபர்கள் உள்ளிட்ட பெரு எண்ணிக்கையிலானவர்கள் கலந்துகொண்டனர்.

# மத்திய மாகாணத்தில் தடுப்பூசி பெற்றுக்கொண்டோர் அதிகரிப்பு

மத்திய மாகாணத்தில் கொரோனா தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதனால் உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டிருப்பதாக அந்த மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த மாகாணத்தில் இதுவரை 38 இலட்சத்திற்கும் மேற்பட்டோருக்கு கொவிட் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

கண்டி, மாத்தளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் இதுவரை 38 இலட்சத்து 85 ஆயிரத்து 685 பேருக்கும் மேற்பட்டவர்களுக்கு இதுவரை தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளதாக திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.





கொழும்பு – 13, ஐம்பட்டா வீதியில் அமையபெற்ற ஸ்ரீ முனீஸ்வர முத்துமாரியம்மன் வருடாந்த கும்பாபிஷேக தின தேர்த்திருவிழா உற்சவத்தினை மகா குரு வைத்தியநாத வைகுந்த சிவாச்சாரியார் பூஜைகளை நிகழ்த்துவதையும் ஆலய பிரதம குரு எஸ். சிவநேசன் சர்மா மற்றும் சாதகச்சாரியார் சுந்தர லகுதர சர்மா மற்றும் பிரதமரின் இந்துமத விவகார இணைப்பாளர் சிவஸ்ரீ பாபு சர்மா குருக்கள், கொழும்பு மாநகரசபை உறுப்பினர் காயத்திரி விக்ரமசிங்க ஆகியோரை படத்தில் காணலாம்.

# ஆயிரம் ரூபா மாயையால் தொழிலாளர் உரிமைகள் ஒழிப்பு

## இலங்கை தொழிலாளர் செங்கொடிச் சங்கத்தின் ஆலோசகர் மேனகா குற்றச்சாட்டு

(கண்டி செய்தியாளர்)

கூட்டு ஒப்பந்தம் இரத்துச்செய்யப்பட்டதால் பிரித்தானியர் காலம்முதல் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் அனுபவித்துவந்த தொழில் உரிமைகள் இன்று ஒழிக்கப்பட்டுள்ளதாக இலங்கை தொழிலானர் செங்கொடிச் சங்கத்தின் ஆலோசகரும் முன்னாள் பொதுச் செயலாளருமான மேனகா கந்தசாமி நேற்று (08) தெரிவித்தார்.



கண்டியிலுள்ள இலங்கை தொழிலாளர் செங்கொடிச் சங்க தலைமையத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கூட்டு ஒப்பந்தம் என்பது குறிப்பிட்ட ஒரு தோட்டத்திற்கு மட்டும் உரித்தான ஒன்றல்ல. கூட்டு ஒப்பந்தம் என்பது நாடளாவிய ரீதியில் தொழில் புரியும் சகல தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு கைத்தொழில்களுடன் தொடர்புடைய அனைத்து தொழிலாளர்களுடனும் தொடர்புபட்ட ஒன்றாகும். சுமார் ஆறு இலட்சத்திற்கும் மேற்பட்ட தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடன் தொடர்புபட்டது.

அண்மையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு வழங்குவது என்ற கோரிக்கையை மையப்படுத்தி கூட்டு ஒப்பந்தத்திலிருந்து தோட்ட முதலாளிமார் விலகிக்கொண்டனர். இதனால் தொழிலாளர்கள் தமது தொழில் உரிமை மற்றும் தொழில் பாதுகாப்பு போன்ற இதுவரை காலமும் அனுபவித்துவந்த பல உரிமைகளை இழந்துள்ளனர்.

அதனைவிட தோட்டங்கள் துண்டாடப் படுதல், தோட்டங்களை முறையாகப் பராமரிக்காது காடுகளாக்கி பின்னர் அத்தகைய தோட்டங்களை கைவிடுதல் போன்ற பல பக்கவிளைவுகளுக்கும் தொழிலாளர்கள் முகங்கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன், ஆயிரம் ரூபா என்ற மாயைக் காட்டி தற்போது ஆயிரம் ரூபாவும் இல்லை, கூட்டு ஒப்பந்த உரிமைகளும் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது - என்றார்

ஆகவே, கூட்டு உப்பந்தம் மீண்டும் கொண்டு வரப்படுதல் வேண்டும். இதற்காக இலங்கை தொழிலாளர் செங்கொடிச் சங்கம் தொடர்ந்தும் போராட்டங்களை முன்னெடுக்க இருப்பதாகவும் தெரிவித்தார்.

இங்கு கருத்து தெரிவித்த இலங்கை தொழிலானர் செங்கொடிச் சங்க பொருளாளர் ஆனந்தி சிவசுப்ரமணியம் தெரிவித்ததாவது,

150 வருடகாலமாக அனுபவித்துவந்த உரிமைகள் இன்று மறுக்கப்பட்டு வருகின்றன. எனவே, அவற்றை மீளப் பெற்றுக்கொள்ள மீண்டும் கூட்டு ஒப்பந்தம் கொண்டு வரப்பட வேண்டும், ஆயிரம் ரூபா வேதனம் வழங்கப்படவேண்டும். மேற்படி விடயங்களைப் பெற்றுக்கொள்ள தொழிற் திணைக்களம் தலையிட வேண்டும் என்ற மூன்று கோரிக்கைளையும் முன்வைப்பதாகத் தெரிவித்தார்.

# தெஹ்ரானில் நடைபெற்ற 15ஆவது சர்வதேச சுற்றுலா கண்காட்சியில் இலங்கைத் தூதரகம் பங்கேற்பு

ஈரான் அரசாங்கத்தின் அழைப்பின்பேரில் ஈரானிலுள்ள இலங்கைத் தூதரகம், கடந்த ஜனவரி 29ஆம் திகதிமுதல் பெப்ரவரி முதலாம் திகதிவரை தெஹ்ரானில் நடைபெற்ற 15ஆவது சர்வதேச சுற்றுலா கண்காட்சியில் பங்கேற்றது.

இந்நிகழ்வில் 30 இற்கும் மேற்பட்ட நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் பங்குபற்றிய அதேவேளை, சுற்றுலாத்துறையில் செயற்படும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் தமது சேவைகளை காட்சிப்படுத்தியிருந்தன.

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தின் உதவியுடன் தூதரகம் ஈரானிய பயண முகவர்கள் மற்றும் பயணிகளுக்கு சுற்றுலா ஊக்குவிப்பு வீடியோக்கள், சுற்றுலா பிரசுரங்கள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் மூலம் இலங்கையை ஆரோக்கியமான பயண இடமாக காட்சிப்படுத்தியது. தூதரக ஊழியர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் சர்வதேச சுற்றுலா நிறுவனங்களிடையே இலங்கையில் சுற்றுப்பயணங்களை ஏற்பாடுசெய்யும் முக்கிய இலங்கைப் பயண நிறுவனங்களின் விவரங்களைப் பகிர்ந்துகொண்டனர்.

கண்காட்சியின்போது, தூதுவர் விபுலதேஜா விஸ்வநாத் அபோன்சு, ஈரானின் சுற்றுலா பிரதி அமைச்சர் அலி அஸ்கர் ஷல்பாபியன் ஹொசைன் அபாதியைச் சந்தித்து, இலங்கைக்கும் ஈரானுக்கும் இடையிலான சுற்றுலாப் பரிமாற்றங்களை மேம்படுத்துவதற்கான வழிகள் மற்றும் வழிமுறைகளைப் பற்றி கலந்துரையாடினார். இலங்கையில் சுற்றுலாத்துறையில் ஏற்பட்டுள்ள சமீபத்திய முன்னேற்றங்கள் குறித்து அவர் விவரித்ததுடன், வனவிலங்குகள், உண்மையான உணவு வகைகள் மற்றும் தனித்துவமான ஆயர்வேத மருந்து முறை போன்ற அற்புதமான சுற்றுலாத்தலமாக நாட்டின் தனித்துவத்தை விவரித்தார். இரு நாடுகளுக்கிடையிலான சுற்றுலா ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவதற்கு தனது முழு ஆதரவையும் பிரதி அமைச்சர் உறுதியளித்தார்.







இக்கூட்டத்தில், ஈரானின் விமானப் போக்குவரத்து மற்றும் சுற்றுலா முகவர்கள் சங்கத்தின் தலைவர் ஹார்மடோல்லா ரஃபிய், கண்காட்சியில் தூதுவர் மற்றும் அவரது பணியாளர்கள் பங்கேற்றதைப் பாராட்டினார். சுற்றுலாவை மேம்படுத்துவதிலும், இரு நாடுகளுக்குமிடையிலான மக்களிடையேயான தொடர்பை விரிவுபடுத்துவதிலும் இலங்கை சுற்றுலா சங்கங்களுடன் இணைந்து செயற்படுவதற்கு தமது சங்கம் ஆர்வமாகவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். சுற்றுலாத்துறையின் கூட்டு முயற்சியானது இலங்கைக்கும் ஈரானுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதுடன், ஏனைய துறைகளிலும் இருதரப்பு ஒத்துழைப்பை விரிவுபடுத்த உதவும் என தூதுவர் விஸ்வநாத் அபோன்சு சுட்டிக்காட்டினார்.

அந்தந்த மாகாணங்களில் இலங்கை சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரிய தலங்களின் கீழ் உள்ள நகரங்களான இஸ்பஹான் மற்றும் ஷிராஸ் ஆகிய நகரங்களின் பெவிலியன்களை தூதுவர் பார்வையிட்டதுடன், இஸ்பஹானின் கலாசார பாரம்பரியம் மற்றும் சுற்றுலா அமைப்பின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அலிரேசா எய்சாடி மற்றும் ஷிராஸின் கலாசார பாரம்பரியம் மற்றும் சுற்றுலா அமைப்பின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி மொஹ்சென் அமெரி ஆகியோருடன் கலந்துரையாடினார்.

# மட்டக்களப்பு பட்டிருப்பு தேசிய பாடசாலையில் தாமதமாக வழங்கப்பட்ட பரீட்சை வினாத்தாள்


## மாணவர்கள் - பெற்றோர் விசனம்

(மட்டக்களப்பு நிருபர்)

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் (07) ஆரம்பிக்கப்பட்ட க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிருப்பு (களுவாஞ்சிகுடி) தேசிய பாடசாலை பரீட்சை நிலையத்தில் நடைபெற்ற பரீட்சையின்போது வினாத்தாள் நேர காலதாமதமாக வழங்கப்பட்டதாக மாணவர்களும் பெற்றோரும் விசனம் தெரிவிக்கின்றனர்.





திங்கட்கிழமை (07) நடைபெற்ற இணைந்த கணித பாடப் பரீட்சையின்போது, வழங்கப்பட்ட வினாத்தாள்களில் முதலாம் பகுதியும் இரண்டாம் பகுதியும் காலை 8.30 மணிக்கே மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், குறித்ததாள்களில் இரண்டாம் பகுதி வினாத்தாள் காலை 8.30 மணிக்கு வழங்கப்பட்டிருந்ததோடு, மற்றைய முதலாம் பகுதி வினாத்தாள் இன்னும் வழங்கப்படவில்லையே சேர் என மாணவர்கள், பரீட்சை மேற்பார்வையாளரிடம் கோரியதற்கிணங்க, அதன்பின்னர் காலை 10 மணியளவில் மற்றைய வினாத்தாள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டதாகவும், எனினும், பரீட்சை வினாத்தாள்கள் 11.40 மணிக்கு சரியாக முடிவுறுத்தப்பட்டதாகவும் மாணவர்களும் பெற்றோரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் குறித்து பெற்றோர் பட்டிருப்பு வலயக்கல்வி அலுவலகத்திற்குச் சென்று தமது பிள்ளைகளுக்கு நடந்த அநீதி தொடர்பில் எழுத்துமூலம் பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு முறைப்பாடு தெரிவித்துள்ளனர். இந்நிலையில், இவ்விடயம் அறிந்த நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், பட்டிருப்பு வலயக்கல்வி அதிகாரிகளுடனும் பெற்றோருடனும் கலந்துரையாடினார்.

நேற்று நடைபெற்ற பரீட்சையின்போது மாணவர்களுக்கு இழைக்கப்பட்ட தவறு தொடர்பாக குறித்த பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் படுவதாக வலயக்கல்விப் பணிப்பாளர் என்னிடம் தெரிவித்தார். எனினும், மாணவர்களுக்கு நடந்த அநீதி தொடர்பில், நான் கல்வியமைச்சரை நேரில் சந்தித்து அவரது கவனத்திற்குக் கொண்டு செல்வேன் என இதன்போது ஊடகங்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் கருத்துத் தெரிவித்தார்.

# 249 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் பன்சேனை கிராமத்துக்கு கொங்கிறீட் வீதி

(மட்டக்களப்பு நிருபர்)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படும் "அனைவருக்கும் சுத்தமான குடிநீர்" தேசிய வேலைத்திட்டத்தின்கீழ் மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட காஞ்சிரங்குடா கிராமத்துக்கான குடிநீர் இணைப்பினை வழங்குவதற்கான ஆரம்ப நிகழ்வுகள் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.





மட்டக்களப்பு மாவட்டத்தின், மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட, காஞ்சிரங்குடா கிராமத்துக்கான குடிநீர் வழங்கும் திட்டத்தினையும், காஞ்சிக்குடா தொடக்கம் பன்சேனை வரையிலான 6 கிலோமீற்றர் பிரதான வீதியினை கொங்கிறீட் வீதியாக புனரமைப்பதற்கான ஆரம்பகட்ட பணிகளையும் பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு குறித்த இரண்டு திட்டங்களையும் ஆரம்பித்து வைத்துள்ளார்.

இராஜாங்க அமைச்சரின் சிபாரிசுக்கமைய, நீர் வழங்கல் அமைச்சின் ஊடாக காஞ்சிரங்குடா கிராமத்தில் இவ்வாறு ஆரம்பித்து வைக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டத்தின் ஊடாக சுமார் 125 குடும்பங்கள் பயனடையவுள்ளதுடன், இதற்காக முதற்கட்டமாக மூன்று மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, குருந்தையடி முன்மாரி கிராமத்தில் இருந்து ஆரம்பித்து பன்சேனை வரையாக பிரதான வீதியாக நீண்டகாலமாக குண்டும் குழியுமாக காணப்பட்ட சுமார் 6 கிலோ மீற்றர் வீதியானது வீதி பெருந்தெருக்கள் அமைச்சின் ஊடாக 249 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் ஊடாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மேற்பார்வையின் கீழ் செப்பனிடும் பணிகளும் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வுகளில் மண்முனை தென்மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர் வை.சந்திரமோகன், நீர்ப்பாசன நிலைய பொறுப்பதிகாரி நிர்மலன், இராஜாங்க அமைச்சரின் இணைப்புச்செயலாளர்கள் ஏனைய அரச திணைக்களங்களின் அதிகாரிகள், முற்போக்கு தமிழர் கழகத்தின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# முஷாரப் எம்.பி. – பொத்துவில் பிரதேச சபை தவிசாளர் கிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளருடன் சந்திப்பு

(மாவடிப்பள்ளி நிருபர்)

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் மற்றும் பொத்துவில் பிரதேச சபை தவிசாளர் அப்துல் ரஹீம் ஆகியோர் கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் டாக்டர் ஏ.ஆர்.எம்.தௌபீக்கை சந்தித்து கலந்துரையாடினார்.



இச்சந்திப்பில் அண்மையில் டைப் ஏ ஆகத் தரமுயர்த்தப்பட்ட பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் அடுத்தகட்ட முன்னேற்றம் பற்றி கலந்தாலோசிக்கப்பட்டது.

அதற்கிணங்க, மாகாண சுகாதாரப் பணிப்பாளர் விரைவில் பொத்துவில் வைத்தியசாலைக்கு விஜயம் செய்து அங்கு ஒதுக்கீடு செய்ய வேண்டிய ஆளணி வெற்றிடங்கள் குறித்து முடிவு செய்வதாகவும் நோயாளர் பதிவேட்டு முறைமையை கணினி மயப்படுத்துவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை ஆரம்பித்து வைப்பது தொடர்பாகவும் இங்கு தீர்மானிக்கப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



பெரும்போகத்தில் ஏற்பட்ட குறைகள சிறுபோகத்தில இல்லாமல் செய்யப்போறாராம் சனாதிபதி..! பெரும்போகம் நட்டமானது தான் சொன்ன சேதனபசள திட்டம் எண்டத ஒப்புக்கொண்ட மனிசன பாராட்டுவம்.. இப்பதான் அம்மாச்சிக்கு விளங்கி இருக்கு ராணுவ கட்டளை போடிமாருட்ட பலியாது எலுவா..புரிஞ்சது போதும்!

# திருமலை திரியாய் பகுதியில் ஆணொருவரின் சடலம் மீட்பு

(திருகோணமலை நிருபர்)

திருகோணமலை குச்சவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திரியாய் பிரதேசத்தில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக குச்சவெளி பொலிஸார் தெரிவித்தனர்.



குச்சவெளி பிரதேசத்தில் நேற்று முன்தினம் காலை பொதுமக்களினால் இனங்காணப்பட்ட குறித்த சடலம் தொடர்பில் குச்சவெளி பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் களுத்துறை, உக்வத்தை விஜித மாவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த சனத் எடுக்சூரிய (வயது 39) எனவும் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவ்வாறு மீட்கப்பட்ட சடலம் கொலையா அல்லது இயற்கை மரணமா என குச்சவெளி பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், குறித்த சடலம் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் குச்சவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

# மூதூர் நெய்தல் நகர்ப் பகுதியில் வலம்புரிச் சங்குகளுடன் ஒருவர் கைது

(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நெய்தல் நகர் பகுதியில் சட்டவிரோதமான முறையில் வலம்புரிச் சங்கு இரண்டினை வைத்திருந்த நபர் ஒருவரை இன்று 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மூதூர் நீதிமன்ற நீதிவான் நேற்று (08) உத்தரவிட்டுள்ளார்.

தாரீக் வீதி, நெய்தல் நகர் மூதூர் பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய ஒருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் இரண்டு வலம்புரிச் சங்குகளை விற்பனை செய்வதற்காக வைத்திருந்த நிலையிலே மூதூர் - கட்டைப்பறிச்சான் இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் விசேட அதிரடிப்படையினருடன் இணைந்து இராணுவப் புலனாய்வாளர்கள் வலம்புரிச் சங்குகளுடன் சந்தேக நபரை கைதுசெய்து, மூதூர் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபரை பொலிஸார் மூதூர் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோதே விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் நேற்று கடமையேற்பு

(கல்லடி நிருபர்)

கிழக்கு மாகாண விவசாய, கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனக் கூட்டுறவு அபிவிருத்தி, கூட்டுறவு ஊழியர் மற்றும் கடற்றொழில் அமைச்சின் செயலாளராக ஐ.ஜே.ஜீ.முத்துவண்டா தனது அமைச்சின்



கடமைகளை சர்வமத அனுஷ்டானங்களுடன் நேற்று (08) தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார். இந்நிகழ்வில் கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமான ஏ.எல்.எம்.அஸ்மி உட்பட அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# கோட்டைக்கல்லாறு அம்பாரையில் பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவ திருவிழா ஆரம்பம்

(பாண்டிருப்பு நிருபர்)

கோட்டைக்கல்லாறு அருள்மிகு அம்பாரையில் பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவத் திருவிழாவும் மாசி மகத் தீர்த்தமும் நேற்று (08) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.



நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ள திருவிழா, தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளன. இதில் எதிர்வரும் 14ஆம் திகதி வேட்டைத்திருவிழாவும் 17ஆம் திகதி தீர்த்தோற்சவமும் 18ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

ஆலய உற்சவ பிரதம குரு சிவஸ்ரீ சு.லக்ஸ்மன் குருக்கள் தலைமையில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

ஆலயத்துக்கு வருகைத் தரும் அடியார்கள் கொவிட்-19 விதிமுறைகளுக்கமைவாக சுகாதார விதிமுறைகளை கடைப்பிடித்து தங்களது வழிபாடுகளில் ஈடுபடவேண்டும் என ஆலய நிர்வாகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# மூதூர் தென்கிழக்குப் பல்கலை பட்டதாரிகள் சங்கத்தின் உத்தியோகபூர்வ சீருடை அறிமுகம்

மூதூர் தென்கிழக்குப் பல்கலைக்கழக பட்டதாரிகள் சங்கத்தின் உத்தியோகபூர்வ சீருடை அறிமுக நிகழ்வு சங்கத்தின் தலைவர் ஜே.எம்.ஜஹீஸ் ஆசிரியர் தலைமையில் அண்மையில் மூதூர் தென்கிழக்குப் பல்கலைக்கழக பட்டதாரிகள் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் சிறப்பாக நடைபெற்றது.



மூதூரில் நீண்டகாலமாக கல்வி மற்றும் சமூகம் சார்ந்த துறைகளில் சிறந்த சேவையாற்றி வரும் தென்கிழக்குப் பல்கலைக்கழக பட்டதாரிகள் சங்கத்தின் உறுப்பினர்களுக்கான உத்தியோகபூர்வ சீருடையினை இந்நிகழ்வின் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த மூதூர் தென்கிழக்குப் பல்கலைக்கழக பட்டதாரிகள் சங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினரும், மூதூர் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலையின்) அதிபருமான எஸ்.ஏ.முஹீர் மற்றும் மூதூர் தென்கிழக்குப் பல்கலைக்கழக பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் ஜே.எம்..ஜஹீஸ் ஆசிரியர் ஆகியோர் அறிமுகம் செய்து வைத்தனர்.







திருகோணமலை சோனகவாடி நவாத்துல் உளூம் முன்பள்ளியின் முதலாம் ஆண்டுக்கு மாணவர்களை அனுப்பிவைக்கும் நிகழ்வு அதிபர் வசீலா மஹ்ரூப் தலைமையில் நடைபெற்றபோது பிரதம அதிதியாக டாக்டர் எம்.எம்.முனாஸ் உள்ளிட்ட அதிதிகள் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும் மாணவர்களின் கலை நிகழ்வையும் மாணவர்கள் அதிதிகளுடன் நிற்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-கந்தளாய் நிருபர்)

# கிழக்குக் கடற்பரப்பில் கரையொதுங்கும் வெளிநாட்டுக் கழிவுகளால் அசௌகரியம்

## மீனவர்களும் பொதுமக்களும் விசனம்






(மட்டக்களப்பு நிருபர்)

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தின் தேத்தாதீவு, களுதாவளை, களுவாஞ்சிகுடி, ஓந்தாச்சிமடம் உள்ளிட்ட கடற்கரை ஓரங்களில் பல வெளிநாடுகளின் பெயர் பொறிக்கப்பட்ட கழிவுகள் கரை ஒதுங்குவதாக பொதுமக்களும் மீனவர்களும் விசனம் தெரிவிக்கின்றனர்.

காலணிகள், வெற்றுப் போத்தல்கள், குளிர்ப்பான போத்தல்கள், மூங்கில்கள் உள்ளிட்ட பல பொருட்கள் கடலலையில் அள்ளுண்டு கரையொதுங்குவதாகவும், இதனால் சூழலுக்குப் பாதிப்புகள் ஏற்படுவதாகவும் கடற்கரையை ரசிக்க வருபவர்களுக்கும் இக்கழிவுகள் பெரும் தடையாகக் காணப்படுவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்துமாறு வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# திருகோணமலை சிறைச்சாலையில் 125 மரக்கன்றுகள் நாட்டிவைப்பு




(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை சிறைச்சாலையினால் "இயற்கை வளத்தினை அதிகரிப்போம்" எனும் தொனிப் பொருளில் திருகோணமலை சிறைச்சாலை புனர்வாழ்வு பகுதியின் ஏற்பாட்டில் 125 மரக்கன்றுகள் நாட்டி வைக்கும் நிகழ்வு நேற்று (08) திருகோணமலை சிறைச்சாலை அத்தியட்சகர் வசந்த குமார டேப் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது கப்பல்துறையில் அமைந்துள்ள சிறைச்சாலைக்குரிய காணியில் 125 மரக்கன்றுகள் நாட்டி வைக்கப்பட்டன. இதில் மகோகனி, தேசி, நாகமரம் மற்றும் சமுளை போன்ற மர வகைகள் நாட்டி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் சிறைச்சாலை அத்தியட்சகர் வசந்த குமார டேப், பிரதான ஜெயிலர் சம்பத் ஜெயவர்தன, புனர்வாழ்வு அதிகாரி எப்.முபாரக், பி.சுசிதரன், சிறைக்கைதிகள் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் சி.டி.பாஸ்கரன், உபதலைவர் சட்டத்தரணி ஜே.எம்.லாஹிர் மற்றும் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டார்கள்.

# மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் ஸ்ரீசித்தி விநாயகர் ஆலய சங்காபிஷேகம்




(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட செயலக ஸ்ரீசித்தி விநாயகர் ஆலய சங்காபிஷேக நிகழ்வு நேற்று முந்தினம் (07) மிகவும் எளிமையான முறையில் நடைபெற்றது.

அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட சங்காபிஷேக பூசை நிகழ்வுகள், மாவட்ட செயலக ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பிரதம குரு ஜெகதீசக் குருக்கள் மற்றும் அவரது குழுவினரால் விசேட அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெற்றது. ஆலய கும்பாபிஷேகம் இடம்பெற்று 5ஆவது ஆண்டு நிறைவையொட்டி 108 சங்குகளை கொண்டு இவ் விசேட சங்காபிஷேக நிகழ்வுகள் இடம்பெற்றன.

இப்பூசை நிகழ்வுகளில் ஆலய நிர்வாகத்தினரின் பங்களிப்புடன் அன்னதானம் வழங்கிவைக்கப்பட்டதுடன் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.




**புதிதாக நியமிக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் திருமதி கலாமதி பத்மராஜா மற்றும் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே. முரளிதரன் ஆகியோரை கிழக்கு மாகாணத்தின் முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை சந்தித்துக் கலந்துரையாடுவதை படங்களில் காணலாம்.**

(படங்கள் - மாவடிப்பள்ளி நிருபர்)

# பெரியநீலாவணை அக்பர் வித்தியாலயத்தில் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் சிறுவர் சந்தை




(மருதமுனை மேலதிக நிருபர்)

பெரியநீலாவணை அக்பர் வித்தியாலயத்தில் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான சிறுவர் சந்தை நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. வித்தியாலய அதிபர் எம்.சி.மபாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த சிறுவர் சந்தை நிகழ்வில், கல்முனை கல்வி வலய கோட்டக் கல்விப் பணிப்பாளர் வெள்ளத்தம்பி முஹமட் ஸம்ஸம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இங்கு பிரதம அதிதி மற்றும் ஏனைய அதிதிகள் மலர்ச்செண்டு கொடுத்து வரவேற்கப்பட்டனர். பிரதம அதிதி சந்தையை திறந்துவைத்து பார்வையிட்டு பொருட்களையும் கொள்வனவு செய்தார்.

இந்த சிறுவர் சந்தை நிகழ்வில் சிறுமி இளநீர் விற்பனை செய்தார். மேலும் சிலர் சில்லறைக் கடை, தேநீர் கடை, உள்ளிட்ட பல தரப்பட்ட கடைகளை ஏற்பாடு செய்திருந்தமை சிறப்பம்சமாகும்.

இந்த சிறுவர் சந்தையில் அதிதிகள், ஆசிரியர்கள், பிரமுகர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் பொருட்களைக் கொள்வனவு செய்து மாணவர்களை ஊக்குவித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# எழுத்தறிவு வழங்கிய ஆசான்களுக்கு மருதமுனை அல்- மனாரில் கௌரவம்!






மருதமுனை அல்- மனார் 84 சாதாரண தர வகுப்பினர் தமக்கு எழுத்தறிவு வழங்கிய ஆசிரியர்களை கௌரவித்து நன்றி தெரிவித்த நிகழ்வு அண்மையில் அல்-மனார் தேசிய பாடசாலையின் பெண்கள் பிரிவில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் எஸ்.எம்.எம்.எஸ் இஸ்மாயில் மௌலானா (அதிபர்), எஸ்.எம்.எம்.பீர் முஹம்மது (அதிபர்), ஏ.எல்.மீரா முஹைதீன் (அதிபர்), எம்.சி.அஹமது முஹைதீன் (அதிபர்), நூர் முஹம்மது (ஆசிரியர்), ஏ.எல்.எம். அப்துல்லா (ஆசிரியர்) மற்றும் பாரூக் (ஆசிரியர்) ஆகியோரே நன்றியுடன் கௌரவிக்கப்பட்ட அதிபர், ஆசிரியர்களாவர்.

அதனைத் தொடர்ந்து 84 வகுப்பினரின் பிள்ளைகளான 2019 / 2020 சாதாரண தரப் பரீட்சை மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்களும் பாராட்டப்பட்டனர்.

மேலும், அல்குர்ஆனை மனனம் செய்த ஹாபிஸ் முகமது புசைல் உம்மு ஹானி (Haafiz MOHAMED FUSAIL UMMU HANI) - மேற்படிப்புக்காக உற்சாகமூட்டும் வகையில் பாராட்டப்பட்டதுடன், 84 வகுப்பைச் சேர்ந்த மருதமுனையின் முதல் பெண் கலாநிதி என்ற ரீதியில் மஷ்ரூபா முகமது மஜீத் கௌரவிக்கப்பட்டார்.

"ஓய்வு நிலையை அடைந்தபோதிலும் எம்மை நன்றியோடு நினைவு கூர்ந்தமைக்கு தத்தமது நன்றிகளை தெரிவித்த மேற்படி அதிபர்களும் ஆசிரியர்களும் உங்களைப் போன்று உங்கள் பிள்ளைகளும் கல்வியில் முன்னேற்றம் பெற வேண்டும். அவர்கள், அவர்களுக்கு எழுத்தறிவு வழங்கிய ஆசான்களுக்கு கௌரவமளிக்க வேண்டும் என்ற பிரார்த்தனைகளுடன் நன்றி தெரிவித்தனர்.

அதேவேளை, இந்தக் குழுவினர், மேலும் சில ஆசிரியர்களை எதிர்காலத்தில் கௌரவிக்க திட்டமிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. உண்மையில், மருதமுனை அல்- மனார் 84 வகுப்பினரின் இந்த செயற்பாடு ஏனைய வகுப்பினர்களுக்கும் சிறந்த முன்மாதிரியான செயற்பாடாகும்.

# சுதந்திர தினத்தை முன்னிட்டு கல்முனையில் சிரமதானம்!





(மாளிகைக்காடு நிருபர்)

கல்முனை கிளுகிளுப்பு அமைப்பின் ஜனாஸா நலன்புரி பிரிவின் ஏற்பாட்டில் இலங்கையின் 74ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு கல்முனை நூரானியா மையவாடியில் சிரமதான வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

அமைப்பின் ஜனாஸா நலன்புரி பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டு அமைப்பின் தலைவர் ஏ.எம்.ஆசிரின் வழிகாட்டலில் நடைபெற்ற இந்நிகழ்வில், அமைப்பின் பெரும்பாலான உறுப்பினர்கள் கலந்துகொண்டதோடு, இளைஞர்கள் பலரும் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

செடிகள், புற்கள் அடர்த்தியாக வளர்ந்திருந்தமையினால் ஜனாஸா நல்லடக்கம் செய்ய போதிய இடவசதி இல்லாத நிலையில் மேற்கொள்ளப்பட்ட இந்த சிரமதானத்தின் பின்னர் குறித்த நூரானியா மையவாடி இப்போது அழகாக காட்சியளிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# மட்டக்களப்பு புதுமுகத்துவாரம் இக்னேசியஸ் வித்தியாலயத்தில் டெங்கு ஒழிப்பு சிரமதானம்




(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு புதுமுகத்துவாரம் இக்னேசியஸ் வித்தியாலயத்தில் மூன்று முக்கிய நிகழ்வுகள் நேற்று (08) இடம்பெற்றன.

இதனடிப்படையில் தேசிய மாணவர் சிப்பாய் படையணி வீரர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் இணைந்து டெங்கு ஒழிப்புக்கான பாரிய சிரமதானமொன்றை மேற்கொண்டனர். இதன்போது பாடசாலை வளாகம் மற்றும் பாடசாலை சுற்றுப்புறம் என்பன சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது.


அத்தோடு மட்டக்களப்பு வலயக்கல்வி அலுவலகத்தால் வழங்கப்பட்ட தரம் ஒன்று தொடக்கம் எட்டு வரையிலான மாணவர்களுக்கான வீட்டை அடிப்படையாகக் கொண்ட சுதந்திரமான கற்றல் செயற்பாடுகளடங்கிய கையேடு மற்றும் முகக்கவசம் ஆகியனவும் இதன்போது மாணவர்களுக்குக் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வுகள் வித்தியாலய அதிபர் திருமதி வசந்தி ஜெயச்சந்திரராசா தலைமையில் இடம்பெற்றது. இதேவேளை மட்டக்களப்பு தேசிய மாணவர் படையணியின் 38ஆவது படைப்பிரிவு அதிகாரிகளின் வருடாந்த உடற்தகைமைப் பரீட்சை மற்றும் 2022 ஆம் ஆண்டுக்கான சார்ஜன்ட் பாடநெறி ஆரம்ப நிகழ்வு ஆகியன மட்டக்களப்பு புதுமுகத்துவாரம் இக்னேசியஸ் வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுகள் 38ஆவது படைப்பிரிவின் கட்டளையிடும் அதிகாரி லெப்டினன்ட் கேர்ணல் ஜீ.டபிள்யூ.ஜீ.எச்.நிலந்த தலைமையில் நடைபெற்றன.

2022ஆம் ஆண்டுக்கான சார்ஜன்ட் படைநெறி இரண்டு மாதங்களைக் கொண்டதோடு, வாரத்தில் இரண்டு நாட்கள் நடைபெறுமென கட்டளையிடும் அதிகாரி லெப்டினன்ட் கேர்ணல் ஜீ.டபிள்யூ.ஜீ.எச்.பண்டார தெரிவித்தார். இப்பயிற்சி நெறிக்கென 52 வீரர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# உப்புவெளி துளசிபுரத்தில் எரிவாயு அடுப்பு வெடிப்பு



(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தின் உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துளசிபுரம் பகுதியில் எரிவாயு அடுப்பு வெடித்ததில் வீடு சேதமடைந்துள்ளதாக உப்புவெளி பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ் வெடிப்புச் சம்பவம் நேற்று (08) பகல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

துளசிபுரம் பகுதியில் அமைந்துள்ள வீடு ஒன்றிலேயே புதிய எரிவாயு அடுப்பு வெடித்து சிதறியுள்ளதாகவும், வீட்டின் மேல்பகுதி (சிவிலிங்) போன்றன சேதமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# பெரியகல்லாறு உதயபுரம் பாடசாலைக்கு விளையாட்டு உபகரணங்கள் கையளிப்பு

(துறைநீலாவணை நிருபர்)

பட்டிருப்பு கல்வி வலயத்துக்குட்பட்ட பெரியகல்லாறு உதயபுரம் தமிழ் வித்தியாலயத்துக்கு ரொட்டரிக் கழகத்தினால் பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு வித்தியாலய முதல்வர் சி.சசிதரன் தலைமையில் நடைபெற்றது.

பாடசாலையில் விளையாட்டு உபகரணங்கள் பற்றாக்குறையாக உள்ளமை தொடர்பாக ரொட்டரிக்கழக திருகோணமலை கிளைக்கு கடிதம் ஊடாக தெரியப்படுத்தியமைக்கு அமைவாக குறித்த விளையாட்டு உபகரணங்கள் பாடசாலைக்கு கையளிக்கப்பட்டன.

விளையாட்டு உபகரணங்களை கையளிக்கும் நிகழ்வில் ரொட்டரிக் கழகத்தின் திருகோணமலை மாவட்ட முன்னாள் தலைவர் ஜே.ரொஷான் கலந்துகொண்டு விளையாட்டு உபகரணங்களை, பாடசாலை நிர்வாகத்தினரிடம் வழங்கிவைத்தமை குறிப்பிடத்தக்கது.



# அஷ்ரப்பின் கனவை தென்கிழக்குப் பல்கலை சமூகம் நிறைவேற்ற உறுதிபூண வேண்டும்

## பட்டமளிப்பு விழாவில் நீதியரசர் திலீப் நவாஸ் தெரிவிப்பு

(நூருல் ஹுதா உமர், சலீம் றமீஸ்)

தென்கிழக்குப் பல்கலைக்கழகம் என்றால் மறைந்த அஷ்ரப் எல்லோருக்கும் நினைவில் வருவார். அவர் அரசியலிலிருந்து ஓய்வுபெற்று சட்டபீட மாணவர்களுக்கு தன்னுடைய சட்டம் சார்ந்த அறிவை வழங்க வேண்டும் எனும் அவா இருந்தது. அவரது கனவுகள் மிக தூரநோக்கு கொண்டதாக அமைந்திருந்தன. அவரது கனவை நிஜமாக்கும் பொறுப்பு இன்றைய பல்கலைக்கழக சமூகத்திற்கு இருக்கிறது - என உயர்நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம்.திலீப் நவாஸ் தெரிவித்தார்.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கரின் தலைமையில் கலைப்பீட மாணவர்களுக்கு பட்டமளிக்கும் நிகழ்வாக இடம்பெற்ற தென்கிழக்குப் பல்கலைக்கழக 14ஆவது பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது நாளின் பிரதம பேச்சாளராக கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றிய அவர்,

தென்கிழக்குப் பல்கலைக்கழகம் என்றால் மறைந்த அஷ்ரப் எல்லோருக்கும் நினைவில் வருவார். அவர் அரசியலிலிருந்து ஓய்வுபெற்று சட்டபீட மாணவர்களுக்கு தன்னுடைய சட்டம் சார்ந்த அறிவை வழங்கவேண்டும் எனும் அவா இருந்தது. அவரது கனவுகள் மிக தூரநோக்கு கொண்டதாக அமைந்திருந்தன. இந்த பல்கலைக்கழகத்தில் சட்டபீடம் மட்டுமன்றி வைத்தியபீடமும் காலத்தின் தேவையாக உள்ளது. கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையை இணைத்துக்கொண்டு மருத்துவ பீடத்தை உருவாக்க முயற்சிகளை எடுக்கவேண்டும். எதிர்காலம் ஆங்கிலத்தை மையமாகக் கொண்டுள்ளதால் எதிர்கால உயர்கல்வி பாடத்திட்டங்கள் ஆங்கில மொழிமூலமே அமையவேண்டும். மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகள் இந்தக் கொள்கையை வெகுவாக பின்பற்ற ஆரம்பித்துவிட்டார்கள். நாம் எதிர்கால சந்ததியினரை கருத்திற்கொண்டு எமது திட்டங்களில் பாரிய மாற்றங்களை உருவாக்க வேண்டும் - என்றார்.

இந்நிகழ்வில் பேராசிரியர் எஸ்.தில்லைநாதனுக்கு இலக்கியப் பணியை பாராட்டி கௌரவ கலாநிதி பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், கலைப்பீடத்தைச் சேர்ந்த 567 மாணவர்களுக்கு இன்றைய



அமர்வின்போது பட்டங்கள் வழங்கப்பட்டன. மேலும் 04 மாணவர்களுக்கு முதுகலைமானி பட்டம் வழங்கப்பட்டது.

2013/14 கல்வியாண்டின் சிறந்த மாணவிக்கான கலாநிதி எம்.எல்.ஏ.காதர் விருது அப்துல் வஹாப் பாத்திமா பினாஸிர்க்கும் அதே கல்வியாண்டில் பேராசிரியர் கைலாசபதி விருது செய்யது இப்ராஹிம் பாத்திமா பஹ்மியாவுக்கும் வழங்கப்பட்டன. 2014/15 கல்வியாண்டின் சிறந்த மாணவிக்கான கலாநிதி எம்.எல்.ஏ. காதர் விருது எஸ்.வை.யூ.பாத்திமா றுமானா மௌலானாவுக்கும் அதே கல்வியாண்டில் பேராசிரியர் கைலாசபதி விருது எம்.எஸ். சுமய்யாவுக்கும் வழங்கப்பட்டன.

### திருமலை சண்முகா பாடசாலை ஆசிரியை விவகாரம்;

# பொய் செய்தி வெளியிட்டதாக ஊடகங்களிடம் நஷ்டஈடு

## தலா 15 இலட்சம் கோரி சட்டத்தரணி வாயிலாக கடிதம் அனுப்பிவைப்பு

(ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை சண்முகா இந்துக் கல்லூரிக்கு கடமையேற்கச்சென்று வெளியேற்றப்பட்ட ஆசிரியை பஹ்மிதா றமீஸ் அது சம்பந்தமாக பொய்யான செய்தி வெளியிட்ட ஊடகங்களிடம் தலா பதினைந்து இலட்சம் ரூபா நஷ்ட ஈடு கோரி கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இக்கடிதத்தினை குரல்கள் இயக்கத்தின் சட்டத்தரணி அஸ்ஹர் லதீப், மூலம் நேற்று முன்தினம் (07) இக்கோரிக்கைக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக குரல்கள் இயக்கத்தின் சட்டத்தரணி அஸ்ஹர் லதீப் தெரிவித்தார்.

குறித்த கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

குறிப்பிட்ட சண்முகா இந்துக் கல்லூரி ஆசிரியை சம்பவம் தொடர்பில் சில ஊடகங் களில் வெளியிடப்பட்ட செய்திகளில்தான் சண்முகா இந்து மகளிர் கல்லூரிக்கு முகமூடி ஆடை அணிந்து சென்றதாக சொல்லப்பட்டிருந்ததாகவும், தான் தனது வாழ்நாளிலே முகமூடி ஆடை அணியவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இப்பொய்யான செய்தியானது தனது கௌரவத்திற்கும் மானத்திற்கும் பங்கம் விளைவித்தமையினால் தனக்கு நஷ்டஈடாக தலா பதினைந்து இலட்சம் ரூபா கோரியுள்ளார். குறிப்பிட்ட கோரிக்கைக் கடிதங்கள் குரல்கள் இயக்க சட்டத்தரணி அஸ்ஹர் லத்தீபினூடாக குறிப்பிட்ட ஊடக ஆசிரியர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அக்கரைப்பற்று றகுமான் ஜும்ஆப் பள்ளிவாசலில் இரத்த தான முகாம்





(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை இரத்த வங்கிக்கு அன்பளிப்புசெய்யும் நோக்கில், 74ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு அக்கரைப்பற்று றகுமான் ஜும்ஆப் பள்ளிவாசலினால் ஏற்பாடுசெய்யப்பட்ட மாபெரும் இரத்த தான முகாம் அக்கரைப்பற்று அதாவுல்லா அரங்கில் நடைபெற்றது.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் அஸாத் எம்.ஹனிபாவின் வேண்டுகோளுக்கிணங்க அக்கரைப்பற்று றகுமான் ஜும்ஆப் பள்ளிவாசலின் செயலாளர் ஏ.எச்.எம்.சிபாஸின் ஒருங்கிணைப்பில் கொவிட் கால நிலைமை மற்றும் இரத்தப் பற்றாக்குறையைக் கருத்திற்கொண்டு "இலங்கையராய் ஒன்றுபடுவோம்" எனும் தொனிப்பொருளுக்கேற்ப இந்த இரத்த தான நிகழ்வு இடம்பெற்றது.

இம்முகாமில் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் அஸாத் எம்.ஹனிபா, திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஆகில் அஹ்மட் ஷரிபுத்தீன், தாதிய பரிபாலகர் பீ.ரீ.நௌபர் மற்றும் வைத்தியசாலையின் இரத்த வங்கி வைத்தியர்கள், தாதி உத்தியோகத்தர்கள், பள்ளிவாசல் பிரதிநிதிகள் ஆகியோர் ஒத்துழைப்பு நல்கியதுடன், இதில் பொதுமக்கள் பெரும்பாலானோர் ஆர்வத்தோடு கலந்துகொண்டு இரத்த தானம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# அம்பாறை மாவட்டத்தில் பெய்துவரும் மழையால் நாவிதன்வெளியில் அறுவடை பாதிப்பு

## அரசால் மானியக் கொடுப்பனவு சிலருக்கு கிடைக்கவில்லையென கவலை

(நற்பிட்டிமுனை நிருபர்)

நாவிதன்வெளி பிரதேசங்களின் கீழுள்ள விவசாயக் கண்டங்களில் தற்போது அறுவடை ஆரம்பித்தாலும் அறுவடையின்போது கிடைக்கும் நெல்லை அதே இடத்தில் தனியார் அதிக விலைகொடுத்து வாங்குகின்றனர்.

66 கிலோகொண்ட ஒரு மூடை நெல் என்றுமில்லாதவாறு 4,500 தொடக்கம் 5,000 ஆயிரம் ரூபாவரை விற்கப்படுகிறது.

விலை குறைந்த நிலையில் நெல்லுக்கான விலை கூடிவருவது விவசாயிகளின் மூலதனத்தை சிறிதேனும் காப்பாற்றக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை, யூரியாவுக்குப் பதிலாக சேதனப் பசளை பயன்படுத்தியோருக்கு அரசின் மானியக்கொடுப்பு அதிகமான விவசாயிகளுக்கு வழங்கப்படவில்லையென குறை கூறுகின்றனர்.

அரசு விளையும் நெல்லை உத்தரவாத விலையில் கொள்வனவு செய்யவேண்டுமென கோரிக்கையும் விடுக்கின்றனர்.

இதேவேளை, கடந்த திங்கள் இரவுமுதல் அம்பாறை மாவட்டத்தில் பெய்துவரும் அடைமழை காரணமாக நாவிதன்வெளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட சடயந்தலாவ சவளக்கடை விவசாயக் கண்டங்களின் அறுவடை பாதிக்கப்பட்டுள்ளதோடு, விளையும் நனைந்த நெல்லை தனியார் வியாபாரிகள் குறைந்த விலைக்கே கொள்வனவும் செய்து வருகின்றனர்.

காய்ந்த நெல், காயா நெல் மற்றும் சிவப்புநெல் என பல பிரிவுகளாக நெல் விற்பனை செய்யப்படினும் நனைந்த நெல்லுக்கு குறைந்த விலை கிடைப்பது குறித்து விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஆச்சரியம் என்னவெனில், நெல்லை அதே இடத்தில் கொள்வனவுசெய்வதில் தனியார் வர்த்தகர்களிடையே போட்டாபோட்டி நிலை ஏற்பட்டுவருவதுதான்.

நிலைமை நீடிப்பின் பத்து கிலோ இருபத்தைந்து கிலோ எனும் விலை அடிப்படையில் விற்கப்பட்டுவந்த அரிசியின் விலைகள் திடீர் திடீரென அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# வாழைச்சேனை மயிலங்கரைச்சையில் காணாமல்போனவர் சடலமாக மீட்பு





(மீராவோடை நிருபர்)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புனானை வயல் பகுதியிலிருந்து நேற்று முன்தினம் (07) சடலமொன்று மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வயல் பகுதியில் சடலமொன்று கிடப்பதாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின்படி வாழைச்சேனை பொலிஸார் அங்கு சென்று சடலத்தை மீட்டுள்ளனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தியாவட்டவான் - மயிலங்கரைச்சை பகுதியைச் சேர்ந்த 69 வயதுடைய சீனித்தம்பி யோகராசா என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டுள்ள இவர், 15 நாட்களுக்கு முன்னர் வீட்டைவிட்டு சென்றதாகவும், அவரை தேடி வந்ததாகவும் அவரின் மரணத்தில் சந்தேகம் நிலவுவதாகவும் குடும்பத்தினர் பொலிஸாரிடம் முறையிட்டுள்ளனர்.

வயலில் மீட்கப்பட்ட சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மற்றவரின் சுதந்திரத்தை மதித்து அதற்கு தடையோ, இடையூறோ ஏற்படுத்தாதவர்களாக வாழவேண்டும்

## கல்முனை மாவட்ட நீதிமன்ற நீதிபதி றியாழ்





(பொலிவேரியன் நிருபர்)

மாணவ - மாணவிகளே! நிச்சயமாக நாங்கள் மற்றவருடைய சுதந்திரத்தை மதித்து, அதற்கு தடையோ, இடையூறோ ஏற்படுத்தாதவர்களாக வாழ்ந்துகொள்ள வேண்டும் என்பதை பணிவாக வேண்டிக்கொள்கிறேன் - என கல்முனை மாவட்ட நீதிமன்ற நீதிபதியும் பாடசாலையின் பழைய மாணவருமான ஏ.எம். றியாழ் தெரிவித்தார்.

இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் 74ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலையில் கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை வளாகத்தில் நடைபெற்றவேளை அதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் ஏ.அப்துல் கபூர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாணவர்களாகிய நீங்கள் எதிர்காலத்தில் எங்களுடைய சமுதாயத்தை பிரதிநிதித்துவப் படுத்தப் போகின்றவர்கள். இந்தப் பாடசாலை காலத்தில் நீங்கள் பெற்றுக்கொள்கின்ற பயிற்சியும் உங்கள் மனதில் செதுக்கிக் கொள்கின்ற விடயங்களுமே நாளை எமது சமுதாயத்தின், எமது நாட்டின் நல்ல நிலைக்கும் ஒரு சுபீட்சமான, சந்தோஷமான நிலைக்கும் இட்டுச்செல்லப்போகின்றது என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. அந்தவகையில் இன்று இரண்டே இரண்டு விடயங்களை மாணவ மாணவிகளுடன் பகிர்ந்துகொள்ள நினைக்கின்றேன்.

உண்மையில் நாம் இன்று எங்களுடைய 74ஆவது சுதந்திர தின விழாவை கொண்டாடி கொண்டிருக்கிறோம் என்றால், என்றோ ஒருநாள் எங்களுடைய சுதந்திரம் பறிக்கப்பட்டு மீண்டும் எமக்கு ஒப்படைக்கப்பட்டு இருக்கின்றது. அல்லது அதனை நாங்கள் பெற்றுக்கொண்டிருக்கிறோம். இந்த சுதந்திரத்தினை பறித்தவர்கள் யார்? வேற்றுக்கிரகத்திலிருந்து வந்த வேற்றுக்கிரக வாசிகளா அல்லது விலங்குகளா என்று பார்த்தால், உண்மையில் இல்லை எம்மைப் போன்ற மனிதர்களே எங்களுடைய சுதந்திரத்தினைப் பறித்தவர்கள். மீண்டும் நாம் அதனை பெற்றிருக்கின்றோம்.

ஆகவே, ஒரு மனிதனுடைய சுதந்திரத்தைப் பறிக்கின்றவர்கள் ஒரு சக மனிதர்களாக இருந்துகொண்டிருக்கின்றோம். நாம் எமது சுதந்திரத்துக்காக போராடிய வேண்டியதை விடவும் இன்னொரு மனிதனுடைய சுதந்திரத்தினை நாங்கள் மதித்து நடக்கின்ற வேளையில், இந்த நாட்டில் இந்த உலகில் சகல பொழுதிலும் சுதந்திரமானது மலர்ந்து கொண்டிருக்கும் என்ற விடயத்தினை நாங்கள் அனைவரும் உணரவேண்டும். நாங்கள் அனைவரும் மற்றவருடைய சுதந்திரத்தை மதிக்க வேண்டும். மற்றவர் சுதந்திரமாக வாழ்வதற்கு உரிய வழிவகைகளை நாம் நாமாகவே செய்கின்ற வேளையில் அது தன்னிச்சையாக நம்முடைய சுதந்திரத்தை உறுதிப்படுகின்ற ஒரு செயற்பாடாக அமையும்.

ஆகவே, மாணவ - மாணவிகளே! இன்றிலிருந்து நிச்சயமாக நாங்கள் மற்றவருடைய சுதந்திரத்தை மதித்து, அதற்கு தடையோ, இடையூறோ ஏற்படாதவர்களாக வாழ்ந்துகொள்ள வேண்டும் என்பதை பணிவாக வேண்டிக் கொள்கிறேன்.

இரண்டாவது விடயம் எப்பொழுது ஒரு மனிதனால் இன்னொரு மனிதனின் சுதந்திரத்தைப் பறிக்கவேண்டி வருகின்றதென்றால், தன்னுடைய சுயநலம் காரணமாகவே ஒரு மனிதன் இன்னொரு மனிதனின் சுதந்திரத்தில் கை வைக்கவேண்டிய தேவை ஏற்படுகிறது. சுயநலங்கள் என்கின்ற வேளையில் முற்றுமுழுதான சுயநலங்களைப் பற்றி நான் கூறவில்லை. எந்த சுயநலத்தினால் மற்ற மனிதனுக்கு பாதிப்பு வருமோ அந்த வகையான சுயநலங்களை நாங்கள் தவிர்ந்து நடக்க வேண்டும் என்று நான் உங்களை வேண்டிக் கொள்கிறேன் என்றும் தெரிவித்தார்.

பேண்ட் வாத்தியங்கள் முழங்க கடட், சாரணர் மரியாதையுடன் பாடசாலையில் தேசிய கொடி ஏற்றப்பட்டு சுதந்திர தின நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றன. இதன்போது பாடசாலையில் மரநடுகை நிகழ்வும் இடம்பெற்றது.

பாடசாலையின் பிரதி, உதவி அதிபர்கள், முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள், கல்வி சாரா ஊழியர்கள், பாடசாலை பழைய மாணவர்கள், அபிவிருத்தி சங்கத்தினர், மாணவ, மாணவிகள், பேண்ட் கடட் சாரணர், முதலுதவிப் பிரிவினர், ஆசிரியர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# மண்முனை வடக்கில் வீட்டுத்தோட்ட விவசாயிகளுக்கு பயிற்சிப் பட்டறை




(மண்முனை நிருபர்)

சௌபாக்கியா விவசாய வீட்டுத் தோட்ட தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் கீழ் நாற்றுமேடை செய்கையாளர்களான விவசாயிகளுக்கும், வெளிக்கள உத்தியோகத்தர்களுக்குமான பயிற்சிப் பட்டறை நேற்று முன்தினம் (07) மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்டது.

மண்முனை வடக்கு சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் கே.பரமலிங்கம் தலைமையில் கல்லடி கமநல சேவைகள் திணைக்களத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன், மாவட்ட சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் ஏ.எம்.அலி அக்பர், மண்முனை வடக்கு பிரதேச செயலக சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் வசந்தாதேவி உதயகுமார் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இதன்போது விவசாயப் போதனாசிரியர்களான வேணி திருநவன், மனோகரி மகேஸ் போன்றோர் வளவாளர்களாக கலந்துகொண்டு பயிற்சிகளை வழங்கினர்.

# இலங்கை அரசை கண்டித்து இராமேஸ்வரம் மீனவர்கள் இன்றுமுதல் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டம்





இலங்கை அரசை கண்டித்து இராமேஸ்வரம் மீனவர்கள் இன்றுமுதல் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாக்குநீரிணை கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 11 மீனவர்களை இலங்கை கடற்படையினர் படகுகளுடன் சிறைப்பிடித்துள்ள நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இராமேஸ்வரத்திலிருந்து 500இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் பாக்குநீரிணை கடலுக்குச் சென்றனர். இவர்களில் சிலர் நேற்று முன்தினம் இரவில் கச்சதீவுக்கு வடக்கு கடல் பகுதியில் வழக்கம் போல் மீன் பிடித்துக்கொண்டிருந்தனர். அப்போது அப்பகுதியில் ரோந்து கப்பலில் வந்த இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்களின் படகுகளை வழிமறித்து, அக்கடல் பகுதியிலிருந்து வெளியேறுமாறு எச்சரித்து விரட்டியடித்துள்ளனர்.

தொடர்ந்து தங்கச்சிமடம் மீனவர் மணிகண்டன், சேவியர், ராபின் ஆகியோருக்கு சொந்தமான மூன்று விசைப்படகுகளில் இருந்த தங்கதுரை, லிங்கம், ஜெயகிருஷ்ணன், மணிகண்டன், செந்தூர்பாண்டி, ரமேஷ், சங்கர், மதியழகன், ராஜா, சிலுவை மற்றும் டிக்ஸன் ஆகிய 11 மீனவர்களை சிறைப்பிடித்தனர். 3 படகுகளையும் பறிமுதல் செய்தனர். இதையடுத்து அப்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மற்ற மீனவர்கள் தங்களது படகுகளை உடனடியாக வேறு பகுதிகளுக்கு ஓட்டிச் சென்றனர்.

நேற்று காலை கரை திரும்பிய அவர்களது படகுகளில் மீன்வரத்து மிகவும் குறைவாக இருந்தது. கடற்படையினரின் சிறைப்பிடிப்பு நடவடிக்கையால் இரவில் மீன்பிடிக்க முடியவில்லை என்று மீனவர்கள் வேதனை தெரிவித்தனர்.

இதனிடையே கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட 11 மீனவர்களும் இரவோடு இரவாக இலங்கை மயிலிட்டி துறைமுகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு 11 பேரிடமும் இலங்கை கடற்படை அதிகாரிகள் விசாரணை நடத்தினர். தொடர்ந்து அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையிலடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட தமிழக மீனவர்களின் 135 படகுகள் நேற்று இலங்கை அதிகாரிகளால் ஏலம் விடப்பட்ட சம்பவம் ஏற்கனவே தமிழக மீனவர்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், தற்போது மீனவர்கள் 11 பேர் கைதுசெய்யப்பட்ட சம்பவத்தால், இராமேஸ்வரம் பகுதி மக்கள் வேதனையிலுள்ளனர்.

இதேவேளை, இலங்கை கடற்படையால் பறிமுதல் செய்யப்பட்ட தமிழக மீனவர்களின் 135 படகுகள் ஏலம் விடப்பட்டதை கண்டித்து நேற்றுமுன்தினம் இராமேஸ்வரத்தில் மீனவர்கள் முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு நிலவியது.

இதேவேளை, தமிழக மீனவர்களின் படகுகளை மீட்க வலியுறுத்தியும், இலங்கை சிறையிலுள்ள மீனவர்களை உடனடியாக விடுவிக்க வலியுறுத்தியும் நாளைமறுதினம் 11ஆம் திகதி இராமேஸ்வரத்தில் ஆர்ப்பாட்டம் நடத்த முடிவுசெய்யப்பட்டுள்ளது.

இலங்கை கடற்படையால் கடந்த 2015ஆம் ஆண்டுமுதல் 2019ஆம் ஆண்டுவரை பறிமுதல் செய்யப்பட்ட தமிழக மீனவர்களின் படகுகள் பேச்சுவார்த்தையை தொடர்ந்து குறிப்பிட்ட காலத்திற்குப்பின் விடுவிக்கப்பட்டன.

இதில் நல்ல நிலையிலிருந்த படகுகள் மீனவர்களால் மீட்கப்பட்டு தமிழகம் கொண்டு வரப்பட்டன. சேதமடைந்த 105 படகுகள் இலங்கை காரைநகர், காங்கேசன்துறை, கிராஞ்சி, தலைமன்னார் உள்ளிட்ட கடலோர பகுதிகளில் கடலில் மூழ்கிய நிலையில் நிறுத்தப்பட்டிருந்தன. இவற்றை மீட்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வந்தது. மீட்கப்படாத இந்த படகுகளை ஏலம் விடுவதற்கு இலங்கை அரசு உத்தரவிட்டது.

இதை தொடர்ந்து இலங்கை கடற்றொழில் நீரியல் வளத்துறை மற்றும் இலங்கை கடற்படை அதிகாரிகள் பெப்ரவரி 7 முதல் 11ஆம் திகதிவரை படகுகள் ஏலம் விடப்படும் என்று அறிவித்தனர். இலங்கை அரசின் இந்த நடவடிக்கைக்கு கண்டனம் தெரிவித்த இராமேஸ்வரம் மீனவர்கள், படகுகள் ஏலம் விடுவதை தடுத்துநிறுத்த வலியுறுத்தியும், மத்திய அரசை இந்த விவகாரத்தில் தலையிடக் கோரியும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழக மீனவர்களின் படகுகள் 7ஆம் திகதிமுதல் 11ஆம் திகதிவரை ஏலம் விடப்படும் என்று அறிவிக்கப்பட்ட நிலையில், நேற்றுமுன்தினம் ஒரேநாளில் அனைத்து படகுகளையும் ஏலம் விட்டிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை அரசின் இந்த அத்துமீறலைக் கண்டித்து இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலுள்ள மீன்துறை டோக்கன் அலுவலகத்தில் மீனவர்கள் நேற்றுமுன்தினம் முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இராமேஸ்வரம் துறைமுகக் கடற்கரையில் மீனவர் சங்கப் பிரதிநிதி சகாயம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தமிழக மீனவர்களின் படகுகளை மீட்க வலியுறுத்தியும், இலங்கை சிறையிலுள்ள மீனவர்களை உடனடியாக விடுவிக்க வலியுறுத்தியும் நாளைமறுதினம் 11ஆம் திகதி இராமேஸ்வரம் ரயில் நிலையம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

**நாகை மீனவர்கள் காவல் நீடிப்பு**

இதேவேளை, இலங்கை கடற்படையால் கைதுசெய்யப்பட்ட நாகை, காரைக்கால் பகுதிகளைச் சேர்ந்த 21 மீனவர்கள் விசாரணை கைதிகளாக இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இந்த வழக்கை நேற்றுமுன்தினம் விசாரித்த இலங்கை பருத்தித்துறை நீதிமன்றம், மீனவர்களின் சிறைக்காவலை 21ஆம் திகதிவரை நீடித்து உத்தரவிட்டுள்ளது.

---

**படகுகள் ஏலம்; 11 மீனவர்கள் கைது:**

# இந்தியாவை அவமதிக்கிறது இலங்கை

**மீனவர் பிரச்சினையில் அன்புமணி கருத்து**



''எல்லை தாண்டி மீன்பிடித்ததாகக் கூறி இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட இராமேஸ்வரம் மீனவர்கள் 11 பேரை விடுவிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்'' - என பா.ம.க. இளைஞரணித் தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

“வங்கக்கடலில் மீன்பிடிக்கச் சென்ற இராமேஸ்வரம் மீனவர்கள் 11 பேர், இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களின் 3 படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இலங்கை கடற்படையினரின் இந்த அத்துமீறல் கடுமையாகக் கண்டிக்கத்தக்கது.

எதிர்ப்புகளை மீறி தமிழக மீனவர்களின் 135 படகுகள் நேற்று ஏலம் விடப்பட்டுள்ளன. இரண்டாவது நாளாக நேற்றும் படகுகள் ஏலம் தொடர்ந்தது/கொண்டிருக்கிறது. இத்தகைய சூழலில் 11 மீனவர்கள் கைதுசெய்யப்பட்டிருப்பது இந்திய இறையாண்மை மீது நடத்தப்படும் தொடர் தாக்குதலாகும்.

இந்திய - இலங்கை மீனவர் சிக்கலுக்கு சுமூகத் தீர்வு காணப்படும் என்று இந்திய வெளியுறவு அமைச்சரிடம் இலங்கை அமைச்சர் உறுதியளித்த ஒருசில மணிநேரங்களில் தமிழக மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்பதிலிருந்தே இந்தியாவை இலங்கை எவ்வாறு அவமதிக்கிறது என்பதை உணரலாம்.

இப்போது கைதுசெய்யப்பட்ட 11 பேர், ஏற்கனவே கைதுசெய்யப்பட்ட 21 பேர் என 37 மீனவர்களையும் உடனடியாக விடுவிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். படகுகள் ஏலத்தை தடுத்துநிறுத்தி அவற்றையும் மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும்” - என வலியுறுத்தியுள்ளார்.

**04ஆம் பக்கத் தொடர்ச்சி....**

தமிழர் கூட்டணியினர் தமிழீழம் என்னும் தனிநாட்டை உருவாக்குவதற்கான கோரிக்கையை முன்வைத்து தீர்மானம் நிறைவேற்றினர். அத்தீர்மானத்தை அச்சிட்டு மக்களுக்கு நேரடியாக வழங்கிய அமிர்தலிங்கம் முதலிய தலைவர்கள் கைதுசெய்யப்பட்டு ட்ரையல் அட் பார் எனப்பட்ட சிறப்பு நீதிமன்றங்களில் விசாரணை நடத்த ஏற்பாடாகியது. இலங்கைத் தமிழர் அரசியல் வரலாற்றில் மிகவும் கவனிக்கப்பட்ட ஒரு வழக்காக இது விளங்கியதுடன், தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமையைக் காட்டும் ஒரு வாய்ப்பாகவும் அமைந்தது எனலாம். இவ்வழக்கை நடத்துவதற்காக செல்வநாயகம் தலைமையில் அமைக்கப்பட்ட வழக்கறிஞர் குழுவில் பொன்னம்பலம் பங்கேற்று வாதாடினார். இதில் பொன்னம்பலத்தின் வாதத்திறமையினால் கூட்டணித் தலைவர்கள் விடுதலையாயினர். இவ்வழக்கின் மூலம் தமிழர் மத்தியில் பொன்னம்பலத்தின் செல்வாக்கு மீண்டும் உயர்ந்ததெனலாம்.

இவ்வழக்கில் ஏற்பட்ட புகழ் காரணமாக தமிழ்நாட்டில் மு.கருணாநிதி மீது தொடரப்பட்ட ஊழல் வழக்கொன்றிலும் கருணாநிதிக்காக பொன்னம்பலம் வாதாடினார். எனினும், வழக்கு முடியும் முன்னரே மலேசியாவில் காலமானார்.

அவரது உடல் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டு கொழும்பில் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்தில் அவரது சொந்த ஊரான அல்வாயில் மக்கள் திரளின் மத்தியில் எரியூட்டப்பட்டது.

***(அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் 45ஆவது நினைவுதினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது )***

---

இந்திய செய்திகள்

# மீனவர்களின் படகுகள் - கருவிகளை விடுவிக்க நடவடிக்கை தேவை

**பிரதமர் மோடிக்கு தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் கடிதம்**




தமிழக மீனவர்களின் படகுகள், கருவிகளை விடுவிக்க நடவடிக்கை தேவை என்று மத்திய அரசை, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில்,

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்களுக்குச் சொந்தமான 105 மீன்பிடிப் படகுகள் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளன. இந்தப் படகுகளை ஏலம் விட இலங்கை அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த நடவடிக்கை சட்டத்துக்குப் புறம்பானது. கவலைக்குரிய இந்த நடவடிக்கையை உடனடியாகத் தடுத்துநிறுத்த வேண்டும்.

இந்தப் பிரச்சினை குறித்து கடந்த 24ஆம் திகதியன்று ஏற்கனவே கடிதம் எழுதப்பட்டது. அதில், 2018ஆம் ஆண்டுக்கு முன்னர் சிறைப்பிடிக்கப்பட்ட 125 பழுதுபார்க்க இயலாத நிலையிலுள்ள படகுகளை வெளிப்படையான முறையில் அகற்றுவதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டுமென கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது.

இதைத் தொடர்ந்து, வெளியுறவுத்துறை அமைச்சு அனுப்பிய மின்னஞ்சல் தகவலில், மீனவர்கள் விவகாரம் தொடர்பாக இலங்கை அதிகாரிகளிடம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், அறிவிக்கப்பட்ட மீன்பிடிப் படகுகள் ஏலத்தை இலங்கைத் தரப்பு தொடராது என்றும் உறுதியளித்திருந்தது.

மேலும், படகுகளை மீட்பது தொடர்பாக இலங்கை செல்லவிருந்த தமிழக அதிகாரிகளின் பயணத் திட்டத்துக்கு ஒப்புதல் வழங்கியதுடன், பயணத்துக்கான புதிய திகதிகளை இறுதிசெய்யுமாறும் கேட்டுக்கொண்டிருந்தது. அதன்படி, மார்ச் முதலாம் திகதிமுதல் 6ஆம் திகதிவரை பயணத் திட்டத்துக்கான திகதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

இந்தச் சூழ்நிலையில், இலங்கை அரசு தான் அளித்த வாக்குறுதிக்கு மாறாக எந்தவிதமான ஆலோசனையும் இல்லாமல் தொடர்ந்துள்ள ஏல நடவடிக்கைகள் மத்திய மற்றும் மாநில அரசுகளின் முயற்சிகளை தடம்புரள்வதாகச் செய்யும்.

இவற்றைக் கருத்திற்கொண்டு, இலங்கையால் அறிவிக்கப்பட்ட ஏலத்தைத் தடுத்துநிறுத்த வேண்டும். 2018ஆம் ஆண்டுக்கு முன்பு சிறைப்பிடிக்கப்பட்ட 125 பழுதுபார்க்க இயலாத நிலையிலுள்ள தமிழகப் படகுகள் தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்பார்வையிட அதிகாரிகள், தொடர்புடைய படகுகளின் உரிமையாளர்கள் ஆகியோரின் பயணத்துக்கு இலங்கை வெளியுறவு அமைச்சு ஒப்புதலை அளிக்கவேண்டும்.

2018ஆம் ஆண்டுக்குப் பின்னர் சிறைப்பிடிக்கப்பட்டு, இலங்கையின் பல்வேறு கடற்படைத் தளங்களில் நிறுத்தப்பட்டுள்ள 75 படகுகள், மீன்பிடிக் கருவிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த விவகாரங்களில் தாங்கள் அவசரமாகத் தலையிட வேண்டும். இதன்மூலம் தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படும் - என்று தெரிவித்துள்ளார்.

---

## ஹிஜாப் விவகாரத்தின் எதிரொலி: கர்நாடகாவில் பாடசாலை - கல்லூரிகளுக்கு 3 நாட்களுக்கு விடுமுறை

**சுற்றிவளைத்த ஹிந்துத்துவா மாணவர்கள்; ஒற்றை ஆளாக முஸ்லிம் மாணவி பதிலடி**




ஹிஜாப் விவகாரத்தையொட்டி கர்நாடகாவில் அனைத்து உயர்நிலைப் பாடசாலை மற்றும் கல்லூரிகளுக்கு அடுத்த 3 நாட்களுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. இதை அம்மாநில முதலமைச்சர் பசவராஜ் பொம்மை அறிவித்தார்.

கர்நாடகாவிலுள்ள உடுப்பி, சிவமோகா, சிக்மக்ளூர், மங்களூர் உள்ளிட்ட மாவட்டங்களிலுள்ள உயர்நிலைப் பாடசாலைகள், கல்லூரிகளில் முஸ்லிம் மாணவிகள் ஹிஜாப் அணிந்து வர திடீர் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

இந்நிலையில், ஹிஜாப் அணிந்துகொண்டு கல்வி நிறுவனங்களுக்குள் முஸ்லிம் மாணவிகள் வந்தால் நாங்களும் காவி துண்டு அணிவோம் என கூறி இந்துத்துவா மாணவர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறார்கள். தங்கள் உரிமைகளுக்காக முஸ்லிம் மாணவிகள் பள்ளிவாயிலில் அமர்ந்து போராடி வருகிறார்கள்.

**ஹிஜாப்புடன் அனுமதி இல்லை**

போராட்டத்தில் கலந்துகொள்ளும் மாணவிகள் ஹிஜாப்புடன் உள்ளே வந்து கழிவறைகளை பயன்படுத்தவும் எதிர்ப்பு இருப்பதாக மாணவிகள் வேதனை தெரிவித்துள்ளனர். இந்நிலையில், சிவமோகாவில் மோதல்கள் முற்றுவதால் 144 தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனால் கர்நாடகாவில் பெரும்பாலான மாவட்டங்களில் பதற்றம் நீடித்து வருகிறது.

கர்நாடகாவில் ஹிஜாப் அணிந்துகொண்டு கல்லூரிக்குள் வந்த மாணவியொருவரை இந்துத்துவா மாணவர்கள் கழுத்தில் காவி துண்டு அணிந்துகொண்டு ‘ஜெய் ஸ்ரீராம்’ என கோஷமிட்டனர். ஆனாலும் அந்த மாணவி அவர்களை எல்லாம் ஒற்றை ஆளாக சமாளித்து உள்ளே சென்றார். அதுபோல் சிவமோகாவில் கல்லூரியொன்றில் தேசிய கொடியை இறக்கிவிட்டு காவி கொடியை மாணவரொருவர் ஏற்றிய சம்பவமும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. பல பாடசாலைகள், கல்லூரிகளில் கல் வீச்சு சம்பவங்களும் அதிகரித்துவிட்டன. இந்த விவகாரம் கையை மீறி சென்றுவிட்டதாக கர்நாடக எதிர்க்கட்சிகள் விமர்சனம் செய்துள்ளார்கள். கல்வி நிறுவனங்களுக்கு ஒரு வாரத்திற்கு விடுமுறை அறிவிக்க வேண்டும் என்றும் காங்கிரஸ் கட்சி கோரிக்கை விடுத்திருந்தது.

இந்நிலையில், முதலமைச்சர் பசவராஜ் பொம்மை தனது ட்விட்டர் பக்கத்தில்,

கர்நாடகாவிலுள்ள மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்கள், கல்லூரி பேராசிரியர்கள், பாடசாலை, கல்லூரி நிர்வாகத்தினர், மக்கள் அமைதியையும் நல்லிணக்கத்தையும் பேணி காக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். அடுத்த 3 நாட்களுக்கு அனைத்து உயர்நிலைப் பாடசாலைகளுக்கும் கல்லூரிகளுக்கும் விடுமுறை அறிவிக்கப்படுகிறது. அனைவரும் ஒத்துழைப்பு தர வேண்டும்'' - என கேட்டுக் கொண்டுள்ளார்.

இன்றுமுதல் வெள்ளிக்கிழமை வரை விடுமுறை அறிவிக்கப் பட்டுள்ளது. ஒருவேளை சனிக்கிழமைகளில் பொது விடுமுறை என்றால் சனி, ஞாயிறுடன் சேர்த்து 5 நாட்கள் விடுமுறை இருக்க வாய்ப்புள்ளது - என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கோழி முட்டையில் கொரோனா தடுப்பூசி



கோழி முட்டையிலிருந்து மிக மலிவான முறையில் புதிய ரக கொரோனா தடுப்பூசியொன்றை நியூயோர்க்கிலுள்ள ஐச்சன் மவுன்ட் சினாய் மருத்துவக் கல்லூரியில் சர்வதேச விஞ்ஞானிகள் குழு உருவாக்கியுள்ளது.

பிரேசில், வியட்நாம், தாய்லாந்து போன்ற நாடுகளில் Flu காய்ச்சலுக்கான தடுப்பூசி, கோழி முட்டைகளிலிருந்து தயாரிக்கப்படுகிறது. இதே பாணியில், கொரோனா வைரஸுக்கு எதிராக புதிய தடுப்பூசியொன்றை அமெரிக்காவின் ஐச்சன் மவுன்ட் சினாய் மருத்துவக் கல்லூரி ஆய்வாளர்கள் உருவாக்கியுள்ளனர்.

எம்.ஆர்.என்.ஏ. ரக தடுப்பூசிகளை தயாரிக்க தேவைப்படும் மிக அதிக குளிர் நிலை சூழல், இதற்கு தேவைப்படாது என்பதால், இதன் உற்பத்திச் செலவு மிக மிகக் குறைவாக இருக்கும் என்கின்றனர். கோழி முட்டையிலிருந்து உருவாக்கப்படும் இந்த புதிய ரக கொரோனா தடுப்பூசி, மிகச் சிறந்த பலன்களை அளிப்பதாக முதல் கட்ட சோதனைகள் தெரிவிக்கின்றன. எதிர்காலத்தில் ஆசிய, ஆபிரிக்க நாடுகள் இதை மிகக் குறைந்த செலவில், மிக எளிதாக தயாரிக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# உலக செய்திகள்

# போர் பயிற்சி பெறும் உக்ரைன் பெண்கள்

## ரஷ்யாவுக்கு பைடன் தொடர்ந்து எச்சரிக்கை







ரஷ்யா - உக்ரைன் எல்லையில் போர் பதற்றம் அதிகரித்துவரும் நிலையில், உக்ரைன் பெண்கள் போர் பயிற்சி பெற்றுவருவது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்கா தலைமையிலான நேட்டோ அமைப்பில் உக்ரைனைச் சேர்க்க எதிர்ப்புத் தெரிவித்து உக்ரைன் எல்லையில் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான படைகளை குவித்துள்ளது ரஷ்யா.

எல்லையில் போர் பதற்றம் அதிகரித்துவரும் நிலையில், உக்ரைன் பெண்கள் போருக்குத் தயாராக ஆயுதப் பயிற்சிபெற்று வருகின்றனர். இராணுவ வீரர்களிடம் நவீன துப்பாக்கிச் சுடும் பயிற்சிகளில் சாதாரண பெண்கள் ஈடுபடும் வீடியோக்கள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மேலும் ''நாட்டையும் வீட்டையும் காப்பது எங்கள் கடமை'' என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனிடையே அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், உக்ரைனுக்கு செல்வது மிகப்பெரிய தவறு என்பதை ரஷ்ய ஜனாதிபதி புட்டின் உணர்வார் என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் உக்ரைனில் ரஷ்யா தாக்குதல் நடத்தினால் அது ஐரோப்பா மற்றும் உலகின் பிற பகுதிகளில் பெரும் பேரழிவை ஏற்படுத்தும், அதற்கு ரஷ்யா மிகப் பெரிய விலை கொடுக்கவேண்டும் என்று அவர் எச்சரித்தார்.

இதுவரை விதிக்கப்பட்ட தடைகளை விட மிகக் கடுமையான பொருளாதாரத் தடைகளை விதிப்போம். இதனிடையே ரஷ்யா மற்றும் உக்ரைன் படைகள் எல்லைப் பகுதிகளில் தீவிர போர் பயிற்சியில் ஈடுபட்டு வருவதால் பதற்றம் அதிகரித்து வருகிறது. எனினும், உக்ரைன் பிரச்சினை அமைதியான முறையில் தீர்க்கப்படும் என்று நம்புவதாக ரஷ்ய ஜனாதிபதி புட்டின் தெரிவித்துள்ளார்.

# ஒட்டாவாவில் 10 நாட்களுக்கு 'ஹோர்ன்' ஒலிக்கத் தடை



கனடா தலைநகர் ஒட்டாவாவில் 10 நாட்களுக்கு வாகனங்களின் 'ஹோர்ன்'களை ஒலிக்கத் தடை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அரசின் கொரோனா கட்டுப்பாடுகளை கண்டித்து தடுப்பூசி எதிர்ப்பாளர்கள், லொறி ஓட்டுநர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். வாகனங்களின் ஹோர்ன்களை நீண்டநேரத்திற்கு ஒலிரச் செய்து நூதன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து தலைநகர் ஒட்டாவாவில் மாகாண ஆளுநர் அவசர நிலையை பிரகடனப்படுத்தினார். இந்நிலையில், வாகன ஓட்டிகளின் கைகளுக்கு விலங்கு பூட்டுவதுபோல் அடுத்த 10 நாட்களுக்கு ஹோர்ன்களை ஒலிக்கத் தடை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டது.

அமெரிக்காவில் கொரோனா பாதிப்பு தீவிரம் அடைந்துள்ளதைத் தொடர்ந்து, கனடாவில் அதன் பாதிப்பு ஏற்படாமல் தடுக்க அந்நாட்டு அரசு கொரோனா கட்டுப்பாடுகளை கடுமையாக்கியது.

பொது இடங்களில் நடமாடுவோர், பொது போக்குவரத்தில் பயணிப்போருக்கு தடுப்பூசி சான்றிதழ் கட்டாயமாக்கப்பட்டது. மேலும், லொறி ஓட்டுநர்களுக்கு தடுப்பூசி கட்டாயம் என்றும், தடுப்பூசி போடாதவர்கள் ஒரு வாரம் தனிமைப்படுத்தப்படுவர் என்றும் அரசு உத்தரவிட்டது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தொடர் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

இதனால் தங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்று தெரிவித்துள்ள லொறி ஓட்டுநர்கள், தலைநகர் ஒட்டாவாவுக்குள் லொறிகளுடன் நுழைந்து போராடப் போவதாக அறிவித்தனர். அதன்படி கனடா தலைநகர் ஒட்டாவாவில் லொறிகளுடன் நுழைந்து போர் நினைவிடங்களை ஆக்கிரமித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதைத் தொடர்ந்து பாதுகாப்பு காரணங்களுக்காக அரச உயர் அதிகாரிகளின் ஆலோசனையின்பேரில், பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தனது குடும்பத்துடன் இரகசிய இடத்துக்குச் சென்றார்.

அங்கிருந்துகொண்டே தனது அரச வேலைகளை ஜஸ்டின் ட்ரூடோ செய்து வருகிறார். இந்நிலையில், இரண்டு வார காலமாக நடக்கும் லொறி ஓட்டுனர்களின் போராட்டத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் தலைநகர் ஒட்டாவாவில் அவசர நிலையை கனடா அரசு அறிவித்துள்ளது. இந்நிலையில், தங்கள் நாட்டு விவகாரத்தில் அமெரிக்காவை தலையிட விட வேண்டாம் என்று கனடா கேட்டுக் கொண்டுள்ளது.

# மடகஸ்கரை தாக்கிய பட்சிராய் புயல்: 20 பேர் பலி; ஒரு இலட்சம் பேர் நிர்க்கதி





மடகஸ்கரை தாக்கிய பட்சிராய் (Batsirai) புயலால் இதுவரை 20 பேர் உயிரிழந்துள்ளதுடன், ஒரு இலட்சம் பேர் வீடுகள், உடைமைகளை இழந்து நிர்க்கதிக்குள்ளாகியுள்ளதாக அந்நாட்டு பேரிடர் மேலாண்மைதுறை தெரிவித்துள்ளது.

மடகஸ்கரின் கிழக்கு கடற்கரை நகரங்களை பத்சிராய் சூறாவளி தாக்கியது. மரங்கள், மின்கம்பங்கள், செல்போன் கோபுரங்களை பிடுங்கி எறிந்த இந்த சூறாவளி 3000இற்கும் மேற்பட்ட வீடுகள் மற்றும் கட்டடங்களை தரைமட்டமாக்கியுள்ளது.

நூற்றுக்கணக்கான கிராமங்கள் தனித் தீவுகளாகியுள்ளதால் அத்தியாவசியப் பொருட்கள் ஹெலிகொப்டர் மூலம் விநியோகிக்கப்பட்டு வருகிறது. சூறாவளியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்ட மடகஸ்கர் ஜனாதிபதி Andry Rajoelina மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளுக்கு உத்தரவிட்டுள்ளார். அறுவடைக்குத் தயாராகி இருந்த அரிசி, கோதுமை மற்றும் பல பயிர்களை சூறாவளி அழித்துவிட்டதால் அடுத்த 6 மாதங்களுக்கு மனாஜரி உள்ளிட்ட கிழக்கு பகுதிகள் உணவு தட்டுப்பாட்டினை எதிர்கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளதாக மடகஸ்கர் அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# அமெரிக்காவில் கொரோனாவால் உயிரிழந்தவர்களுக்கு தேவாலயத்தில் 900 முறை மணி ஒலி எழுப்பி மரியாதை



அமெரிக்காவில் கொரோனாவால் உயிரிழந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாக வொஷிங்டனிலுள்ள நெஷனல் கேத்திட்ரல் தேவாலயத்தில் 900 முறை மணி ஒலி எழுப்பப்பட்டது.

அமெரிக்காவில் ஒவ்வொரு ஒரு இலட்சம் கொரோனா உயிரிழப்புகளுக்கும், 100 முறை மணி ஒலி எழுப்பி இறந்தவர்களுக்கு மரியாதை செலுத்தப்பட்டு வருகிறது.

அந்தவகையில், தற்போது கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 9 இலட்சத்தைக் கடந்ததையடுத்து, 900 முறை மணி ஒலி எழுப்பப்பட்டது. இந்த முறை சுமார் ஒன்றரை மணிநேரம் இந்த நிகழ்வு நீடித்தது.

# "சொந்த இரத்தங்களுக்குள்ளே யுத்தத்தை நிகழ்த்தத் துடிக்கும் சிங்கள இனவாத அரசு"

## – சீமான் ஆவேசம்



''தமிழக மீனவர்களுக்கும், ஈழ மீனவர்களுக்குமிடையே பகைமையை உருவாக்கி, சொந்த இரத்தங்களுக்குள்ளே யுத்தத்தை நிகழ்த்தத் துடிக்கும் சிங்கள இனவாத அரசின் பிரித்தாளும் சூழ்ச்சியை முறியடிக்கவேண்டும்'' - என நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் கோரிக்கை வைத்துள்ளார்.

இதுகுறித்து சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"தமிழகத்து மீனவர்களுக்கும், ஈழத்து மீனவர்களுக்குமிடையே பகைமையை ஏற்படுத்தி, ஒருதாய் வயிற்றுப்பிள்ளைகளான தமிழ்த் தேசிய இன மக்களைத் தங்களுக்குள்ளேயே மோதிச் சண்டையிட வழிவகை செய்திடும் சிங்கள இனவாத அரசின் கொடுங்கோல் செயற்பாடுகள் பெரும் அதிர்ச்சியளிக்கின்றன. ஈழப் பெருநிலத்தில் இரண்டு இலட்சம் தமிழர்களைக் கொன்றொழித்து, ஒரு பாரிய இனப்படுகொலையை நிகழ்த்தி, 800இற்கும் மேற்பட்ட தமிழக மீனவர்களை நடுக்கடலிலே படுகொலை செய்தும் இன்னும் வன்மம் தீராது தமிழர்களுக்குள்ளேயே பகைமூட்டும் சிங்கள இனவாத ஆட்சியாளர்களின் போக்குகள் கடும் கண்டனத்திற்குரியது.

யாழ்ப்பாணம், சுப்பர்மடம் கடற்பகுதியிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் தணிகைமாறன், பிரேம்குமார் ஆகியோர் படகு கவிழ்ந்து உயிரிழந்த செய்தியறிந்து பெரும் வேதனையடைந்தேன். அவர்களை இழந்து வாடும் அவர்தம் பெற்றோர்களுக்கும், உறவுகளுக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்து துயரத்தில் பங்கெடுக்கிறேன். அவர்களின் இழப்பு எதன்பொருட்டும் ஈடுசெய்ய இயலாதது. அம்மரணம் ஏற்படுத்தும் வலியென்பது சொற்களால் விவரிக்க முடியாதது.

அதேசமயம், அது விபத்துதானே ஒழிய, திட்டமிடப்பட்ட தாக்குதல் அல்ல. தமிழக மீனவர்கள் தொப்புள்கொடி உறவுகளான ஈழத்துச்சொந்தங்களை ஒருநாளும் பகையாளியாகக் கருதவோ, தாக்குதல் தொடுத்திடவோ மாட்டார்கள் என அறுதியிட்டுக் கூறுகிறேன். அது எதிர்பாராதவிதமாக நடந்த ஒரு கோர விபத்து; ஏற்கவே முடியாத ஒரு துயரச்சம்பவம். அத்துயரை நானும் பகிர்ந்துகொள்கிறேன்; வலியை முழுமையாக உணர்ந்துகொள்கிறேன்.

அதேநேரத்தில், இம்மரணத்தைத் துருப்புச்சீட்டாகப் பயன்படுத்தி, ஈழத்து மீனவர்களுக்கும், தமிழக மீனவர்களுக்குமிடையே சண்டை மூட்டிவிட்டு, வேடிக்கைப் பார்க்கும் சிங்கள அதிகார வர்க்கத்தின் செயல்களுக்குப் பலியாகாது விழிப்போடும், தெளிவோடும் இருக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்து மீனவர்கள்தான் ஈழ மீனவர்களைத் தாக்கிக் கொன்றுவிட்டார்கள் என அந்நிலத்தில் பரப்புரைசெய்வதும், தமிழகத்து மீனவர்களது படகுகளை ஈழத்து மீனவர்களுக்கு ஏலத்தில் விற்று, காழ்ப்புணர்வை தமிழக மீனவர்களிடம் உருவாக்க முயல்வதுமான போக்குகள் சொந்த இரத்தங்களுக்குள்ளே யுத்தத்தை நிகழ்த்த துடிக்கும் பெரும் மோசடித்தனமாகும்.

சிங்கள இனவாத அரசால் இனப்பேரழிவை தமிழர் தாயகம் எதிர்கொண்டபோது, தமிழகத்திலிருந்த 18இற்கும் மேற்பட்ட தமிழர்கள் தங்கள் உறவுகளைக் காக்க தங்கள் உயிர்களை இரையாக்கினார்கள்; அவர்கள் தங்கள் உள்ளத்திலே கொதித்த நெருப்பை உடலிலே கொட்டி தீக்குளித்து, போராட்ட நெருப்பைப் பற்ற வைத்தார்கள்.

ஈழத்தாயகம் எப்போதெல்லாம் தாக்குதலுக்குள்ளாகிறதோ அப்போதெல்லாம் தமிழகம் கொதித்தெழுந்து தங்கள் உறவுகளைக் காக்க உணர்வோடு வீதிக்கு வந்திருக்கிறது. ஆகவே, தமிழகத்துக்கும், ஈழத்துக்குமான தொப்புள்கொடி உறவை, வரலாற்று வழித்தொடர்பை எவராலும் மறுக்க முடியாது.

ஏற்கனவே, தமிழ்த் தேசிய இன மக்களை சாதியும், மதமும் பிளந்து, பிரித்து ஓர்மையைத் தடுத்துக் கெடுக்கும் நிலையில் அரங்கேற்றப்படும் சதிச்செயல்களையும், தமிழகத்து தமிழர்களுக்கும், ஈழத்து தமிழர்களுக்குமான இரத்த உறவை முற்றாக அறுக்கத்துடிக்கும் பெருஞ்சூழ்ச்சிகளையும் புரிந்துகொள்ள வேண்டியது பெருங்கடமையும், பேரவசியமுமாகிறது. அந்நிலத்தில் தமிழ் மீனவர்கள் மட்டும்தான் இருக்கிறார்கள்; சிங்களவர்களில் எவரும் மீனவர்கள் இல்லை என்பது போலவும், சிங்கள மீனவர்களது வளங்களை தமிழக மீனவர்கள் சுரண்டுகிறார்கள் என்பது போலவும், தமிழகத்து மீனவர்கள் சிங்கள மீனவர்களைத் தாக்குகிறார்கள் என்பது போலவும் கருத்துருவாக்கம் செய்து, இரு நிலத்து மீனவர்களையும் பகையாளிகளாக மாற்ற முனைவது கொடும் வன்மத்தின் உச்சமாகும்.

ஆகவே, தமிழக மீனவர்களுக்கும், ஈழத்து மீனவர்களுக்குமிடையே பிளவையும், பகையையும் உருவாக்கத் துடிக்கும் இனவெறி சிங்கள ஆட்சியாளர்களின் தமிழர் விரோதச் செயற்பாடுகளுக்கு இரையாகாது அவர்களது உள்நோக்கத்தைப் புரிந்துகொண்டு, தமிழர் ஓர்மையையும், இணக்கப்பாட்டையும் கடைப்பிடிக்க வேண்டுமென இரு நிலத்தில் வாழும் தமிழர்களையும் உள்ளன்போடும், உரிமையோடும் கேட்டுக்கொள்கிறேன்" - இவ்வாறு அந்த அறிக்கையில் சீமான் குறிப்பிட்டுள்ளார்.

# சொந்த அணிக்கு தலைமை பயிற்றுவிப்பாளரான கொலிங்வுட்




இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக இருந்த கிறிஸ் சில்வர்வுட் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஆஷஸ் டெஸ்ட் தொடர் படுதோல்வியின் பின்னர் பயிற்றுவிப்பாளர் பதவியிலிருந்து விலகினார். அண்மையில் நடைபெற்ற ஆஷஸ் டெஸ்ட் தொடரை இங்கிலாந்து அணி 4-0 என்ற கணக்கில் படுமோசமாக இழந்தது.

இந்நிலையில் அடுத்து நடைபெறவுள்ள மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் தற்காலிக தலைமைப் பயிற்சியாளராக இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் போல் கொலிங்வுட் நியமிக்கப்பட்டுள்ளார்.

போல் கொலிங்வுட் இங்கிலாந்து இருபதுக்கு 20 அணியின் முதல் அணித்தலைவர் என்பதும், அவரது தலைமையின் கீழ் இங்கிலாந்து அணி 2010ஆம் ஆண்டு இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடரை வென்றமையும் குறிப்பிடத்தக்கது.

# ஒரே குடும்பத்தில் இரு சம்பியன்கள்




மேற்கிந்திய தீவுகளில் நடைபெற்று முடிந்த ஐ.சி.சி இளையோர் உலகக்கிண்ணத் தொடரில் இந்தியா சம்பியன் பட்டத்தை வென்றது. இறுதிப் போட்டியில் அபாரமாக செயற்பட்ட இளம் வீரர் ராஜ் பாவா 5 விக்கெட்டுகளை வீழ்த்தி இறுதிப் போட்டியில் 5 விக்கெட்களை வீழ்த்திய முதல் இந்திய பந்துவீச்சாளர் என்ற சாதனையையும் படைத்தார்.

ராஜ் பாவா இந்தியாவின் முன்னாள் கிரிக்கெட் வீரர் ரித்தீந்தர் சோதியின் குடும்பத் தைச் சேர்ந்தவராவார். கடந்த 2000ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற இளையோர் உலகக்கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியில் இந்தியா முதல் முறையாக சம்பியன் பட்டத்தை வென்று சரித்திரம் படைத்தது. அந்த உலகக்கிண்ண இறுதிப் போட்டியில் ரித்தீந்தர் சோதி 43 பந்துகளில் முக்கியமான 39 ஓட்டங்களை எடுத்து இந்தியாவின் வெற்றிக்கு வித்திட்டார்.

தற்போது அவரின் வழியில் ராஜ் பாவா சிறப்பாக செயற்பட்டு இந்தியாவின் வெற்றிக்கு பங்காற்றி ஆட்டநாயகன் விருது வென்றார். இதுபற்றி ரித்தீந்தர் சோதி தனது ட்விட்டரில் கூறியதாவது, “22 வருடங்களுக்கு முன்பு நீங்கள் செய்ததை தற்போது உங்கள் சாச்சாவின் மகன் செய்துள்ளமை ஒரு மிகச் சிறப்பான உணர்வை அளிக்கிறது. ஒரே குடும்பத்திலிருந்து 2 உலகக்கிண்ண இறுதி ஆட்டநாயகன் விருது வென்றவர்கள்“ என பெருமையுடன் பதிவிட்டுள்ளார்.

## விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com



# நடப்பு ஒலிம்பிக் சம்பியன் ஷிஃப்ரின் வெளியேற்றம்

(அக்ஷரா)

பீஜிங் குளிர்கால ஒலிம்பிக்கிலிருந்து நடப்பு ஒலிம்பிக் சம்பியனான மைக்கேலா ஷிஃப்ரின், இராட்சத ஸ்லாலோமின் முதல் ஓட்டத்தின் தொடக்கத்தில் தகுதி நீக்கம் செய்யப்பட்டார்.

இடதுபுறம் திரும்பி வாயிலைச் சுற்றிவர, கட்டுப்பாட்டை இழந்து சறுக்கி விழுந்ததால் தகுதி நீக்கம் செய்யப்பட்டார். 26 வயதான ஷிஃப்ரின், அமெரிக்காவைச் சேர்ந்த முதல் ஆல்பைன் ஸ்கை பந்தய வீராங்கனையாக மூன்று ஒலிம்பிக் தங்கங்களை வென்றார்.

குளிர்கால ஒலிம்பிக்கில் எந்த விளையாட்டிலும் அதிகம் எதிர்பார்க்கப்பட்ட விளையாட்டு வீராங்கனைகளில் ஒருவராக அவர் சீனாவுக்கு வந்தார். சமீபத்திய ஆண்டுகளில் நீண்டகாலமாக ஸ்கை பந்தயத்தில் ஆதிக்கம் செலுத்திய யான்கிங் ஆல்பைன் பனிச்சறுக்கு மையத்தில் ஐந்து தனிப்பட்ட போட்டிகளில் விளையாடவுள்ளார். அவரது அடுத்த பந்தயம் இன்று ஸ்லாலோம் ஆகும்.

2014 சோச்சி விளையாட்டுப் போட்டியில் ஷிஃப்ரின் 18 வயதில் வெற்றிபெற்றார். 3 ஒலிம்பிக் தங்கம், 11 உலக சம்பியன்ஷிப்பில் 73 வெற்றிகள், 3 உலகக் கிண்ண சம்பியன் பட்டம் வென்றுள்ளார் மைக்கேலா ஷிஃப்ரின்.

# வெற்றிக் கொண்டாட்டத்திற்காக தேசிய விடுமுறை



ஆபிரிக்க கிண்ண உதைபந்து தொடரில் செனகல் முதல் முறையாக சம்பியனான நிலையில், வெற்றியை கொண்டாட தேசிய விடுமுறை வழங்கப்படுவதாக அந்நாட்டு ஜனாதிபதி மேக்கி சால் அறிவித்துள்ளார்.

33ஆவது ஆபிரிக்க கிண்ண உதைபந்து தொடர் கேமரூன் நாட்டில் நடைபெற்றது. இறுதிப்போட்டியில் செனகல் - எகிப்து அணிகள் மோதின. விறுவிறுப்பான இந்தப் போட்டியில் 90 நிமிடங்கள் நடைபெற்ற முழு ஆட்டநேரத்தில் இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்கவில்லை. கூடுதலாக வழங்கப்பட்ட 30 நிமிட நேரத்திலும் இரு அணிகளும் கோல் அடிக்க முடியவில்லை. இதையடுத்து வெற்றி, தோல்வியை நிர்ணயிக்க “பெனால்டி ஷூட்-அவுட்“ முறை கடைப்பிடிக்கப்பட்டது.

இதில் செனகல் அணி 4-2 என்ற கோல் கணக்கில் எகிப்தை வீழ்த்தி முதல் முறையாக சம்பியன் பட்டம் வென்றது. ஆபிரிக்க கிண்ணத் தொடரில் 2002ஆம் ஆண்டு கெமரூனிடமும், 2019ஆம் ஆண்டு அல்ஜீரியாவிடமும் இறுதிப் போட்டியில் தோற்று சம்பியன் பட்டத்தை கோட்டை விட்ட செனகல் அணி, 2022ஆம் ஆண்டுக்கான தொடரில் முதல் முறையாக கிண்ணத்தை வென்று புதிய வரலாறு படைத்திருக்கிறது.

ஆபிரிக்க கிண்ணத் தொடரை செனகல் முதல் முறையாக வென்றுள்ள நிலையில், அந்நாட்டு மக்கள் வெற்றியை கொண்டாடி வருகின்றனர். இதையடுத்து வெற்றிக் கொண்டாட்டத்திற்காக சம்பளத்துடன் கூடிய தேசிய விடுமுறை வழங்கப்படுவதாக செனகல் ஜனாதிபதி மேக்கி சால் அறிவித்துள்ளார்.

# நியூசிலாந்துக்கு வரலாற்றில் முதல் தங்கம்



பீஜிங்கில் நடைபெற்றுவரும் குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் நியூசிலாந்து வீராங்கனை ஸோய் சடோவ்ஸ்கி தங்கப் பதக்கம் வென்று குளிர்கால ஒலிம்பிக் வரலாற்றில் நியூசிலாந்துக்கு முதல் தங்கப் பதக்கத்தை வென்றுகொடுத்தார்.

பெண்களுக்கான பலகைப் பனிச்சறுக்கின் ஸ்லூப்ஸ்டைல் இறுதிச் சுற்றில் அமெரிக்காவின் ஜூலியா மரினோவுடன் களமிறங்கி இவ்வாறு தங்கப் பதக்கம் வென்றார். 20 வயதான இளம் வீராங்கனை ஸோய் சடோவ்ஸ்கி போட்டியின் இறுதியில் மிக லாவகமாகக் குதித்து வெற்றியைக் கைப்பற்றினார். அது தமது வாழ்நாளில் செய்யப்பட்ட சிறந்த முயற்சி என்று வெற்றிப் பெருமிதத்துடன் கூறினார் சடோவ்ஸ்கி.

# மெண்டிஸுக்கு அவுஸ்திரேலியாவில் கொரோனா !

5 போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச கிரிக்கெட் தொடரில் விளையாடுவதற்காக ஆஸி. சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் இலங்கை கிரிக்கெட் அணியில் முன்னதாக சிலருக்கு கொரோனா தொற்று உறுதியான நிலையில், நேற்று சிட்னியில் விக்கெட்காப்பு துடுப்பாட்ட வீரர் குசல் மெண்டிஸுக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டது.

குசல் மெண்டிஸ் உடல் நலம் தேறாத சந்தர்ப்பத்தில், இலங்கை அணியின் விக்கெட் காப்பாளராக தினேஷ் சந்திமால் செயற்படுவார். இலங்கை அணி ஆஸி. புறப்படுவதற்கு முன்னர் சாமிக்க கருணாரத்ன, நுவான் துஸார ஆகியோருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டு தற்போது அவர்கள் இலங்கை அணியுடன் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இரு அணிகளுக்கிடையிலான இருபதுக்கு 20 சர்வதேச தொடரின் முதல் போட்டி நாளை மறுதினம் ஆரம்பமாகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சுதந்திர தின கிரிக்கெட் போட்டி கிண்ணத்தை கைப்பற்றியது மாவடி பேர்ல்ஸ்

(நூருல் ஹுதா)

இலங்கையின் 74ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இடம்பெற்ற நான்கு அணிகள் பங்குபற்றிய சுதந்திர தின கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் மாவடி லெஜன்ட் அணியை வீழ்த்தி மாவடி பேர்ல்ஸ் அணி சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.





காரைதீவு பிரதேச மாவடிப்பள்ளியிலுள்ள கழகங்களான மாவடி மிராக்கில்ஸ், மாவடி லெஜன்ட், புலு பேர்ட்ஸ் மற்றும் மாவடி பேர்ல்ஸ் ஆகிய 4 அணிகளைக்கொண்டு இடம்பெற்ற இச்சுதந்திர தின சுற்றுப் போட்டியின் சம்பியனாக மாவடி பேர்ல்ஸ் விளையாட்டுக் கழகம் தெரிவு செய்யப்பட்டதுடன், இரண்டாம் இடத்தைப் மாவடி லெஜன்ட் அணி பெற்றுக்கொண்டது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக மாவடி பேர்ல்ஸ் வீரர் முப்தி தெரிவு செய்யப்பட்டதுடன், தொடர் நாயகனாக மாவடி லெஜன்ட் வீரர் பர்ஷான் தெரிவு செய்யப்பட்டார். இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக கல்முனை அமினாஸ் ஜுவல்ரியின் உரிமையாளர் எ.ஆர்.எம்.கியாஸ் மற்றும் கௌரவ அதிதிகளாக காரைதீவு பிரதேச சபை உறுப்பினர்களான முஸ்தபா ஜலீல், எம்.என்.எம்.றணீஸ் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.




# பீஜிங் ஒலிம்பிக்கில் பணிவிடை செய்யும் ரொபோக்கள்

பீஜிங் ஒலிம்பிக்கில் அனைவரும் ஆச்சரியப்படும் வகையில் வீரர்கள் மற்றும் பங்கேற்பாளர்களுக்குப் பணிவிடை செய்ய ரொபோக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. பீஜிங் நகரவாசிகளிடமிருந்து ஒலிம்பிக்கில் பங்கேற்பவர்களுக்கு கொரோனா பரவிவிடக்கூடாது என்பதற்காக இந்த அமைப்பை சீன அரசு உருவாக்கி செயற்படுத்தி வருகிறது.

ஹோட்டல் ஊழியர்கள் நீக்கப்பட்டு அவர்களுக்கு பதிலாக ரொபோக்கள் பயன்படுத்தப்படுகின்றன.



வீரர்கள் தங்கள் அறைகளில் இருந்துகொண்டே உணவை பதிவுசெய்யும் வசதி உள்ளது. பதிவுசெய்த உணவை ரொபோ கொண்டுவந்து அவர்கள் தங்கியிருக்கும் அறையின் வாசலின் வெளியே வந்து நிற்கும். பின்னர் வீரர்கள் கதவை திறந்து, பின்-நம்பரை பதிவுசெய்த பின்பு, ரொபோ உணவை அவர்களிடம் அளித்துவிட்டு சென்றுவிடும்.

இந்த ரொபோக்கள், வீரர்களுக்கு காதில் மாட்டி பாட்டு கேட்கும் இயர்பாட்கள், உணவு உள்ளிட்ட பல பணிவிடைகளை மேற்கொள்கின்றன. ஏறத்தாழ 2 மாதங்கள் நடைபெறவுள்ள ஒலிம்பிக் மற்றும் பாராலிம்பிக் போட்டிகள் என இரண்டிற்கும் சேர்த்து ஒருங்கிணைந்த வளாகம் கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்த வளாகத்திலிருந்து வெளியே சென்று பொருட்களை வாங்கிக்கொண்டுவரும் வாகனங்கள் பயணிக்க சாலையில் தனி வழித்தடம் கொடுக்கப்பட்டுள்ளது.

அந்த வழித்தடத்தில் பிற வாகனங்கள் பயணிக்க அனுமதி இல்லை. ஒருவேளை, ஒலிம்பிக் சார்ந்த வாகனங்கள் அந்த வழித்தடத்தில் பயணிக்கும்போது விபத்து ஏற்பட்டாலும் கூட பொதுமக்கள் அவர்கள் அருகே செல்ல வேண்டாம் என்று கடுமையான கொரோனா கால கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளமை என்பது குறிப்பிடத்தக்கது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7